
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


CONNEMARA PUBLIC
3 - MAY 1962
MADRAS



கோதண்டராமர்

மாலை 4 ] சுபகிருது சித்திரை-மே 1962 [ மணி 8

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு



பார்வதி கல்யாணம்
(நியமம்—ஜெயங்கொண்டார் கோயில்)

## பொருளடக்கம்


1. முத்துசுவாமிதீக்ஷதர்
2. சிவஞானபோதம்
3. கடப்பேரி
4. ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை
5. திருஞானசம்பந்தர் திருமுறை
6. நியமம்கோயில் சிற்பங்கள்
7. திருவாவடுதுறைக்கல்வெட்டு வரலாறு
8. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
9. அச்சிறுபாக்கம்
10. மதுராந்தகம்
11. நால்வர் நன்னெறி
12. பெரும்பேறு

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] சுபகிருது சித்திரை - மே 1962 [மணி 8


# முத்துசுவாமி தீக்ஷதர்

நாதரூபியாகிய இறைவனை நாத உபாஸனையால் வழிபட்டு, நமது தென்னிந்திய ஸங்கீதத்திற்கே தனிச் சிறப்பாக உள்ள எண்ணற்ற கீர்த்தனங்களைக் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்துவைத்திருக்கும் நமது இசைப் பெரியோர்களின் பணி நாம் என்றும் போற்றத்தக்கது. அப்படிப்பட்ட பெரியோர்களில் "ஸங்கீத மும்மூர்த்திகள்" என்று சொல்லப்படும் "ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள்" ஸ்ரீமுத்து ஸ்வாமி தீக்ஷதர் "ஸ்ரீசியாமா சாஸ்திரி" இம்மூவரும் மிக முக்கியமானவர்கள். ஒவ்வொருவரும் தனிச்சிறப்புடன் ஏராளமான இசை வடிவங்களை அமைத்தருளியிருக்கிறார்கள்.

அவர்களுள் ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷதரவர்களின் தந்தையாகிய ஸ்ரீராமஸ்வாமி தீக்ஷதரவர்களும் சிறு வயதிலிருந்தே ஸங்கீதத்தில் ஈடுபட்டு, வீரபத்ரையர் என்ற வித்வானிடத்திலும், பிறகு "சதுர்தண்டிப்ரகாசிகை" என்ற இசையிலக்கண நூலை இயற்றியவரான "வேங்கடமகி"யின் பரம்பரையில் வந்த, வேங்கட வைத்யநாத தீக்ஷதர்" என்ற மகாவித்வானிடத்திலும் இசையை இலக்கண முறைவழுவாது நன்கு கற்றுத் தேர்ந்தவர். தற்காலத்தில் பிரபலமாக விளங்கிவரும் "ஹம்ஸத்வனி'. என்ற ராகத்தை அமைத்து அதைக் கையாண்டவர் ஸ்ரீராமஸ்வாமி தீக்ஷதர் அவர்களே. ஸ்ரீராமஸ்வாமி தீக்ஷதரவர்களும், ஸுப்புலெக்ஷ்மி அம்மாளுடன்' முறையாக இல்லறம் நடத்தி வைத்தீசுவரன் கோயிலில் தவமிருந்து ஸ்ரீமுத்துக்குமாரஸ்வாமியின் வரப்பிரஸாதத்தால் பிறந்த குழந்தை "முத்துஸ்வாமி" என்று பெயரிட்டு சீராட்டி வளர்த்து வந்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு சின்னஸ்வாமி(பாலாம்பாள்)பாலுஸ்வாமி' ஆகியோர் பிறந்தனர். முத்துஸ்வாமியும் சிறு வயதிலேயே தெலுங்கு, ஸம்மஸ்க்ருதம், சங்கீதம் இம்மூன்றையும் தன் தந்தையிடத்திலேயே நன்கு கற்ருர். தந்தையைப் போலவே வீணை வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்ருர். சிறுவயதிலேயே விவாகம் ஆகியிருந்தும், அவர் மனம் தெய்வபக்தியில் ஆழ்ந்து குடும்பவிவகாரங்களில் பற்றில்லாமலே வாழ்ந்து வந்தார். தந்தையாருடைய வீணைகானத்தில் ஈடுபட்டவள்ளல் 'மணலி சின்னையாமுதலியாரவர்களும்', அவர் குமாரர் 'வேங்கட கிருஷ்ண முதலியாரவர்களும்' ஸ்ரீதீக்ஷதரவர்கள் குடும்பத்தை மணலியில் வசிக்கச் செய்து மிக அன்புடன் ஆதரித்து வந்தார்கள். தந்தை ராமஸ்வாமி தீக்ஷதருக்கு மந்திரோபதேசம் செய்த ஸ்ரீசிதம்பரநாத யோகிகள், வாலிபரான முத்துஸ்வாமியின் பக்தியையும், மனப்பக்குவத்தையும், இசையறிவையும் கண்டு, அவரை மனைவியருடன் காசிக்கு அழைத்துச் சென்று, ஸ்ரீவித்யா மந்திரத்தையும், ஸங்கீதரக

சியங்களையும் உபதேசித்தார். தீக்ஷதர் காசியில் இந்துஸ்தானி ஸங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றார். இதற்கு அத்தாட்சியாக ஹமீர் கல்யாணியில் "பரிமளரங்க நாதம்" என்றும், யமுனா கல்யாணியில் 'ஜம்பூபதே' என்றும், பிருந்தாவன ஸாரங்காவில் ஸௌந்தரராஜம் என்றும் இன்னும் பல கீர்த்தனைகளிலும் அறிகிறோம். பிறகு, குருவாகிய சிதம்பரநாத யோகியாரின் அநுக்ரஹத்தால் மந்திர ஸித்தியடைந்த தீக்ஷதரவர்கள், அவருடைய உத்திரவுப்படி திருத்தணி சென்று முருகனைச்சிந்தித்துக்கொண்டேமலையேறும் பொழுது ஒரு முதியவர் எதிரில் வந்து 'முத்துஸ்வாமி, வாயைத்திற' என்று சொல்லி ஒரு கற்கண்டை வாயில் போட்டு அநுக்ரஹித்து மறைந்தாராம். அப்பொழுதே ஸ்ரீ தீக்ஷதரவர்களுக்கு ஆவேசம் ஏற்பட்டு "ஸ்ரீநாதாதி குருகுஹோ ஜயதி" என்ற மாயாமாளவ கௌளராகக் கீர்த்தனையைப் பாடினார்கள். அது முதல் ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று கடல் மடை திறந்தது போல்சிவனையும், விஷ்ணுவையும், அம்பிகையையும், விநாயகரையும், முருகனையும் மற்றும் எண்ணிறந்த பாமாலைகள் சூடிமகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ தீக்ஷதரவர்கள் திருவாரூர் க்ஷேத்திரத்தில் கமலாம்பாநவாவரணம் என்ற மந்திர உபாஸனா பூர்வமான கிருதிகளையும் ஸ்ரீத்யாகேசர்பேரில் ஏராளமான கிருதிகளையும், நவக்கிரஹ கிருதிகளையும், பஞ்சலிங்க கிருதிகளையும், இன்னும் ஏராளமான கிருதிகளையும் செய்தருளியிருக்கிறார்கள். அவைகளின் அர்த்த பாவங்களை உணர்ந்து, அவர்கள் நமக்கு அமைத்துத் தந்திருக்கும் வழிப்படியே பின்பற்றி பாடி வருவது நாம் செய்த பாக்யமாகும். ஸ்ரீ தீக்ஷதரவர்களின் பூதவுடல் மறைந்து இன்று நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டாலும், அவருடைய ஆத்மா அவர் அமைத்த இசைவடிவமாக என்றென்றும் நம் இசையுலகில் வாழ்ந்து வரும் என்பது திண்ணம்.

இப்படிப்பட்ட ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷதரவர்கள் ஜயந்திவிழாவை, அவருக்கு ஸ்ரீமுருகன் அருள் ஏற்பட்டதலமாகிய திருத்தணியில் இந்த ஆண்டு முதல் நடத்தத் தீர்மானித்தார்கள். அவ்வாறே 8, 9, 10—4—62 மூன்று நாட்களிலும் விழா நடைபெற்றது. அறநிலைய அமைச்சர் முன்னிலையில், டாக்டர் இராகவன் அவர்கள் தலைமையில் ஆலயநிர்வாகிகளும் ஏனையோரும் தீக்ஷதர் விழாவை மிகச் சிறந்த முறையில் நடத்தி வைத்தது மிகவும் போற்றற்குரியது. இசைப் பேராசிரியர் திரு. P. சாம்பமூர்த்தி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

---

**திருப்பேரூர்:**—காலவேசுவரசுவாமி கோயிலில் சித்திரை பிரம்மோற்சவம் 16-4-62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**திருப்பனந்தாள்:**—ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 274-ஆம் ஆண்டு மகேசுவர பூஜை 22—5—62ல் நடைபெறும்.

**அயிலூர்:**—வாலிசுவரசுவாமி கோயிலில் சித்ரா பௌர்ணமி உற்சவம் 18—4—62ல் நடைபெற்றது.

**பேரூர்:** பட்டீசுவரர் கோயிலில் திருநாவுக்கரசு நாயனர் குருபூஜை விழா 29—4—62ல் நடைபெற்றது.

**மதுரை:**—மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா 27, 28, 29—4—62 தேதிகளில் நடைபெற்றது.

**திருவதிகை:**—திருநாவுக்கரசு சுவாமிகள் மகோற்சவம் 20—4—62 முதல் 29—4—62 வரை நடைபெற்றது.

**கீழப்பெருமழை:**—ஆத்துமநாதசுவாமி கோயிலில் சித்ரா பருவ உற்சவம் 9—4—62ல் நடைபெற்றது.

# சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

பற்றின்றித் தானேயாய் விளங்கும் முதற்பொருள் உயிர்களோடு அவையே தானேயாய் உடனாய் நிற்கும் நிலையில் சத்தி எனப் பெயர் பெறும். அங்ஙனம் சத்தியாய் நின்று, உயிர்கள் தாம்செய்த இருவினைக்கு ஈடாகப் பிறந்தும் இறந்தும் வரும்படி தொழிற்படுத்தும் நிலையில் பதி எனப்படும். முதல்வன் சத்தியாய் நிற்குமாறும், அச்சத்தியின் வழி உயிர்கள் செய்யும் இருவினைகள் காரியப்படுமாறும், அவ்வினைகளுக்கு ஏற்றபடி உயிர்கள் அச்சு மாறிப் பிறந்தும் இறந்தும் வருமாறும் முன்னைய அதிகரணங்களில் விளக்கப்பட்டன. இவ்வதிகரணத்தில் சத்திக்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மியசம்பந்தம் (ஒருமையின் இருமை) என்பது உணர்த்தப் படுகின்றது.

### 1. சூத்திரத்தின் நான்காம் கூறு:

'ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே'

—என்பது

[முதல்வன் (மேலே கூறியபடி உயிர்கள் பிறந்திருந்து உழலுதற்குக் காரணமாய்த்) தனது ஆணை எனப்படும் சிற்சத்தியோடு தாதன்யமாய் நிற்பன் என்றபடி.]

ஆணை-சிற்சத்தி; நீக்கமின்றி நிற்றல் ஒன்றே வேறே எனக் கூறப்படாதபடி குணகுணியாயியைந்து, தாதான்யமாய் நிற்றல். தாதான்மியம் என்னும் சொல்லின் இயல்பு, தத் ஆன்மியம் எனப் பிரிந்து, அதுதான் ஆதல் என உரைக்கப்படுவது. ஒரு பொருளே சினையும் முதலுமாகவோ, பண்பும் பண்பியுமாகவோ பிரித்துணரப்பட்டு ஒரு வகையால் இரண்டு என வழங்குதற்கு ஏதுவாயுள்ள சம்பந்தமே தாதான்மியம் எனப்படுவது; அஃதாவது ஒருமையின் இருமை. இதனைத் தார்க்கிகர் சமவாய சம்பந்தம் என்பர்.

சூத்திரத்தின் இந் நான்காம் கூற்றை வடமொழிச் சூத்திரம் 'ஆஜ்ஞயா சமவேதயா' (சமவேதையாகிய ஆணையினால்) எனச்சொற் செய்கின்றது.

இச் சூத்திரக் கூற்றுக்கு மூலமாகவுள்ள தமிழ் மறைப் பகுதிகளுட் சில:—

1. ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்."

—திருமந்திரம்.

2. "ஒருருவாயினை மான் ஆங்காரத்து ஈரியல்பாய்."

—திருஞானசம்பந்தர்.

3. "உமையலால் உருவமில்லை"

—திருநாவுக்கரசர்

இவ்வதிகரணப் பொருள்கள் பயப்பனவாய்ச் சுவேதா சுவதர உப நிடதத்தில் வரும் இரு மந்திரங்கள் பின் காட்டப்படுவன:—

1. ஏகோ ஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்துர்
ய இமாங் லோகாங் ஈசத ஈசனீபி;"

—4-2.

[எவன் இவ்வுலகங்களைத் தன் ஆளும் ஆற்றல்களால் ஆளுகின்றானோ அவன் ஒருவனே உருத்திரன்; இரண்டாவதாக நின்றான் அல்லன்.]

2. "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே
ஸ்வாபாவிகீ ஞானப் பலக்ரியா ச"

—6-8.

[அவனது இயற்கையாகிய பராசக்தி (மூன்றே) ஞான (சத்தி), இச்சா (சத்தி), கிரியா (சத்தி) எனப் பலவாகக் கேட்கப்படுகின்றது ]

### 2. வார்த்திகம்:—

இனி நீக்கமின்றி நிற்கும் அன்றே என்றது, அவன் ஏகாநேகம் இரண்டுமின்றிச் சருவ வியாபியாய் நிற்றலான்.

#### (அ) இங்குத் தன்னாற் கூறப்படும் பொருள்:

முதல்வன், தானும் தன் சக்தியும் எனத் தன்கண் இருதன்மை தோன்றும்படி நிற்கும் ஒருவனே ஆவன்; அதாவது, முதல்வன் தனது ஆணையெனப்படும் சத்தியின் வேறாதலின்றித் தாதான்யமாய் நிற்பன் என்றபடி.

**(ஆ) இதன்கண் ஐயப்பாடு:**

ஆணை எனப்படும் சத்தி முதல்வனின் வேறோ அன்றோ என்பது.

**(இ) இதற்குப் பிறர்கூறும் பக்கம்:**

(i) பொருள்களின் சக்தி பொருள்களுக்கு வேறாய தொன்று; ஆதலால், முதல்வனும் வேறே, அவன்றன் சக்தியும் வேறே: இங்ஙனம் கூறுவோர் மீமாஞ்சகர், சாக்தேயர் முதலியோர்.

(ii) பொருளுக்கு வேறாகச் சத்தி என்வேறின்று; ஆதலால், சத்தி முதல்வனின் வேறன்று: இங்ஙனம் உரைப்போர் தார்க்கிகர் முதலாயினோர்.

**(ஈ) இவற்றை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:—**

இச் சூத்திரத்தின் முதல் அதிகரணத்தால், முதல்வன் வியாபகன் என்னும் கருத்து நிறுவப்பட்டது. வியாபகன் பொருட்கு ஒன்றாய் நிற்றல் கூடாது. சென்னையில் உள்ள ஒருவர், அதே காலத்தில் காஞ்சியிலும் இருக்க மாட்டார். அது போல ஒரு பொருள் ஓரிடத்தில்தான் இருக்க வல்லதே யன்றி யாங்கணும் நிற்க மாட்டாது. ஆதலால் முதல்வன் ஒருவன் அல்லன். இனி, இக்காரணம் பற்றி, முதல்வனை இரண்டாய் நிற்பன் என்றால், அவன் வியாபகன் ஆதல் கூடாது; என் எனின், தன் மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின்கண் வேற்றுமையின்றிக் கலந்து நிற்றல் நிரம்பாது. இவ்விரண்டும் முரணுதலின், முதல்வனை வியாபகன் அல்லன் எனலாமோ எனின், அது முன் நிறுவிய துணிபை மறுப்பதாகின்றது. பசு பாசங்கள் முதல்வனையின்றி அமைந்து தொழிற்படா என்பது முன்னர்ப் பெறப்பட்ட முடிவு. இங்ஙனம் ஆயின், வேறு விடுக்குமாறு என்னையோ எனின், காந்தம், தானும் தன் சத்தியும் என இருதிறப்பட்டு இயைந்து நின்று இரும்பைத் தன் வயப்படுத்து நடாத்துதல் போல, ஞாயிறு, தானும் ஒளியும் என இருதிறப்பட்டு இயைந்து நின்று எங்கும் வியாபித்தல் போல, முதல்வனும் தானும் தன் சத்தியும் எனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய் நின்பன் என்பதே முடிந்த முடிபாகும்.

ஞாயிறு ஒன்றே பிறபொருள்களை விளக்கும் போது கதிர் (ஒளி) எனவும், தன்னை விளக்கும் போது கதிரோன் எனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு இயைந்து நிற்கும். அதுபோல, முதல்வன் ஒருவனே புறப்பொருளை நோக்கி நின்று உணர்த்தும் நிலையில் சத்தி எனவும், புறப்பொருளை நோக்காது அறிவு அளவாய்த் தன்னை மட்டும் காட்டி நிற்கும் நிலையில் சத்திமான் அல்லது சிவம் எனவும் பெயர் பெற்று, தாதான்மியத்தால் இருதிறப்பட்டு இயைந்து நிற்பன் என உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இக் கருத்தைக் கொண்டுள்ள உதாரணச் செய்யுள் வருமாறு:—

எங்குமுளன் என்றளவை ஒன்றன்(று);
இரண்டெனனின்,
எங்கும் உளன் அன்று: எவற்றெவனும்—
அங்கண்
அவை அவன் அன்றில்லைப் பொன் ஒளிபோல்
ஈசன்
அவையுடைமை ஆளாம் நாம் அங்கு.

இவ் வெண்பாவின் ஈற்றடி மேலே கூறிய கருத்துப்பற்றி வரக் கூடிய ஓர் ஐயுறவினை நீக்குகின்றது. பசு பாசங்களும் வியாபகம் உடையன; ஆதலால், அவை தாமும் முதல்வன் போலத் தாமும் தம் சத்தியும் எனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்கும் என்பது போதரும். போதர அவை அதுபற்றி முதல்வனோடு சமம் எனப்படுமோ எனின், சமம் எனப்படா. அவை முதல்வனது பெருநிறைவில் அடங்கிய நிறைவே உடையவை ஆகும்; அவற்றுள் பாசம் முதல்வனுக்கு உடைமை (அவை உடைமை), பசுக்களாகிய உயிர்கள் அவனுக்கு எப்போதும் மீளா அடிமைகள் (ஆள் ஆம் நாம் அங்கு) ஆகும் என்பது கருத்து.

"மீளா அடிமை உமக்கே ஆளாய்" எனும் நம்பியாரூரர் திருவாக்கும்,

"பாய ஆருயிர் முழுவதும் பசுபதி அடிமை
ஆய எவ்வகைப் பொருள்களும் அவனுடைப்
பொருள்கள்
மேய இவ்வண்ணம் அலதுவே றின்றென
உணர்ந்த
தூய மெய்த்தவத் தடியவர் துணையடி
தொழுவாம்"

என்னும் தணிகைப் புராணச் செய்யுளும் ஈண்டு உடன் எண்ணுதற்கு உரியன.

"முதல்வன், ஒன்றாதலும் இரண்டாதலும் இன்றி, தானும் தன் சக்தியும் எனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு நிற்பன்-மேற்கோள்;

சருவவியாபியாதலின்—ஏது
யாது யாது சருவ வியாவியோ அது அது

ஏகாநேகம் இரண்டுமின்றித் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு நிற்கும்-வியாத்தி வசனம்;

ஞாயிறு போல—எடுத்துக்காட்டு"

என இவ்வதிகரணப்பொருளைக் கருதல் அளவையாக வைத்து உணர்த்துதல் ஆசிரியர் கருத்தாதல் காண்க.

இனி ஞாயிற்றின் சத்தி ஒன்றே தன் செயல் வேறுபட்டால், ஒளி, வெப்பம் முதலாகப் பலவகைப் படுத்து உணரப்படும். அங்ஙனமே, முதல்வன் சத்தியும் ஒன்றேயாயினும், அதன் செயல் வேறு பாட்டால்,

பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஐந்தாகவும்,

ஐம்பெருமனுக்களுக்குரிய முறையே ஐந்தும், நான்கும், எட்டும், பதின் மூன்றும், எட்டும் எனப்படும் முப்பத்தெட்டாகவும்,

ஆரிணி, சனனி, ரோதயித்திரி எனமுத்தொழிற்குரிய மூன்றாகவும்.

இன்னும் பலவாகவும் வழங்கப்படும் எனக் கொள்க.

சக்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதானாகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி ஆகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சித்தி ஒருத்தி ஆகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்

—சிவஞானசித்தி.

இவ்வதிகரணப்பொருள் பிரம சூத்திரம் முதல் அத்தியாயம் இரண்டாம் பாதத் தொடக்கத்தில் வருதல் அறியத் தக்கது.

## இரண்டாஞ் சூத்திரத் தொகைப் பொருள்:—

1. முதல்வன் உயிர்களோடு, மாயாவாதிகள் கூறுமாறு பொன்னும் பணியும் போல அபேதம் ஆதல் இன்றி, உடலும் உயிரும்போல ஒன்றாயும், மத்துவர் கூறுமாறு இருளும் ஒளியும் போலப் பேத மாதலின்றி, கண்ணின் காணுந்திறனும் ஞாயிற்றின் ஒளியும் போல வேறாயும், பாஞ்சாரத்திரிகள் கூறுமாறு சொல்லும் பொருளும் போலப் பேதா பேதமாகாது, ஆத்ம போதமும் கண்ணொளியும் போல உடனாயும் நிற்பர்: முதல்வன் சருவ வியாபகன் என்பதற்கு இதுவே கருத்து.

ஆன்மாக்கள் இறந்தும் பிறந்தும் வருதற்குக் காரணமாகத் தனது ஆணை யெனப்படும் சிற்சித்தியால் இருவினைப் பயனை ஊட்டுபவன் முதல்வனே. உயிர்கள் ஆயுள் முடிவில் பருவுடலை நீத்தவுடன், புரியட்டவுடலோடு பூதசார முதலிய உடல் எடுத்துத் துறக்க முதலியவற்றிற் றோன்றி இன்பமுதலியவற்றை நுகர்ந்து எஞ்சி நின்ற வினைப் பகுதியால் நுண் உடல் மட்டும் கொண்டு மனம் முதல்வன் ஆணையாற்றால் செலுத்துதலால் மக்கள் முதலிய பிறவிக்கு அமைந்த கருவிலே பட்டு மீளவும் பிறக்கும்.

முதல்வன் ஒருவனே சிவமும் சத்தியுமாய்த் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுப் பொதுமையில் நின்று எவ்விடத்து எவ்வகைப் பொருளும் தன் ஆணைவழி நடக்கச் செய்வன்.

இரண்டாஞ் சூத்திரம் மூற்றிற்று.

(தொடரும்)

---

வலிவலம்:—இருதயகமலநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவத்தில் 14—4—62 முதல் 19—4—62 வரை சமயற்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

திருச்செந்தூர்:—சுப்பிரமணியசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெறும்.

மேல்வீரராகவபுரம்:—வரதராஜப்பெருமாள் கோயிலில் சித்திரை பிரம்மோற்சவம் 18—4—62 முதல் 27—4—62 வரை நடைபெற்றது.


திருநீர்மலை:—ரெங்கநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19—4—62 முதல் 29—4—62 வரை நடைபெற்றது.

# கடப்பேரி

## (வெண்காட்டீசவரர் கோயில்)

மதுராந்தகத்தில் கோதண்டராமர் கோயில் சிறப்புடன் விளங்குகிறது. அவ்வூரின் கிழக்குப்பகுதியே கடப்பேரி என்பது. இங்கே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் ஒன்று இருக்கிறது. மதுராந்தகம் இருப்புப்பாதை நிலையத்துக்கு அண்மையில் உள்ளது. கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கோயிலின் வாயில்மேல் ஐந்து மாடக்கோபுரம் ஒன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. கோபுரவாயிலுக் கெதிரில் திருக்குளம் ஒன்று இருக்கிறது. கோபுரவாயிலைக்கடந்து உள் சென்று வெளிப்பிரகாரத்தையடைகிறோம். வலதுபுறம் வடகிழக்கு மூலையில் உற்சவ மண்டபம் இருக்கிறது. பலிபீடம், கொடிமரம், நந்தி இவைகள் சந்நிதிக்கு நேரே உள்ளன. பிறகு முன் மண்டபம் காணப்படுகிறது. அதன் வடபுறத்தில் தெற்கு நோக்கி அம்பிகை சந்நிதி இருக்கிறது. தேவியின் திருநாமம் மீனுட்சி என்பது. இந்த மண்டபத்திலேயே பாண்டீசுவரர் என்ற பெரிய இலிங்கம் இருக்கிறது. மண்டபத்தைத்தாண்டி உள்ளே சென்றால் இறைவன் சந்நிதி யடையலாம். கிழக்கு நோக்கி சிவலிங்கமூர்த்தி மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கிறார். இறைவன் திருப்பெயர்கள் வெண்காட்டீசர், சுவேதாரண்யேசுவரர் என்பன. தஞ்சைமாவட்டத்தில் காவிரிப்பூம்பட்டினத்தருகிலுள்ள பாடல்பெற்ற பதியான திருவெண்காட்டுப் பெருமானுக்கும் இதே பெயர்கள் உள்ளன என்பது ஈண்டு குறிக்கத்தக்கது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி உட்பிரகாரம் ஒன்று இருக்கிறது. அதின்மேற்குப் பிரகாரத்தில் விநாயகர்,ஆறுமுகசுவாமி இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் நிர்த்தன கணபதி சந்நிதி இருக்கிறது.

இந்த கோயிலுக்கு முன்னுள்ள திருக்குளத்தை விஷஹரதீர்த்தம் என்று கூறுகின்றனர். பாண்டியமன்னன் ஒருவனும் அவன் நாயும் வெண்குஷ்ட நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர். அவன் தீர்த்த யாத்திரையாக வரும்போது இக்குளத்தில் அவன் நாய்முழுகி நல்லுடம்பு பெற்றது. பாண்டியனும் அவ்வாறே செய்து அவன் குஷ்ட நோயினின்றும் நீங்கினன். அவன் பிரதிஷ்டை செய்த பெரிய இலிங்கமே 'பாண்டீசுவரர்' என்று வழங்கப்படுகிறது. இத்தலவிருட்சம் பலா. இது வெளிப்பிரகாரத்தின் தென் கிழக்கு மூலையில் இருக்கிறது. கோயிலில் நாள் தோறும் நாலுகால பூசை நிகழ்கிறது.



இராஜகோபுரம்

இக்கோயிலைப்பற்றிய புராண நூல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அருணகிரிநாதர் அருளிய "மனைமாண்சுதர்" என்று தொடங்கும் திருப்புகழ்ப் பாடலில் "மதுராந்தக மாநகரம் திகழ் முருகாந்திர மோடமரும்பர்கள் தம்பிரானே" என்று கூறப்பட்டிருக்கிறது. இப்பாடலில் கூறப்படும் முருகன் கடப்பேரி வெண்காட்டீசர் கோயிலிலுள்ள அறுமுகனையே குறிக்கும் என்பர்.

உத்தம சோழனுன மதுராந்தகசோழன் காலத்தில் இவ்வூர்ப் பெயர் ஏற்பட்டது. அவ்வரசன் பத்தாம் நூற்றுண்டின் இறுதியில்



ஆட்சிபுரிந்தான். ஆதலின் இக்கோயில் அவனுக்கு முற்பட்ட பழைய கோயிலாக இருக்க வேண்டும். கோயிலின் முன் மண்டபத்தை **சிந்தாமணி** என்னும் கணிகைமாது கட்டியதாகக் கூறப்படுகிறது. அவ்வம்மையின் உருவம் மண்டபக் கிழக்கு வரிசைத் தூண்களில் முதல் தூணில் காணப்படுகிறது. கோயிலில் பல அற்புத சிற்ப வேலைப்பாடுடைய திருவுருவங்கள் இருக்கின்றன. சந்தான பைரவர், காலபைரவர், மார்த்தாண்டபைரவர், கங்காளமூர்த்தி இவர்களின் சிலைகள் மிகவும் அழகு வாய்ந்தவை. ஆறுமுகன் சூரமயில் வாகனத்திலிருப்பது தனிச்சிறப்புடையது. மயிலின் தலை இடது பக்கமாக இருப்பதைச் சூரமயில் என்பர்.

வெண்காட்டீசர் கோயிலிலிருந்து 1896-ஆம் ஆண்டில் பத்து தமிழ்க் கல்வெட்டுக்களை அரசாங்கத்தார் படியெடுத்திருக்கின்றனர். அவை 129 முதல் 138 வரையுள்ள எண்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. இரண்டாவது பிரகாரத்தின் கிழக்குச்சுவரின் வெளிப்புறம் வாயிலுக்கு வடக்கேயிருக்கிறது. கோராஜகேசரி வர்மனை இராஜாதிராஜசோழன் (கி. பி. 1018-52) காலத்தது. கோயிலுக்குப் பொருள் வழங்கியதைக் கூறுகிறது.

2. இதே இடத்தில் சிதைந்துபோன கல்வெட்டு. மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவன சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவன் (மூன்றும் குலோத்துங்கன்) காலத்தது.

3. அதே இடத்தில், திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்கசோழ தேவனின் 16-ஆவது ஆட்சியாண்டில் விளக்கு தானம் செய்தது.

4. அதே சுவரில் வாயிலுக்கு இடது பக்கம் உள்ளது. கோபரகேசரி வர்மரான இரண்டாம் இராஜராஜ தேவரின் (கி. பி. 1146-78) ஒன்பதாவது ஆட்சியாண்டில் நிலம் வழங்கியது.

5. அதே பிரகாரத்தின் தென்சுவர் உள் பக்கத்திலிருப்பது. விஜயநகர வேந்தரான தேவராயர் காலத்தில் சாலிவாகன சகம் 1370 (கி. பி. 1448) ல் கருங்குழி என்ற கிராமத்தைக் கோயிலுக்கு மானியமாக விட்டது.

6. அதே பிரகாரத்தின் கிழக்கு உள்புறம் இருப்பது. கோமாறவர்மன் என்ற முதலாம் குலசேகர பாண்டியனின் (கி. பி. 1268-1348) நாற்பதாவது ஆட்சியாண்டில் கோயிலிலுள்ள இரண்டு திருவுருவங்களுக்கு நிலதானம் செய்தது.

7. கர்ப்பக்கிரகக் கிழக்குச் சுவரில் வாயிலுக்கு வலது பக்கம் உள்ளது. கோராஜகேசரிவர்மனை முதலாம் குலோத்துங்கனின் 29-ஆவது ஆட்சியாண்டில் விளக்கு தானம் செய்தது.

8. அதே சுவரில் வாயிலுக்கு இடது புறம் இருப்பது. முதலாம் குலோத்துங்க சோழனின் 35-வது ஆட்சியாண்டில் ஒரு விளக்கு கொடுத்தது.

9. தெற்குக் கர்ப்பக்கிரகச் சுவரில் இருப்பது. குலோத்துங்க சோழனின் ஆரு

வது ஆட்சியாண்டில் ஒரு நிலத்தை ஒற்றி வைத்தது.

10. வடக்கு, மேற்கு, தெற்கு கர்ப்பக் கிரகச்சுவரில் காணப்படுவது. கோராஜகேசரி வர்மரான குலோத்துங்கசோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டில் நிலம் வழங்கியது. சேனை அதிகாரி ஒருவரால் கோயில் கட்டப் பெற்றதைக் குறிக்கிறது.

---

**பனப்பாக்கம்:**—மாயூரநாதேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 8—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**திருநெல்வேலி:**—பிள்ளையன் கட்டளைகள் சார்பில் விக்கிரமசிங்கபுரம் செவந்தியப்பர் கோயிலில் சமயச் சொற்பொழிவுகள் 8—4—62 முதல் 14—4—62 வரை நடைபெற்றன.

**திருநெல்லிக்காவல்:**—நெல்லிவனநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

**எடித்தணிவயல்:**—பஞ்சாட்சர விநாயகப்பெருமாள் கோயிலில் இலட்சார்ச்சனை பூர்த்திவிழா 7—4—62-ல் முடிவுற்றது.

**ஸ்ரீமுஷ்ணம்:**—பூவராகசுவாமி கோயிலில் சைத்திர பிரம்மோற்சவம் 11—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

**திண்டிவனம்:**—திந்திரிணீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

**திருவெண்காடு:**—சுவேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் திருமுறை அர்ச்சனை விழா 19—4—62ல் தஞ்சை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர் எம். ஏ, அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

**சென்னை:**—அரங்கநாதசுவாமி கோயிலில் உள்ள பாஷ்யகாரசுவாமிக்கு சைத்ரோற்சவம் 29—4—62 முதல் 9—5—62 வரை நடைபெறும்.

**பழனி:**—தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் சித்ரா பௌர்ணமி உற்சவத்தில் 19—4—62ல் வெள்ளி ரதத்தில் நகர்வீதிகளில் திருவுலாக் காட்சியும் 20—4—62 மலையின் மீது தங்கமயில் வாகனத்திலும் தங்கரதத்திலும் திருவுலாக்காட்சியும் நடைபெற்றன. இலட்சுமி நாராயணப்பெருமாளுக்கு சித்திரை உற்சவம் 10—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

**கும்பகோணம்:**—ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலில் சப்தஸ்தான உற்சவம் 19—4—62ல் நடைபெற்றது.

**பொன்னேரி:**—திருஆயர்பாடி ஸ்ரீகரிகிருஷ்ணப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 17—4—62 முதல் 28—4—62 வரை நடைபெற்றது.

**கீழையூர்:**—அரங்கநாதப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 19—4—62 வரை நடைபெற்றது.

**திருவொற்றியூர்:**—வான்மீகநாதசுவாமி கோயிலில் சைத்ரோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**சென்னை:**—சென்னகேசவப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 18—4—62 முதல் 28—4—62 வரை நடைபெற்றது.

**சென்னை;**—கந்தகோட்டம் கந்தசுவாமி கோயில் வசந்தோற்சவம் ஷை வசந்த மண்டபத்தில் 9—5—62 முதல் 27—5—62 வரை நடைபெறும். அதுசமயம் தினம் மாலை 6 மணி முதல் 8 மணி வரை கூனம்பட்டி திரு. ந. சரவண மாணிக்கவாசக சுவாமிகள் அவர்களால் பெரியபுராணம் விரிவுரையும் நடைபெறும். முதல்நாள் விழாவில் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், சென்னை துணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் சுகாதார அமைச்சர் திருமதி. ஜோதிவெங்கடாசலம் ஆகியோர்கள் கலந்துகொள்வார்கள்.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L. திருநெல்வேலி]

அரசாங்கப் பல்லக்கு விருதுகளோடு வந்து நிற்பதைக்கண்ட குரு பிரமிப்படைந்து யமுனைத்துறைவரை நோக்கினார். யமுனைத் துறைவர் நடந்தவற்றை எல்லாம் கூறி "ஆக்கியாழ்வானுடன் வாதம் செய்யுமாறு அழைப்புவந்திருக்கிறது. இனி அதை நாம் ஏற்றுச் சென்று வாதம் செய்ய வேண்டியது தான்" என்று பதிலிறுத்தார். குருவோ மிக வும் மனக்கிலேசமடைந்தவராய் "துறைவா! என்னபடபடப்பான காரியம் செய்துவிட் டாய். அவன் பெரிய வல்லாள கண்டனா யிற்றே. குயுக்திகளில் வல்ல அவனோடு யார் வாதம் செய்ய முடியும். என்னால் அவன் முன் நிற்கவும் முடியாதே" என்று அங்க லாய்த்தார். யமுனைத்துறைவர் சற்றும் கலக்கமின்றி "ஸ்வாமி! என்ன தாங்கள் இப்படிக் கவலைப்படுகிறீர்கள்! தங்களைப் போகவேண்டுமென்று யார் சொன்னது?" என்றார். குரு பின் அவனோடு வாதுக்குச் செல்வதற்கு யார் இருக்கிறார்கள் என்று கேட்க யமுனைத்துறைவர் குருவின் திருவடி களில் வீழ்ந்து வணங்கி "ஸ்வாமீ! அடியேனை அனுப்புங்கள்" என்று வேண்டினார். குரு வியப்பெய்தி 'துறைவா! நீயா! சிறுபிள்ளை நீ, அவன் வாதம், செய்து தேர்ந்தவன் நீ எப்படி யப்பா அவனோடு வாதிட முடியும்? என்று கவலைதோன்றக் கேட்க, யமுனைத் துறைவர் "ஸ்வாமீ பெருமாள் க்ருபையும் தேவரீர் ஆசீர்வாதமும் இருக்குமானால் இந்த ஆக்கி யாழ்வான் மட்டுமென்ன? எத்தனைபேர் வந் தாலும் அடியேனால் வெல்லமுடியும். அடி யேனை ஆசீர்வதித்து அனுப்புங்கள்" என்று கைகுவித்து வேண்டினார். குருவும் தன் சீடரின் திடசித்தத்தையும், அவர் முகக்காந்தி யையும் நோக்கி மனம் தெளிந்தவராய் அவரை வெற்றியோடு வருவாய் என்று வாழ்த்தியருளினார். குருவின் ஆசிபெற்ற யமுனைத்துறைவர் மேலும் ஊக்கம் கொண்ட வராய்க் கம்பீரமாகச் சென்று பல்லக்கில் ஏறி யருளலும் பல்லக்கு அரசன் கோயில் நோக் கிச் சென்றது.

பல்லக்கை அனுப்பிய அரசன் தன் தேவியிடம் அச்செய்தியை அறிவித்தான். நம் வித்வானோடு வாதிடத் துணிந்த வித்வான் யாராயிருக்கும் என்று அறிய ஆர்வமுற்றவர் களாய் அரசனும் அரசியும் உப்பரிகையிலே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். பல்லக் கும் கீழே வீதியோடு சென்றது. அதில் அமர்ந்திருந்த சிறுபிள்ளையை இருவருமே நோக்கினர். பல்லக்கு கோயிலைக் கடந்து விட்டது. அரசன் உடனே கைகொட்டி வயிறுகுலுங்கச் சிரித்து தேவியை நோக்கி 'தேவீ! வித்வானைப் பார்த்தாயா! பச்சைக் குழந்தை இதனை நம் வித்வானோடு வாதம் செய்ய அனுப்பியவர் வேண்டுமென்றே குறும்பாகச் செய்திருக்கவேண்டும். இக் குழந்தையால் நம் அவை வித்வானோடு வாதம் செய்ய முடியுமா? நீயே சொல்!" என்று நகையாடினான். ஆனால் அரசியின் முகம் எவ்வித சலனமுமின்றி சாந்தம் நிறைந்திருந் தது. அவள் தன் நாயகனை நோக்கி 'ஸ்வாமீ! இதில் சிரிப்புக்கென்னவிருக்கிறது. அந்தப் பிள்ளையை நான் கூர்ந்து கவனித்தேன். அவன் முகத்தில் ஸரஸ்வதி தாண்டவம் புரி கின்றாள். அவனுடையதேஜஸ்ஸை நோக் கினால் அவன் நம் வித்வானை மட்டுமன்று அவருக்கு மேற்பட்டாரையும் வெல்லத்தக்க வன் என்று என் உள்ளம் கூறுகிறது. இது வெறும் குழந்தையல்ல. ஏதோ தெய்வாம்சம் பெற்றதாகத்தான் எனக்குப் படுகிறது. ஆகவே தாங்கள் அவ்விளம் வித்வானை ஏளனம் செய்து அபசாரப்படக்கூடாது' என்று பதில் கூறினாள். இப்படியே இரு வரும் மாறிமாறி எதிர்த்துப் பேசி கடைசி யில் அரசி 'இவ்விளம் வித்வான் தோற்றரா கில் நான் தங்கள் தாதிக்கும் தாதியாய்ப் பணி செய்வேன் என்று சூளுரைக்க அரசனும் பதிலுக்கு 'இவன் நம் வித்வானை வென்று னாகில் என் நாட்டின் பாதியை அவனுக்களிக் கிறேன் என்று பிரதிக்ஞை செய்தான். தேவி தர்க்கம் நடப்பதைத் தானும் பார்க்க வேண்டுமென்றும் தம் இருவருக்குள்ளும் நடந்த ஒப்பந்தம் இரகசியமாகவே இருக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டாள் அரசனும் சரியென்று போனான்.

யமுனைத்துறைவரைத் தாங்கிச் சென்ற பல்லக்கு அரண்மனை வாயிலை அடைந்தது; அங்கே ஆக்கியாழ்வான் தன்னை எதிர்க்க வரும் வித்வானைக் காணவென்று தருக்கோடு நின்றுகொண்டிருந்தான். பல்லக்கிலிருந்து யமுனைத்துறைவர் மட்டுமே இறங்கியதைக் கண்ட அவன் செருக்கு இன்னும் அதிகமாகியது. தன்னை எதிர்க்க வந்தது இந்த இளம் பிள்ளையா என்று ஒரு ஆக்ரோஷமும் பொங்கியது. உடனே அவன் யமுனைத்துறைவரை நோக்கி, "பிள்ளாய்! வா! நீதானா நம்மோடு தர்க்கிக்குமாறு வந்தது? என்றுஏளனமாகக் கேட்டான். யமுனைத்துறைவரோ யாதொரு பதிலும் பேசாமல் சுலோகம் ஒன்று எழுதிய மடல் ஒன்றை நீட்ட ஆக்கியாழ்வான் அதை வாங்கி நோக்கினான். "இமவான் திருமகளாரின் செந்தளிர் போன்ற திருவடி தீண்டப்பெற்ற இமயத்துக்கும், சிறையிருந்த செல்வியின் மூகோல்லாசத்துக்குக் காரணமாய் அமைந்த திருவணைக்கும், இரவியையும், மதியையும் தலையலங்காரமாகவுடைய உதய அத்தமனகிரிகளுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பிலே உபயமீமாம்சைகளின் கரைகண்ட வித்வானை நம்மைப்போலொருவரை நீர் தேடியும் காணமுடியுமா" என்னும் பொருளது. இதனைக் கண்ட ஆக்கியாழ்வான் ஒன்றுமறியாது ஒருபுறம் திகைத்தான். மறுபுறம் கோபம் கொண்டான். ஒரு சிறுவன் நம்மை எதிர்க்கத் துணிவு பூண்டானே என்று வியப்பு. பலர் முன்பு தன்னைப் பிளப்பதாக அறைகூவியதில் கோபம். இம்மன நிலையோடு ஆக்கியாழ்வான் யமுனைத்துறைவர் நீட்டிய ஓலையை அரசனுக்குக் காட்ட அரசனும் பார்த்து, மிக வியப்படைந்து, யமுனைத் துறைவரை நோக்கி "யமுனைத் துறைவரே! இனி நம் ஆஸ்தான வித்வானும் நீரும் வாதம் தொடங்கலாம்" என்று கூறினான். உடனே யமுனைத்துறைவர் அரசனை நோக்கி "அரசே நாங்கள் இருவரும் வாதுசெய்தால் அதில் யார்பக்கம் வெற்றி என்பதை அறுதியிடத் தகுதிபெற்ற சில வித்வான்கள் நடுவராக இருக்க வேண்டாமா? நாங்கள் மட்டும் போதும்என்றால் எங்களில் யார் தோற்றாலும் தோல்வியை ஒப்புக்கொள்ள நா எழுமா? ஆகையால் தாங்கள் சில வித்வான்களை மத்தியஸ்தராக இருக்க அழைப்பது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது." என்று கூறினார்.

அரசனும் யமுனைத்துறைவர் சொன்னதில் உள்ள நியாயத்தை உணர்ந்து அவ்விதமே வித்வான்களை அழைக்க ஆளை அனுப்பி வைத்து, அந்தப்புரம் சென்று தன் தேவியிடம் வாதம் செய்யும் சமயம் ஆயிற்று என அறிவித்து, அவளையும் அழைத்துவந்து, சபையிலே தன் ஆதனத்தருகே பட்டுத்திரை இடுவித்து அவளை அமரச்செய்து தானும் அமர்ந்தான்.

அரசன் அழைப்பின் பேரில் வித்துவான்கள் வந்ததும் அரசன் ஆக்கியாழ்வானை நோக்கி "இனி நீர் யமுனைத்துறைவருடன் வாதம்தொடங்கும்" என்று ஆணையிட்டான். ஆக்கியாழ்வானும் உள்ளே கலக்கம் இருந்தாலும் வெளிப்படை தன் செருக்கில் குறைவின்றி, யமுனைத்துறைவரின் வயதிற்கு மிகவும் பரிபவன்போலக் காட்டி, அவரை நோக்கி "யமுனைத்துறைவரே நீர் மிகவும் இளைஞர். உம்முடைய முகத்தைப் பார்த்தால் இன்னும் பால்மணம் மாறவில்லை என்று யாரும் கூறுவர். ஏதோ இளங்கன்று பயம் அறியாது என்றபடி நம்முடனே வாதம் செய்ய வந்துவிட்டீர். இவ்வளவு சிறுவரான நீர் சாஸ்திரவாதம் செய்யத்தகுதி பெற்றிருப்பீர் என்று நம்புவதற்கு இடமில்லை. அந்நிலையில் உம்மிடம் சாஸ்திர பரீக்ஷை செய்வது நம் பெருமைக்கும் இழுக்கு. ஆகவே லௌகீக யுக்தி வாதமாக மூன்று வார்த்தை கூறும். நீர் ஆம் என்று கூறுகிற வார்த்தையை நாம் இல்லை என்று சாதிப்போம். நீர் இல்லை என்பதை ஆம் என்று சாதிப்போம். முடிவில் வென்றவர் தோற்றவர் தலைமீது அடிக்கக் கடவர்" என்று கூறினான். யமுனைத்துறைவரும் கம்பீரமாக புன்முறுவல் செய்து, ஆகா உமது விருப்பப்படியே செய்வோம். நாம் கூறும் மூன்று வார்த்தைகளையும் ஒவ்வொன்றாகக் கூறுவோம். நாம் ஒன்று கூறியதும் உம்முடைய மறுப்பைக் கேட்டு அடுத்தது கூறுவோம். இதோ நம்முடைய முதல் வார்த்தை, "உன் தாய் மலடியல்லள்." ஆக்கியாழ்வாரே! உம்முடைய யுக்திவாதத்தால் இதனை மறுத்துரைக்கலாம்" என்று கூறியமர்ந்தார். கேட்ட சபை முழுவதும் வியப்பில் ஆழ்ந்தது அனைவரும் ஆக்கியாழ்வான் என்ன பதிலை, எப்படிக் கூறி சமாளிக்கப்போகிறார் என்று எண்ணித் திகைத்திருந்தனர். ஆக்கியாழ்வானோ தனக்குள்ளே யமுனைத்துறைவரின்

வார்த்தையைத் திரும்பத் திரும்ப சிந்தனை செய்து எவ்வகையில் இதனை மறுப்பது என்று தீவிர சிந்தனை செய்து கொண்டிருந்தான். அவன் மனதிற்குள்ளேயே கேள்வியும் பதிலும் மாறி மாறித் தோன்றி மறைந்தன. சிறுவன் கேட்ட பெரிய வினு வித்துவானைத் திகைக்க வைத்து விட்டது. 'எப்படி என் தாயை மலடி என்று கூறுவேன். அவள் வயிற்றில் நான் பிறந்திருந்தும் அவளை இங்கே மலடி என்று கூறுவேனுனல் கேட்பவர்கள் சும்மா விடுவார்களா? ஏன்காணும் எங்கள் நடுவில் குட்டிச் சுவர்போல் நின்று கொண்டு உம்மைப்பெற்ற தாய் மலடி என்று துணிந்து கூறுகின்றீரே. நீர் செய்வது வாதமா? விதண்டாவாதமா? எங்கள் அனைவரையும் அறிவிலிகள் என்று எண்ணினீரா? என்று என்னை மடக்குவார்களே! என்ன செய்வது முதலிலேயே கோணலாயிற்றே. இறங்கும் துறையிலே நீச்சாயிருந்தால் நாம் எப்படிக் கரையேறுவது" என்று இவ்விதம் வளைய வளையத் தனக்குள்ளே எண்ணிக் கலங்கினுன். யமுனைத் துறைவர் சற்றுநேரம் பொறுத்திருந்து ஆக்கியாழ்வானை நோக்கி "என்ன ஆஸ்தான பண்டிதரே! நம் வார்த்தையை மறுக்க ஏதேனும் ஆதாரம் தென்பட்டதா? அல்லது நம் வார்த்தையை மறுப்பதில்லை என ஒப்புக் கொள்கிறீரா? அரசனும் அவையும் எவ்வளவு நேரம் காத்திருப்பது? என்று கேட்டார்.

அதற்கும் வித்துவான் யாதொரு பதிலும் கூருமல் மௌனமாயிருக்க யமுனைத் துறைவர் "சரி! நம் முதல் வார்த்தைக்கு நீர் உத்தரம் சொல்ல வகைதெரியாமல் மௌனம் சாதிப்பதால் உம்மால் அதனை மறுக்க இயலவில்லை என்று நாம் கொண்டோம். இதோ நம் இரண்டாவது வார்த்தை. "ராஜா சார்வ பௌமன்" "வித்வானே இதனையாவது மறுத்துரைக்க முடியுமா பாரும்" என்று கூறியமர்ந்தார். இதனைக்கேட்ட அனைவரும் பிரமித்தனர். இச்சிறுபிள்ளை இப்படி வார்த்தைகளைக் கூறுகிறதே இதனுல் அரசன் கோபித்துவிடக் கூடாதே என்று சபையோர்க்கு உள்ளே அச்சம். அரசனும் சற்றுத் தயங்கினுன். ஆக்கியாழ்வான் பாடோ சொல்ல வேண்டியதில்லை அவன் ஆழ்ந்துயோசித்தான். "ஏதடா முன்னையதிலும் இது பேரிடியாகவல்லவா இருக்கிறது. என்னை ஆஸ்தான வித்துவானுக்கி வேண்டிய மட்டும் பொன்னும் புகழும் சொரிந்து நான் பிற பண்டிதர் அனைவரையும் வீண்வாதத்திற்கு இழுத்து அவர்களை இழிவுபடுத்திய போதும் எனக்கு கௌரவம் அளித்து என் சொல்லை வேதமெனக் கொண்டு ஒழுகுகின்ற பரமதர்மிஷ்டனுன அரசனை எப்படி தர்மிஷ்டன் இல்லையென்று சொல்லுவேன்! சொன்னுலும் பிறர் ஒப்புவரோ! அரசன்தான் பொறுப்பானே! அட நன்றி கெட்டபதரே காலமெல்லாம் என் சோற்றை உண்டு என் பொருளிலே திளைத்து என் சலுகையிலே புகழ் பெற்று வாழ்ந்து வந்து இப்பொழுது என்னையே பழிக்கிருயா? என்று ஒரேவீச்சில் என் தலையை வாங்கினுன் என்ருலும் அரசன் பேரில் குற்றமாகாதே என்செய்வது! என்று திகைத்து மீண்டும் மௌனமானுன்.

யமுனைத்துறைவரோ மீண்டும் புன்முறுவல் பூத்தவராய் "பண்டித வித்வஜ்ஜன கோலாகலரே! இல்லை என்று ஒரு வார்த்தை உரைத்தோம். ஆம் என்று ஒரு வார்த்தை உரைத்தோம் இரண்டிற்கும் விடை கூருது மௌனம் சாதித்து விட்டீர். இதோ நம்முடைய மூன்ருவது வார்த்தை. "ராஜபத்தினி பதிவிரதை" என்கிருேம். முடியுமானுல் இதையாவது மறுத்துப்பாரும் என்று கூறி அமர்ந்தார். இதைக்கேட்ட அவை முழுவதுமே வெலவெலத்துப்போயிற்று. ஆக்கியாழ்வான் இடிவிழுந்தநிலையை அடைந்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உள்ளே எண்ணமிட்டான்." என்ன நமது கிரகசாரம்; இவ்விளம் வித்துவானை நீறுபூத்த நெருப்பென்று எண்ணுமல் சிறுவன் என்று கருவம் கொண்டேனே! இத்தனை காலமும் வந்த வித்துவான்களையெல்லாம் கண்டபடி விதண்டாவாதம் பண்ணி விரட்டி அவர்களை வென்றுவந்து இப்போது இக்குழந்தையின் கேள்விகளுக்கு விடைகூற இயலாமல் விழிக்கின்றேனே! அவன் கேள்விகளில் ஒன்றையேனும் நம்மால் மறுக்க முடிந்ததா! கேள்விகள் ஒன்றின்மேல் ஒன்று நம்மை திணற வைப்பதாகவல்லவா இருக்கிறது! அதிலும் இக்கடைசிக் கேள்விக்கு எவ்வாறு விடை இறுப்பது? ஆலோசனை செய்யவே வழியில்லையே! கற்பிற்சிறந்த அரசியை பதிவிரதை அல்லள் என்றல்லவா சொல்லவேண்டும் வாதத்திற்காகத்தானே என்று கூறக்கூடிய

விஷயமா பழியும் பாவமும் சூழக்கூடியதல்லவா! "தன்வினை தன்னைச்சுடும்" என்பது நம்மிடத்தில பூர்ணமாகப் பலித்துவிட்டது என்று ஏக்கம் கொண்டு தலை கவிழ்ந்து நின்றான். அதே சமயம் பட்டுத்திரை விலகிற்று. அரசி ஆதனத்திலிருந்து இறங்கி ஓடிவந்து யமுனைத்துறைவரை இருகைகளாலும் தழுவி "என்னை ஆளவந்தீரே!" என்று கூறி வியந்தாள். உடனே ஆக்கியாழ்வான் தன் விருதுகள் எல்லாவற்றையும் களைந்து யமுனைத்துறைவர் திருமுன்பே சமர்ப்பித்து தன் தோல்வியை ஒப்புக்கொண்டான். அரசி தன்னை ஆளவந்தவர் எனக்கூறித் தழுவியதால் யமுனைத்துறைவருக்கு அது முதல் ஆளவந்தார் எனத் திருநாமம் வழங்கலாயிற்று.

நடந்தவற்றையெல்லாம் கண்டு, கேட்டு வியப்படைந்த அரசன் ஆளவந்தாரை நோக்கி "ஆளவந்தாரே! நடந்தவாதத்தில் நமது வித்துவான் தோற்றுவிட்டார். நீர் மத்தியஸ்தர் வேண்டும் என்று கூறினீர். அதற்கு இடமே இல்லாமல் ஆக்கியாழ்வானே தம் தோல்வியை ஒப்புக்கொண்டு தம் விருதுகளை உம்மிடம் அளித்துவிட்டார். வெற்றி உமதே. எனினும் எனக்கு ஓர் ஐயம். நீர் கேட்ட மூன்று கேள்விகளில் ஒன்றிரண்டேனும் யாராலும் மறுக்கக் கூடுமா? என்று கேட்டார். ஆளவந்தார் கம்பீரமாக நிமிர்ந்து "அரசே ஒன்றென்ன இரண்டென்ன, மூன்றையுமே மறுக்கக் கூடும்." என்று கூறவும் அரசன் நாங்கள் அனைவரும் கேட்டு சுவைக்கும்படி நீரே அவற்றை மறுத்துக் காட்டவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். ஆளவந்தார் கூறுவார் :—முதற் கேள்விக்கு மறுப்பாவது: உன் தாய் மலடியே என்பது. எப்படியெனில், முதலில் ஒரு விஷயத்தை மூன்று விடைகளுக்கும் பொதுவாக மனதில் கொள்ள வேண்டும். வாதத்திற்காகமட்டும் இவை கூறப்படுகின்றன. அந்நோக்கோடு அவ் விடைகளைக் கொள்ள வேண்டும். வாதம் யுத்திவாதமாகவே தொடங்கப்பட்டது என்பதை மறக்கலாகாது. ஆக்கியாழ்வானுடைய தாய் வாழை ஒரே ஒரு குலை ஈனுவதுபோல இவனொருவனை மாத்திரம் பெற்றவள், ஒரு மரமும் தோப்பல்ல. ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல என்பது சாதாரணமான பழமொழி. இப்படி ஒரே குழந்தையை ஈன்றெடுத்தவள் "வாழை மலடு" எனக் கூறப் படுவாள். எங்கள் வாதம் லௌகிகயுத்தி வாதம். அதன்படி உன் தாய் மலடியே என்று நான் கூறினால் ஒப்பவேண்டியதே. இரண்டாவது கேள்விக்கு விடை "அரசன் ஸார்வபௌமன் அல்லன் என்பது. ஸார்வ பௌமன் என்றால் இப்பூமண்டலம் முழுவதிலும் தன் ஆணை செலுத்தும் தர்மிஷ்டன் என்பது பொருள். இப்பூமியிலே வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு அரசர்கள் தம்தம் ஆணைசெலுத்தக் காண்கிறோம். "ராஜா ராஷ்ட்ரக்ருதம் பாவம்" என்ற நியாயப்படி மக்கள் செய்த பாவம் மன்னனைச்சாரும். ஆதலாலும் இந்த ராஜ்யத்தில் ஒருவருமே அதருமம் செய்யவில்லை எனக் கூறமுடியாதாகையாலும் அரசனை அதருமம் ஒட்டாதவன் எனக்கூற இயலாது. ஆகவே அரசன் சார்வபௌமன் அன்று. இனி மூன்றாவது கேள்விக்கு விடை அரசி பதிவிரதையன்று என்பது. என்றும் தன் கணவனுடைய நலத்தில் நோக்குடையவளாய் அவன் சொல்லுக்கு எதிர்த்தட்டாகப் பேசாதவளையே பதிவிரதை என்பர். இந்த அரசியோ தன் கணவனின் செல்வபீடமான அரியணையை இரு கூறுக்கவகை கண்டு அது முடியுமளவும் தன் ஆசை அறுதவளாய் இந்த அவையிலும் வந்து நாம் வெல்ல வேண்டுமே என்று சாக்ஷியாக இருந்தாள் என்றால் என்ன சொல்வது? மேலும் நாயகனுடைய வாக்கே பத்தினிக்குப் பற்றுக்கோடாக இருக்கும் என சாத்திரங்கள் கூற இவ்வரசி தன் கணவன் வாக்கில் உறுதியின்றி பிரதிக்ஞை பண்ணிக் கொடுக்கக் கேட்டிருக்கையாலும் அவளை பதிவிரதையல்லள் என்று சொல்வதில் தவறு இல்லையே என்று கூறி முடித்தார். அப்போது அரசனும் அரசியும் தங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் பார்த்து "நாம் நம்மிலிருந்து செய்து கொண்ட அந்தரங்க பிரதிக்ஞைகள் இவருக்கு எவ்வாறு தெரிந்தது? உண்மையில் இவர் ஸர்வஞ்ஞரே யாகவேணும்" என்று பேசிக்கொண்டனர். சபையிலுள்ளார் ஆளவந்தாரின் அறிவுத் திறனை வியந்தனர். இதன்பின் ஆளவந்தார் ஆக்கியாழ்வானை நோக்கி நீர் அதற்குள் சோர்வடைய வேண்டாம். இப்போது லௌகிகயுக்தி வாதம் மட்டும் நடத்தினோம். முதலில் நீர் நாம் இளைஞனுதலால் சாத்திரப் பயிற்சி உண்டோ இல்லையோ என்று சந்தே

# திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[திரு. மாணிக்கவாசக அடிகள், தஞ்சை]

## சிவகிரியைப் பொருள் விளக்கம்

தமிழில் வினை, தொழில், செயல் மூன்றும் ஒரு பொருளனவாக ஆளப்படுகின்றன. உண்மையில் அவை ஒருபொருளன அல்ல. அவற்றுள் தொழில் என்பது குறில், நெடில், எச்சில், மிச்சில், வெய்யில் முதலிய வினை முதலுணர்த்துவனவும், தொய்யில், அட்டில், துச்சில், முன்றில் முதலிய நிலமுணர்த்துவனவும், கட்டில், முதலிய செயற்படு பொருளுணர்த்துவனவும் போலாது, எழில் முதலாயினபோலச் செயலுணர்த்துவதாகும். எழில் - எழுதல். தொழில் - தொழுதல். 'தொழல்' என்பதில் 'அல்' ஈறுசார்ந்தது. 'தொழில்' என்பதில் 'இல்' ஈறுசார்ந்தது. இரண்டற்கும் முதல்நிலை ஒன்றே. 'தொழிலி' என்பது 'இல்' ஈற்றிற்குப் பின்னும் இகர வீறு சார்ந்தது. 'அவர்கள்' என்பதில் இரண்டீறு (அர்+கள்) சார்ந்தவாறு காண்க. இன்னோரன்ன பற்பல உள. 'தொழிலீஇஇ காற்றுப்போல் வந்த கதழ்விடைக்காரியை' (கலித்தொகை. 103) என்றதன் பொருளை ஓர்க. தொழிலையுடையவள் தொழிலி. இகர வீறு பெண்பாலையுணர்த்திற்று; 'பொன்னி' 'வள்ளி' முதலியனபோல. வில்லி, அறிவிலி, தப்பிலி முதலியன ஆண்பாற்கும் உரித்தாய் வந்த அவ்வீற்றுச் சொற்கள் தொழிலாளி, அறிவாளி என வழக்கில் உள்ளவாறு அறிக. தொழல், செயல், வரல், தரல், செலல் முதலியன அல்லீற்றுச் சொற்கள். தொழில் செயல் இரண்டும் ஈற்றால் வேறுபடுவன. தொழல் செயல் அதனால் ஒன்றுபடுவன. படவே தொழு, செய் என்னும் அவ்விரு முதனிலை 'வினை' என்பது முதனிலையாய் நின்று வினைதல், வினைகை முதலிய சொற்கள் தோன்றுதல் இல்லை. அதனால் தொழில், செயல் போல்வது அன்று 'வினை' என்னுஞ் சொல். எழில், எழல், எழுதல், எழுகை, என்பவை போலத் தொழில், தொழல், தொழுதல், தொழுகை; செயல். செய்தல், செய்கை என வரல் காண்க. செயில் என்று இல்லை. இலக்கணவுணர்விற்றலை சிறந்து விளங்கிப் புகழுடல்பெற்ற அரசஞ் சண்முகனார் தாம் எழுதிய தொல்காப்பியப்பாயிர விருத்தியுள், எழில் முதலியன செயல் உணர்த்தியவாற்றை விளக்கினர்.

'தோழி' என்னும் சொல், தொழுதல் அடியாகத் தோன்றிய பெயரே. தலைவிக்கு மேலானவள் தோழியாக எண்ணப்படாள். தொழிலி என்பதன் மரூஉவே தோழி. 'ஒழி' என்னும் முதனிலை நீண்டு வழங்கலும் ஈண்டுக்கருதற்பாலது. ஆண்டு அதற்கு விருப்பம் செயப்படுபொருள்.

பழமை என்பதன் முதனிலையான 'பழ்' என்பதொடு 'து' சேர்ந்து (பழ்+து=) பண்டு என்று அமைந்தது. அதுபோலத் தொழ்+து=தொண்டு என்று அமைந்ததும் ஈண்டு எண்ணத்தக்கது. பழு (பழ்;) தொழு-(தொழ்) என்று பழைய முதனிலையொடு

---

கித்தீர் அல்லவா! இனி சாஸ்திரங்களில் நீர் வேண்டிய கேள்விகளைக்கேளும். நாம் பதிலிறுக்கிறோம் என்றார். ஆக்கியாழ்வானும் சற்றே தைரியமடைந்தவனாய் சாத்திரங்களிலே பொருள் கடினமாயுள்ள பகுதிகளில் சிலவற்றை ஆய்ந்தெடுத்து அதில் ஆளவந்தாரைக் கேள்விகள் கேட்க அவரும் அவன் கேள்வி முடியு முன்பே அவற்றுக்கு விடையளித்தார். ஆக்கியாழ்வான் முற்றிலும் தான் தோற்றதாக சபையோர் முன்பு ஒப்புக்கொண்டான். அரசனும் அரசியும் ஆளவந்தாரைத் தம்முடன் அரண்மனைக்குள் அழைத்துப்போய் அவர் திருவாக்கால் பல இன்கவிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். பின் மீண்டும் சபை வந்து மந்திரிகள் முன்னிலையில் அரசன் தான் செய்த சபதப்படி இவருக்கு ராஜ்யத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டியதற்குறுப்பான சாஸனங்களை எல்லாம் செவ்வனவே செப்பேட்டில் பொறித்தளித்து நன்னாள் குறிப்பிட்டு நாடும் நகரமும் நன்கறிய ஆளவந்தாரை அரியணையில் அமர்த்தி அரசராக்கி ஆனந்தித்தனர்.

(தொடரும்)

உகரம் சேர்ந்தவாறும் உணர்க. 'தொழும்பர்' என்பதும் இம் முதனிலையுடையதே. பொதுள் + பு = பொதும்பு. பொதும்பர், தொழ்+உள்+பு=தொழும்பு, தொழும்பர். 'தொழும்பர் உளக் கோயில்.'

தமிழில் வினைச்சொற்களைத் தொழிற் சொற்கள் என்பர். செயற்சொற்கள் என்னுர். தொழிலும் வினையும் ஒன்ருயின், வினைமுற்று, தொழின்முற்று, வினையெச்சம், தொழிலெச்சம், என வழங்குதல் இல்லை. வழங்கினும் குற்றமே. ஆசிரியர் தொல்காப்பியர் தொழில் முதனிலையெட்டும் கூறுஞ் சூத்திரத்தில், வினைவேறு தொழில் வேறு என்று உணர்த்தினர். அவரே 'தொழினிலையொட்டும் ஒன்று' என்புழி இரண்டனையும் ஒன்ருக் கொண்டார். இதுகாறும் சுருக்கியுணர்த்தியவாற்ருல், அம்மூன்று சொற்களும் ஒன்றல்ல எனல் உறுதியாயிற்று. ஆகவே, அம்மூன்றுள் 'கிரியை' என்பது அடங்கும் தமிழ்ச்சொல் யாது என ஆராய்ந் தடக்கப்படும்.

சிவஞானபோத மாபாடியத்தில், "காரியங்கள் எல்லாம் ஒருங்கே தோன்றுதற்குக் காரணம் வினையே வினையே அன்றிப் பிறிதின்மையானும் வினையுண்மை துணியப்படும்" என்னும் வாக்கியம் உளது.

அவ்வாக்கியத்தில், காரியங்கள் வேறு, அவற்றின் காரணம் ஆகிய வினைவேறு என்பதை விளக்கினர் ஆசிரியர். காரியம் தொழிலும் செயலும். காரணம் வினை. காரணவினை அருவம். காரியம் (தொழில், செயல்) உருவம். உருவமான காரியம் ஆகாமியத்துள்ளும் பிராரத்தத்துள்ளும் அடங்கும். காரணமான வினை சஞ்சிதத்துள் அடங்கும்.

செயலாவன தூலகன்மமான ஆகாமியம். தொழிலாவன சூக்குமகன்மமான பிராரத்தம். ஆகாமியம் மனம் வாக்குக் காயம் மூன்ருனும் ஈட்டப்படும். பிராரத்தம் அம்மூன்ருனும் நுகரப்படும். ஆகாமியம் பிராரத்தம் இரண்டும் ஐம்புலக் காட்சிக்கும் அதற்கு ஏற்றவாறு புலப்படும். சஞ்சிதம் அந்தக்கரணத்தான் அறியப்படும். அதுதான் 'வினை' என்னும் சொல்லால் சிறப்பாக உணர்த்தப்படும். ஏனையிரண்டற்கும் 'வினை' என்பது பொதுமையின் உரியதே அன்றிச் சிறப்பின் உரித்தன்று. புத்தி தத்துவத்தின் இடமாக மாயையிற் கிடந்து, சாதி, ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாகி, முறையே ஜநகம், தாரகம், போக்கியம் என மூவகைத்தாய் அபூர்வம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப்பெயர் உடையது வினை எனப்படும். அதுவே அருவமாம். ஏனைய பிராரத்தம் ஆவது, ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாலே பலதிறப்பட்டு அநுபவத்தில் உருவாய் விளங்கும். ஆகாமியம் மனத்தால் வாக்கால் ஈட்டப்படுங்கால் வடிவாய் விளங்காது, உருவாய்த்தோன்றும். காயத்தால் ஈட்டப்படுங்கால் மட்டும் வடிவாய்த் தோன்றும்.

வினை ஐவகைப்படும். 1. உலகம். 2. வைதிகம். 3. அத்தியான்மிகம். 4. அதிமார்க்கம். 5. மாந்திரம் என்பவை அவை.

1. உலகவினை:— கிணறு தோண்டல், குளம்வெட்டல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய 'செயல்கள்' பற்றிய வினை. நிவிர்த்தி கலா புவனபோகங்களைப் பயப்பிப்பது,

2. வைதிகம்:—வேதவேள்வி முதலியவற்ருல் உண்டாவதாய்ப் பிரதிட்டாகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

3. அத்தியான்மிகம்:— வேதமார்க்கத்தாற் செய்யும் பூசை, துறவு முதலியவற்ருல் உண்டாவதாய் வித்தியா கலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

4. அதிமார்க்கம்:—இயமம், நியமம் முதலிய போகப் பயிற்சியால் உண்டாவதாய்ச் சாந்திகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

5. மாந்திரம் :— சுத்தமந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானப்பயிற்சி விசேடங்களால் உண்டாவதாய்ச் சாந்தியதீதகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

இவ்வைந்திலும் செயல்வேறு வினைவேறு ஆதலை விளங்க உணர்தல் இதைக் கற்போர் கடனுகும். இவற்றுள் முதல் இரண்டும் அசுத்தபோகம் பயப்பிக்கும் அசுத்த கன்மம். முடிவாம் இரண்டும் சுத்தபோகங்களைப் பயப்பிக்கும் சுத்தகன்மம். இடையது சுத்தா சுத்தபோகம் பயப்பிக்கும் சுத்தா சுத்த கன்மம்.

தொழில் (முயற்சி), செயல் (காரிய கன்மம்), வினை (மூலகாரணம்) என்று தொண்டுரைத்தலும் உண்டு.

சைவசித்தாந்தத்திற் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கனுள் அமையும் நால்வேறு கிரியைகளும் சிவவழிபாட்டுட் படுவனவே யாகும். இவை மேற்கூறிய உலகவினை முதலியவற்றுட்படும் சாதாரண காரியங்கள் அல்ல. அவை புண்ணியத்துட் சேர்வன. இவை சிவபுண்ணியத்தனவாம்.

பசுக்களை நோக்கிச் செய்யப்படும் நல்வினைகள் பசுபுண்ணியம் ஆம். சிவனையே நோக்கிச் செய்யப்படும் நல்வினைகள் சிவ புண்ணியமாம். வேள்வி முதலிய வைதிக வினை சிவனை நோக்கிய புண்ணியம் சில உடையன எனினும் ஏனைக்கடவுளரோடு ஒப்பவைத்துச் செய்தலால், கருத்து வகையாற் பசுபுண்ணியமேயாம். பசுபதி என்னுங் கருத்தாற் செய்தால் சிவபுண்ணியமாகும். அவ்வேள்வி முதலியவற்றையும் சிவபிரானை நோக்கிப் பொது நீக்கிச் செய்தால், பொதுச் சிவபுண்ணியமாகும்.

சிவபுண்ணியம் அபுத்திபூர்வம் புத்திபூர்வம் என இருவகைப்படும். அபுத்திபூர்வமும் இருவகைப்படும். (1) வேள்வி முதலியவற்றுட் போலப்பொது நீக்கி அறியுமாறு இன்றிச் சிவபிரானை நோக்கிச் செய்யும் சிவ புண்ணியம். (2) அந்நோக்கமும் இன்றி, மாவலி பழம் பிறப்பிற் செய்ததுபோலச் செய்தவினை யாதானும் ஒருவகையால் சிவபிரானுக்குரிய பணியாய் முடியும் சிவ புண்ணியம்.

பொதுநீக்கிச் செய்யப்படுவதாய சிவ புண்ணியமும் பொது சிறப்பு என்று இருவகைத்து. (1) பொது:— சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆன சிவதீட்சை இன்றி அவ்வாறு செய்வது. (2) சிறப்பு:—சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆன சிவதீட்சை உடையராய் அவ்வாறு செய்வது.

இங்குத் திருநாவுக்கரசு நாயனர் 'பொது நீக்கித் தன்னை நினையவல்லார்க்கு என்றும் பெருந்துணை' என்ற உண்மையை உளங்கொள்ளல்வேண்டும்.

இவ்விரு புண்ணியமும் (1) பக்திக் காரணமாக உண்மையாற் செய்வது, (2) புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்வது என்று இருவகைப்படும்.

அச் சிறப்புச் சிவபுண்ணியம் இரண்டும் தனித்தனி (1) சரியை (2) கிரியை (3) போகம் என மூன்றும், அம்மூன்ருல் நிகழும் (4) ஞானம் ஆகிய ஒன்றும் ஆக நந்நான்காகும். அந்நான்கினுள்ளும்

### சரியை

1. சரியையிற் சரியை (திருக்கோயில் அலகிடல் முதலாயின)
2. சரியையிற் கிரியை (மகேசுரமூர்த்தம் இருபத்தைந்து; விநாயகர் முதலோரைப் பூஜித்தல்)
3. சரியையில் யோகம் (உருத்திர மூர்த்திதியாநம்)
4. சரியையில் ஞானம் (அத்தியாந பாவனையில் நிகழும் அநுபவ ஞானம்)

### கிரியை

1. கிரியையிற் சரியை (பூஜைக்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்ளல்)
2. கிரியையிற் கிரியை (புறவழிபாடு ஆகிய ஐவகைத் தூய்மை முதலாச் செய்யும் சிவபூஜை)
3. கிரியையில் யோகம் (அகவழிபாடு)
4. கிரியையில் ஞானம் (அவ்வழிபாட்டில் நிகழும் அநுபவஞானம்)

### யோகம்

1. யோகத்திற் சரியை (இயமநியமம் முதலிய நான்கு)
2. யோகத்திற் கிரியை (ப்ரத்யாகாரம் தாரணை)
3. யோகத்தில் யோகம் (தியாநம்)
4. யோகத்தில் ஞானம் (சமாதி)

### ஞானம்

1. ஞானத்தில் சரியை (கேட்டல்)
2. ஞானத்தில் கிரியை (சிந்தித்தல்)
3. ஞானத்தில் யோகம் (தெளிதல்)
4. ஞானத்தில் ஞானம் (நிட்டை கூடல்)

இப்பதினறும் பத்திகாரணமாக நிகழ்வன ஆயின் உண்மைச் சரியை முதலியன ஆம். புகழ் முதலிய உலகப்பயன் காரணமாக நிகழ்வன ஆயின் உபாயச்சரியை முதலியன ஆம்.

இதுகாறும் எழுதியவற்றால், திருஞான சம்பந்தர் முதலிய சைவசமயாசாரியர்களால் உணர்த்தப்பட்ட கிரியையின் உண்மைக் கருத்தையும் அக்கிரியைகளின் உயர்வையும் உள்ளவாறு அறிதற்பயன் எய்தும்.

திருஞானசம்பந்தர் சிவபுண்ணியத்தையும் சிவபூஜை முதலியவற்றையும் உள்ளடக்கிச் 'சிவதன்மம்' என்று அருளினர். அதனை உள்ளவாறு உணர இவ்விளக்கம் இன்றியமையாத ஒன்று. விளக்கம் பெருமல், அவரவர்க்குத் தோன்றியவாறு திருமுறைத் தொடர்களுக்கும் சொற்களுக்கும் பொருள் கொள்ளல் நலம் பயவாது.

"திறங்கொண்ட அடியார்மேல்
தீவினைநோய் வாராமே
அறங்கொண்ட சிவதன்மம்
உரைத்தபிரான் அமரும்இடம்
மறங்கொண்டங் கிராவணன்றன்
வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான்
புள்ளிருக்குவே ளூரே."

இதில் 'அறங்கொண்ட சிவதன்மம்' என்பது இதுகாறும் எழுதியவற்றை உணர்ந்தால் தான் இனிது விளங்கும்.

அறமும் தன்மமும் முறையே தமிழ்ச் சொல்லும் வட சொல்லுமாம். இரண்டற்கும் பொருள் வேறுபாடு கூறிற்றிலர் பண்டைப் புலவோர். திருஞானசம்பந்தர் 'அறங் கொண்ட சிவதன்மம்' என்று பாடியருளினர். அவர் திருவுள்ளம் அத்தொடர்ப் பொருளால் விளங்குதல் வேண்டும்.

"வந்தமணலால் இலிங்கம்
மண்ணியின்கண் பால் ஆட்டுஞ்
சிந்தைசெய் வோன்தன் கருமம்
தேர்ந்து சிதைப்பான் வரும்அத்
தந்தைதனைச் சாடுதலும்
சண்டீசன் என்றருளிக்
கொந்தணவும் மலர்கொடுத்தான்
கோளிலியெம் பெருமானே"

என்பதில், 'வந்த........கருமம்' என்றதும் இவ் விள்க்கம் பெற்ருல் அன்றி விளங்காது.

'அவ்வினைக்கு இவ்வினையாம்' என்றதும் 'உய்வினை நடாதிருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே' என்றதும் ஒரே வினையாகலாம். 'உய்வினை' என்றது உய்யும் வினை என வினைத்தொகையுமாம். உய்வை என்றலும் பொருந்தும். 'கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்' என்றதில் 'வினை' என்பதை எதைக் குறிக்கின்றது? சிறப்புச் சிவபுண்ணியத்தை அன்றே? சிறப்புச் சிவ புண்ணியத்துள் ஒன்ருய்த், திருஞானசம்பந்தர் திருவாயில் வந்த 'சிவதன்மம்' என்பது திருக்களிற்றுப் படியாரில், (15)


"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான்அழியும்-வல்லதனல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங் காண்
ஆரேனும் காணு அரன்"

என்னும் திருவெண்பாவில் அதன் உயர்ச்சியை உணர்ந்து நல்ல அடையுடன் அமைத்தருளினர் நாம் உய்யவந்ததேவ நாயனர்.


'சிவதன்மம்' என்றது இங்கே சரியை கிரியை இரண்டனையும் குறித்து நின்றது. இச் சிவதன்மம் மெல்வினை என்றும் வல்வினை என்றும் இருதிறப்படும். சிறுத்தொண்ட நாயனர், சண்டேசுர நாயனர், அரிவாட்டாய நாயனர் முதலிய அரும்பெருந் தொண்டர்க்கு வாய்த்தவை வல்வினையாகிய சிவதன்மம். சைவாசார சீலரான மெய்த் தொண்டர்க்கு இயல்பவை மெல்வினையாகிய சிவதன்மம். ஏனையோர்க்கு எல்லாம் எல்லா வேளையிலும் எங்கும் அறுசுவையனவாகக் கொண்டு மெல்வினையே எய்தும். மெல் வினையை மெல்லும் வினைத்தொகையாகக் கொண்டும் நாம் உய்யவந்ததேவநாயனர் ஆதலின், நம் வினைத்தொகையை ஒழிக்கத் திருவுளங்கொண்டும் அளவில்லாத ஆன்மாக்களுள் சிற்சிலர் பெறுதற்கு அரிய மானிடப் பிறவி (யுடம்பைப்) பெற்றும் சரியையோ கிரியையோ வல்வினையோ ஆதாரபோகமோ ஒன்றைச் செய்யாமல், நிராதார போகத்தையோ செய்யாமல்; பெறுதற்கு அரிய சிவப்பேற்றை எய்தாமல்; வயிறுபுடைக்க உண்டு பூமிக்குச் சுமையாக இருத்தல் என்ன காரணத்தாலோ என்று வினவியருளினர்.

"இப்பொருள்கள் யாதேனும்
ஏதெனினும் ஒன்றுசெய்தல்
எப்பொருளும் செய்யா
தொழிந்திருத்தல்—மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே
கண்ட மனிதரெலாம்
உண்டிருப்பி தென்னே உரை."
(உண்டிருத்தல்—மெல்வினை.)

(தொடரும்)



நடராஜர்
ஜெயங்கொண்டார் கோயில் நியமம். இராமநாதபுரம் மாவட்டம்



காலசம்மாரமூர்த்தி
ஜெயங்கொண்டார் கோயில் நியமம்

# நியமம் கோயில் சிற்பங்கள்

## ஜெயங்கொண்டார் கோயில்

[வித்துவான் திரு. அ. மா. பரிமணம், எம். ஏ., காரைக்குடி]

தமிழகத்து ஆலயங்கள் எல்லாம் இறைமணமும், கலைமணமும் ஒருங்கே கமழ்ந்து திகழ்வனவாகும். இசை, கூத்து, சிற்பம்,சித்திரம் முதலிய பலவகைக் கலைகளும் ஆலயங்களைச் சார்ந்தே வளர்ந்துள்ளன. கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து, வானோங்கி நிற்கும் கோபுரங்கள் இறை ஒளிவீசி நம்மை அழைக்கின்றன. தொலைக்காட்சியாய்த் தூலலிங்கமாய் நின்றழைக்கும் கோபுரத்தை நாடிச் சென்று ஆலயத்துட் புகுந்தால், அதன் சுவர்கள் எல்லாம், அவன் புகழ் பேசும் பண்ணூர்ந்த பாக்களைத் தாங்கி, பயில்வார் மனத்தைக் கனிவிக்கும். அங்கு நிற்கும் தூண்கள் எல்லாம், தெய்வ நலந்திகழும் திருக்கோலச் சிற்பங்கள் தாங்கி நம் சிந்தையைச் செந்நெறிப் படுத்துகின்றன. மரத்தை மறைத்தது மாமதயானை மரத்தில் மறைந்து மாமதயானை என்ற திருமூலர் திருவாக்குப்படி, கல்தூண் காட்சிகள் மறைந்து, கடவுட் கோலக் காட்சிகள் தோன்றுகின்றன. கல்லும் சொல்லாதோ கவி எனவியந்து நாம் அக்காட்சி அழகில் நம்மையே மறந்துவிடுகிறோம். அந்த அமர காட்சிகள் காண்பார் தம் மனம் கரைத்து,மலங்கரைக்கு மாண்பின. பொறி இன்பம் சேர்க்கும் கலைத்திறன், இங்குப் புலன்கட்கு இன்பம் தந்து, உலப்பிலா ஆனந்தத்தேன் சொரியும் அமுதமாய் விளங்கக் காண்கின்றோம்.

இத்தகைய காட்சிகளில் சிலவற்றை —கல்லில் சமைந்த கலைத்திறனை—கற்காவியத்தை இங்குக் காண்கிறோம்.

பாண்டிநாட்டு முகவை மாவட்டத்துத் திருப்பதிகளுள் ஒன்று நியமம் என்னும் ஊர். நேமம் என்று வழங்கப்படும். குன்றக்குடிக்கு வடபால் $1\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ளது. நகரத்தார் என வழங்கும் செட்டியார் பெருமக்களின் கோயில்கள் ஒன்பதில் ஒன்றாகும் இப்பதி. தொன்மைச் சிறப்புமிக்க தமிழ்ச் சிற்பக்கலை இந்த நூற்றாண்டிலும் சிறந்து விளங்குகின்றது என்பதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது இவ்வூர்ச் செயங்கொண்டார் ஆலயமாகும். இவ்வாலயத்தில் உட்பிரகாரத்து முகப்புத் தூண்களில் எழிலார்ந்த சிற்பங்கள் திகழ்ந்து கண்ணிற்கும் கருத்திற்கும் இனிய விருந்தளிக்கின்றன. அவ்வழகிய தெய்வக் காட்சிகளில் சிலவற்றையே இங்குக் காண்கிறோம்.

1. ஸ்ரீ பார்வதி கல்யாணம்—பார்வதியாய்—தடாதகைப் பிராட்டியாய் விளங்கும் உமையம்மையின் திருமணத்தினை விளக்குவது இக் காட்சி. (உள் அட்டைப்படம் பார்க்க) மணமண்டபத்தின் மாட்சியையும் மணமக்களின் ஆடை அணிகலப் பொலிவினையும் நன்கு காணலாம். திருமால் நீர் வார்த்தளிக்க, நான்முகன் எரி ஓம்ப, முனிவர்கள் ஆசிகூற திருமணக்காட்சி இனிது சித்தரிக்கப்பட்டுள்ளது. மணமக்களின் உள்ள உவகையை முகம் காட்டுகிறது. கோவணமும் தோலுடையும் நீக்கி, பாம்பணி களைந்து பைம்பூண் பூண்டு, துறவுக்கோலம் துறந்து மணக்கோலம் பூண்டுவிளங்கும் சோமசுந்தரரின் திருக்காட்சியினைக் காணும் நாம் நம்மை மறந்து,

சடைமறைத்துக் கதிர்மகுடம்தரித்து
நறுங்கொன்றையந்தார் தணந்து வேப்பம்
தொடைமுடித்து விடஙகக்கலனகற்றி
மாணிக்கச்சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்துக் கயலெடுத்து வழுதிமருகனாகி
மீனநோக்கின்
மடவரலை மணந்து உலகமுழுதாண்ட சுந்தரனை
வணக்கம் செய்வாம்.
(பரஞ்சோதி—திருவிளையாடல்)

என்று வணங்கத் தோன்றுகின்றது.

2. ஸ்ரீ நடராஜர்—ஊர்த்துவதாண்டவம்—அற்புத ஆனந்த நடனக் காட்சி மெய் சிலிர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. முயலகன்மீதாடும் தாண்டவத்தினை, "ஆலங் காட்டில், ஆடுமா நடமும் நீ கண்டு, ஆனந்தஞ்

சேர்த்து எப்போதும், பாடுவாய் நம்மை" என்று ஆண்டவனால் அருளப் பெற்ற காரைக்காலம்மையார்கைத்தாளமேந்திப்பண் ணூர்ந்த பதிகம்பாடிப்பாடி மகிழும் காட்சி யினையும் காண்கிறோம். தாண்டவக்கோனு டைய திருமுகத்தில், அருட்குறிப்பும் பெரு மிதமும் தவழ்கின்றது. திருமுடியிலும், திருவாசிகையிலும், பிற ஆடை அணிகளிலும் உள்ள நுண்ணிய சிற்பத் திறமை அறிந்தின் புறத்தக்கதாகும். தாண்டவக் காட்சியில் திளைத்தவர்கள்,

செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு
மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
நீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண்டால் பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே,
—(அப்பர்—தேவாரம்)

என்று வியப்பதில் வியப்பில்லையே : இக் காட்சியினைக் 'கொடுகோட்டி' ஆடல் எனப் பழந்தமிழ் நூல்கள் பேசும்.

3. ஸ்ரீ காலசம்கார மூர்த்தி-இறைவன் இலிங்காகாரத்தில் தோன்றிக் காலனைக் காலாலுதைத் தருளிய காட்சி. "சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை, வீட எடுத்தது காலனை" என்று ஆடஎடுத்த பொற்பாதத்தை அப்பர் சுவாமிகள் போற் றிய பொலிவினை இக்காட்சியிற் காணலாம். காலனுடையநெடிய வன்பாசமும், தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்று கொண்ட மார்க்கண்டரின் அன்புறுதியும், அருட்குறிப் பும் சினக்குறிப்பும் ஒருங்கு பொலியும் ஐயன் திருமுகமும், அஞ்சிய எருமைக்கடாவின் தோற்றமும், காலன் நிலையும் நன்கு காட்டப் பட்டுள்ளன. இது கற்சிலை என்பதனையே மறந்துவிடுகின்றோம். கூற்றுதைக்கும் திருவ டியின் கோலம் நம்மைக் கவர்ந்து விடு கின்றது. அக்கவர்ச்சியின் வயப்பட்டவர்கள் பின்வருமாறு வாழ்த்தி இறைஞ்சி நிற்பது இயற்கையே.

மருட்டுயர் தீர அன்று அர்ச்சித்தமாணி
மார்க்கண்டற்கா
இருட்டிய மேனி வளைவாளெயிற்று எரிபோலும்
குஞ்சிச்
சுருட்டிய நாவில் வெங்கூற்றம் பதைப்ப
உதைத்து உங்ஙனே
உருட்டிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே.
(அப்பர்—தேவாரம்)

இந்தத் தூண் சிற்பங்கள் ஒவ்வொன் றும் தனித்தனி ஒரே கல்லினால் சமைக்கப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சிலைகள் ஒவ்வொன்றிலும் பொதுவை நலமிக்கதால், நுண்ணிய கைத்திறம் காட்டு வதாய் அமைந்துள்ளது. இக்கோயில் தூண் சிலைகள் எல்லாம் சுமார் 55 ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பட்டவையேயாகும். காஞ்சி, கடல் மல்லை, தஞ்சை என்று வரும் வரலாற் றுக் காலச் சிற்பக்கலையின், வழிவழியாய்— வாழையடி வாழையாய் இக்கலை இன்றும் செழித்தும் சிறந்தும், பொலிவது கண்டு நாம் பெருமை கொள்ளலாம்.

---

இளம்பிள்ளை:—மாரியம்மன் கோயிலில் பங்குனி இரதோற்சவம் 30—3—62 முதல் 7—4—62 வரை நடைபெற்றது.

திருவுத்திரகோசமங்கை:—மங்களநாதசுவாமி கோயிலில் சைத்ரோற்சவம் 10-4-62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

சின்னமனூர்:—பூலானந்தீசுவரர் கோயிலில் சித்திரைத் தேர்விழா 5—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

விழுப்புரம்:—ஆஞ்சநேயசுவாமியின் 39-ஆவது ஆண்டு இலட்சதீப மகோற்சவம் 10—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

ஆத்தூர்:—முத்தாலம்மன் கோயிலில் பங்குனித் திருவிழா 10—4—62 முதல் 15—4—62 வரை நடைபெற்றது

பட்டுக்கோட்டை:—நாடியம்மன் கோயிலில் மகோற்சவம் 3-4-62 முதல் 14-4-62 வரை நடைபெற்றது.

பாபவினாசம்:—பாபவினாச சுவாமி கோயிலில் சித்திரை விசுவிழா 5—4—62 முதல் 15—4—62 வரை நடைபெற்றது.

# திருவாவடுதுறைக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு]

திருவாவடுதுறை என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் நரசிங்கன் பேட்டை இருப்புப்பாதை நிலையத்துக்கு அருகில் இருக்கின்றது. திருமூல நாயனார் சிவயோகத் தமர்ந்திருந்து திருமந்திர மாலையைத் திருவாய் மலர்ந்தருளியது இப்பதியில் தான். இவ்வூர்ப் பதிகத்தில் அப்பரடிகள் சம்பந்தர் பாட்டின் பயனை

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமலவூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே"

எனப் பாராட்டியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை, குறைவிலா நிறைவே! குணக்குன்றே! கூத்தனே! கோதிலாவமுதே! வானநாடனே! வழித்துணை மருந்தே! மாசிலாத மணியே! உன்னையன்றி எனக்கு உறவு ஆவார் யார்? எனக் கூறியிருப்பன கல்நெஞ்சையும் கனிவிக்கும் திறத்தன. இத்துணைச் சிறப்பினையுடைய இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமானது. திருக்கோயில் தூய்மையாய் இருக்கின்றது.

## கல்வெட்டுக்கள்

இத் திருக்கோயிலில் சோழ மன்னர்களில் முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், விசயராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவன், இவர்கள் காலங்களிலும்; பாண்டிய மன்னரில் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன,

---

குறிப்பு:—இத் திருக்கோயில் கல்வெட்டுக்களை ஒருவாரம் தங்கிப் படித்து எழுதினேன். திருவாவடுதுறை ஆதீனத்தார் வேண்டும் வசதிசெய்து கொடுத்ததற்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியது.

## திருக்கோயில் கட்டப்பெற்ற காலம்

இத்திருக்கோயிலில் முதற் பராந்தக சோழன் காலத்துச் செதுக்கப்பட்ட ஒன்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இப் பராந்தகன் கி. பி. 907 முதல் 948 வரை சோழ மண்டலத்தை ஆட்சிபுரிந்தவன். இம் மன்னன் தன் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் அதாவது 907+38=கி. பி. 945-இல் ஐந்நூறு கழஞ்சுபொன் கொடுத்துள்ளான். அவ் வுதவியைக்கொண்டு இக்கோயில் குடப்படை பீடத்துக்குமேல் திருப்பணி செய்யப் பெற்றது. எனவே அத்திருப்பணி முடிவு பெற்றுக் கும்பாபிடேகம் செய்யக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டும். எனவே பராந்தகனது ஆட்சியின் இறுதிக்காலத்தே அதாவது இற்றைக்கு 1015 ஆண்டுகளுக்குமுன் இக்கோயில் கற்றளியாக ஆக்கப்பெற்றிருக்க வேண்டும்.

## திருக்கற்றளியைச் செய்தவர்

இப்பராந்தகன் காலத்தில் இக்கற்கோயிலைக் கட்டியவர் கற்றளிப்பிச்சர் ஆவர். இவருடைய பிரதிமம் கர்ப்ப இல்லின் தென்பக்கம் அதாவது தட்சிணாமூர்த்தி திருமேனிக்குக் கீழ்ப்புறத்தில் கைகளை மார்பிற்கு நேரே வைத்துக் குவித்துத் திருவாவடுதுறை உடையாரை வழிபடும் நிலையில் இருக்கிறது. கற்றளிப்பிச்சன் என்று அவர் பிரதிமத்துக்குத் தலைப்பில் செதுக்கப்பட்டுள்ளது. இக் கற்றளிப்பிச்சர் பிரதிமத்துக்குக் கிழக்குப் பக்கத்தில் தலைமேல் கைகுவித்து வழிபடும் பிரதிமம் ஒன்று இருக்கின்றது. இவர் கற்றளிப்பிச்சனார்க்கு இளைய திருநாவுக்கரையராவர். இப்பெயர் அப்பிரதிமத்துக்கு அருகில் தீட்டப்பெற்றுள்ளது. பிச்சன் எனினும் பித்தன் எனினும் ஒக்கும். தகரத்துக்குச் சகரம் போலியாகவருங் காரணம்பற்றி பிச்சன் என்றால் அன்பு உடையவன் என்று பொருள். "வஞ்சகப் பெரும் புலையனேனை உன்கோயில் வாயிலிற் பிச்சனாக்கினாய்" என்பது திருவாசகம். [கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்ற மக்கள் வடிவங்கட்குப்

பிரதிமங்கள் என்றும், கடவுள் வடிவங்கட்குத் திருமேனி என்றும் பெயர்].

கற்றளிப்பிச்சர் இக்கோயிலைக் கட்டினார் என்பதற்கு ஆதாரம்:—

"ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு இருபத்தைந்தாவது தென்கரைத் திருவழுந்தூர் நாட்டு பிரமதேயம் சிற்றுணைச் சூர் சபையோம். இவ்வூர் கவிசங்கரன் மாறனிடைத் திரைமூர்நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை கற்றளி எடுத்த பித்தன் மஹாதேவர்க்கு உவச்சப்புறமாக விலைகொண்ட நிலம் பதினொருமாச் செய்யும்" என்னும் கல்வெட்டுப் பகுதி விளக்குகிறது. (இக்கல்வெட்டு அகத்தியர்க்கு மேல்பால் இருக்கிறது) இக்கல்வெட்டில் உவச்சர் என்பார் சங்கு, காளம், இவைகளை ஊதுபவர் ஆவர். புறம்—என்றால் நிவந்தம். எனவே சங்கு, காளம் இவைகளை ஊதுபவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலமாகும். "பழம்படி சங்கு ஊது உவச்சர்கள் இருவருமெய்புக நிவந்தமான காளம் இரண்டும், சங்கு இரண்டினொடும் ஊதுவதாகச் செய்த நிலம் நான் மா அரை," என்னும் திருத்துருத்திக் கல்வெட்டுப் பகுதியால் உவச்சர் என்பதற்கு ஈண்டுக் கூறிய பொருள் பொருந்துவதாகும்.

## கோயிலின் சிற்சில பகுதிகளைக் கட்டுவித்தவர்

அர்த்தமண்டபத்தின் வடபால் துர்க்காதேவிக்குக் கீழண்டைப் பக்கத்தில் திருவாவடுதுறையாரைத் தொழுவாராக ஒரு ஆடவரின் பிரதிமமும், அவர்க்குப்பின் ஒரு அம்மையாரின் பிரதிமமும் இருக்கின்றன. அவர்கள் இக் கோயிலில் ஒருபடை செய்வித்தவர் ஆவர். அப்பிரதிமங்களுக்கு அருகில் "இக்கோயில் ஒருபடை செய்விச்சு இநின்றான் வாம பூசலுடையான் எழுவன் சந்திரசேகரன். இவன் பின்பே நின்றாள் பெரிய வேளத்து வானல்லடிகள் நக்கன் என்று செதுக்கப்பட்டிருக்கின்றன. அர்த்தமண்டபத்தின் தென்பாகம் பிள்ளையார்க்குக் கீழ்ப்பாகத்தில் "கல் கட்டுவித்தார் பல்லவ மகாதேவியார் சிவகாமு" என்று செதுக்கப்பட்டுள்ளது. இதனால் அவ்வம்மையார் அப்பக்கத்தில் உள்ள கற்களை உதவி கட்டுவித்தார் என்று பெறப்படுகின்றது. அர்த்த மண்டபத்து வாசலின் வடபால் மார்பிற்கு நேரே கைகளைக் குவித்து இறைவனை வழிபடும் நிலையில் ஒரு பிரதிமம் இருக்கின்றது. அதன் பக்கத்தில் "ஸ்வஸ்திஸ்ரீ திருநறையூர் நாட்டு சிற்றுடியான தாமன் அம்பலவன் நமசிவாய" என்று பொறிக்கப்பெற்றுள்ளது. இவ்வம்பலவனும் இப்பகுதியில் திருப்பணி செய்தவன் ஆதல்வேண்டும். கர்ப்பஇல் தென்புறத்தில் தட்சிணாமூர்த்திக்குப் பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கும் வண்ணம் ஒரு பிரதிமம் இருக்கிறது. அதன்கீழ் "ஸ்ரீ திருவாவடுதுறை உடையார் அடியான் அம்பலவன் திருவிசலூரான் திருநாவுக்கரையன்" — என்று செதுக்கப்பட்டுள்ளது. இவனும் இத்திருப்பணிக்கு உதவி செய்தவன் ஆவன்.

## மகாமண்டபத்தைக் கட்டியவர்

கற்றளிப்பிச்சர் காலத்தில் கர்ப்பஇல், அர்த்தமண்டபம் இவைகள்தான் கட்டப்பட்டன. மகாமண்டபம் திருவாவடுதுறைக்கு அண்மையில் இருக்கும் இளங்காரிக்குடி என்னும் ஊரில் இருந்த சங்கரதேவனால் கட்டப்பட்டதாகும். மகாமண்டபத்தின் தூண்கள் இரண்டில் சங்கரதேவன் மண்டபம் என்றும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

## இறைவரின் திருப்பெயர்

திருவாவடுதுறை உடைய ஆழ்வார், திருவாவடுதுறைஉடைய பரமசுவாமி, திருவாவடுதுறை உடைய பெருமானடிகள் என்னும் பெயர்களால் குறிக்கப் பெறுகின்றனர்.

## திருவிழா

இக்கோயிலில் முதலாம் இராசராசன் காலத்து ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டும், கங்கைகொண்ட சோழனது இரண்டாவது மகனாகிய விசயராசேந்திரன் காலத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டும் புரட்டாதி பூரட்டாதித் திருநாள் நடைபெற்று வந்ததைக் குறிப்பிடுகின்றன. இவ் விழாவின்போது ஏழு அங்கங்களைஉடைய ஆரியக்கூத்து ஆடப்பெற்று வந்தது. நாடகமும் நடிக்கப் பெற்றது. இவைகளுக்காக நிபந்தங்களும் அளிக்கப்பெற்று வந்தன.

அக்கல்வெட்டு:-"கோராஜராஜ கேஸரி வன்மற்குயாண்டு ஒன்பதாவது தென்கரை திரைமூர்நாட்டு பிரமதேயம் சாத்தனூர்

ஸபையோம் இவ்வாட்டை துலாநாயற்று சனிக்கிழமைபெற்ற திருவோணத்துநாள் அறச்சாலை அம்பலத்தே கூட்டங்குறைவறக் கூடியிருந்து செய்த பரிசாவது:—திருவாவடு துறை ஆள்வார் திரு உற்சவம் புரட்டாதிப் பூரட்டாதிக்கு ஆரியக்கூத்து ஏழு அங்கம் ஆடுவதுவுக்கு சந்திராதித்தவல் ஆட நிர்த்த போகம் செய்து குடுத்த நிலமாவது. முன் புரட்டாதி பூரட்டாதி திருநாளில் ஆடி உளைக்கின்ற வடுக மாங்குடி பாண்டிகுலா சனிக்கு தென்கரை சாக்கைவேலி ஆனநிலம் அளவுபடி அரையே இரண்டுமாவும் திருவா வடுதுறை ஆழ்வார் தேவதானம் நெற்குப்பை பதினறுவேலியும் வடகிழக்கடைய மாம் பள்ளி வாய்க்காலினுக்கு வடக்கு நிலன் முக்காலும் ஆகநிலன் ஒன்றே எழுமாவும் தாங்கள் வேண்டும் பரிசு அநுபவித்து புரட் டாதித் திருநாளில் திருமூல நாயனுரது நாட கம் சொல்லி வரவிட ஏழு அங்கம் ஆடுவ தாகம். இப்பரிசு சந்திராதித்தவல் செய்யக் கடவராகவும்'' என்பதாகும். இவ்விழா ஏழுநாள் நடைபெற்றுவந்தது. விழாநாட் களில் சிவயோகிகளுக்கும் பன்மாஹேஸ்வரர்க்கும் அமுது படைக்கப் பெற்று வந் தது. இதன் பொருட்டு மிறைக்கூற்றத்து வீரமாங்குடி உடையான் தாயங்காடன் என்பவன் சிறுபுலியூரிலும், சிற்றுணைச்சூரி லும் நிலம் வாங்கி அளித்திருந்தான்.

**இச்செய்திகள்:—**

"சிவயோகிகளுக்கு மிடு மரிசிமுக்கல மும் பன்மாஹேஸ்வரர்க்கு இடும் அரிசி ஏழு கலமும் சதையத்திஞன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி எண்கலமும் திர்த்த மாடும் பூரட்டாதிநான்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி ஐங்கலமும் பங்மாஹேஸ்வரர்க்கு இடும் அரிசி பந்நிரு கலமும் ஆக இவ்வேழு நாளும் அடக்கடவ அரிசி ஐம்பத்திருகலமும் அணைத்து நாளைக்குமாக பயறு ஐங்கலமும் இப்படி மடபதிவட்ட தீர்த்தமாடினபிற்றை நான்று திருக்கொடி இழிச்ச கும்பத்துக்கும் புடைவைக்குமாக பொன் அரைக் கழஞ்சும், கலசமும் சாலும், குடமும், கலமும் இடும் குசவனுக்குப் பொன் காலும், கறியமிர்துக் கும் நெய்யமிர்துக்கும் தயிர் அமிர்துக்கும் அடைக்காய் அமிர்துக்கும் ஆக நெல்லு தூணிப்பதக்கும் இவ்வூர் சத்திவிளாகம் வேலியும் கொண்டு இவ்வூட்டுட்டு இப்படி செய்விக்கும் மடபதிக்கு இதன்கீழைக் கற் றேய்யுங் கொண்டு வீரமாங்குடையான் தாயங்காடன் வழியிலார் ஏழுநாளும் மடபதி யோடே நின்று இவ்வரிசி அனுப்பிச்சு கொண்டு கண்காணியா அடுவிச்சு ஊட்டு விப்பானுக்கு நிசதிப் பதக்காக அரிசி கலனே பதக்கும் குடுத்து இப்படி செய்விச்சு இநிவந் தப்படி செய்வித்து நின்ற புன்செய்யிலும் கொல்லையிலும் கிழக்கடையிலுமா நிலம் திருநந்தவனம் செய்வித்து தெங்கும் உள்ளன எல்லாம் கொண்டும் மடபதியே திருநாள் ஏழு நாளைக்கும் இவ்வூட்டுக்கு வேண்டும் விசத்துக்கு கொள்விதாகவும்; நின்ற புன் செய் கொல்லையும் அடுத்துக்கொண்டு நெய்க் கும் அட்டு, இதினுக்கு அதிகம் பொன்னுக் கும் வெற்றிலைக்கும் உப்புக்கும் மற்றும் பல காயத்துக்கும் எண்ணெய்யும் விறகும் மற் றும் வேண்டும் விசத்துக்கும், திருநாள் ஏழு நாளைக்கும் ஊட்டுக்கு வேண்டும் கலமிடும் குசவனுக்கும் பொன் அரைக் கழஞ்சும் இவ னுக்கு ஏழு நாளைக்கு நிசதி குறுணி அரிசி யாக எழுகுறுணி அரிசிக்குமாக நந்தவானம் போக்கி நின்ற புன்செயும் கொல்லையும் அமைத்துக்கொண்டு இத்தனையும் குறை வறுத்துக்கொண்டு, மடபதி ஊட்டுவிக்க வும்.''—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். (இது ஒரு பெரிய கல்வெட்டு. விரிவஞ்சி ஒருபகுதியை இங்கே கொடுத்துள் ளேன்.)

## நாஞவித நடனசாலை

முதற் குலோத்துங்க சோழனது நான் காம் ஆண்டுக் கல்வெட்டு நாஞவித நடன சாலை திருவாவடுதுறைக் கோயிலில் இருந்த தைக் குறிப்பிடுகின்றது.

## மடங்கள்

கங்கைகொண்ட சோழனது கல்வெட்டு அவனுடைய குருவாகிய சர்வசிவபண்டிதர் திருப்பெயரால் ஒரு திருமடம் திருவாவடு துறையில் இருந்ததைக் குறிப்பிடுகின்றது. முதற் குலோத்துங்க சோழதேவர் காலத்து கல்வெட்டுக்களில் திருநீலவிடங்கன் மடம், திருவீதி விடங்கன்மடம், சிவலோக நாயகன் மடம், நாற்பத்தெண்ணுயிரவர் மடம் என் பவைகளும், விக்கிரமசோழன் காலத்துக் கல் வெட்டில் முந்நூற்று இருபத்து நால்வர்மட

மும் குறிக்கப் பெற்றுள்ளன. இம்மடங்களில் விழாக் காலங்களிலும் ஏனைய காலங்களிலும் திருவாவடுதுறை உடையாரை வழிபட வந்த பிராமணர், தபஸியர், அநாதையர் இவர்களுக்கு உணவுகள் அளிக்கப்பட்டன.

## அறச்சாலைகள்

அனந்தபாலர் பெருந்திருவாட்டி அறச்சாலை: இதை நிறுவியவர் உய்யக்கொண்டார் வளநாட்டு பேராவூர் நாட்டு இளங்காரிகுடி என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவனும், கங்கைகொண்ட சோழபுரத்து, கங்கைகொண்ட சோழன் திருக்கொற்ற வாசலில் புறவாயில் சேனுபதியாய் இருந்தவனுமாகிய சங்கரன் அம்பலவன் கோயில் கொண்டானை அனங்கபாலன் என்பவன் ஆவன். இச்செய்தியை மூன்றும் பிராகாரத்துள்ள முதற் குலோத்துங்கன் கல்வெட்டு உணர்த்துகின்றது. இதுவேயன்றி விக்கிரமசோழனின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டில் திருவாவடுதுறை உடையார் கோயில் சிவலோகநாயகன் திருவாசலின் முன் பக்கத்தில் சங்கரதேவன் அறச்சாலை ஒன்று இருந்தது. எனவே திருவாவடுதுறை சோறு மணம் கமழ்ந்ததாய் இருந்தது. விக்கிரமசோழன் காலத்தில் குறிக்கப்பெற்ற முந்நூற்று இருபத்து நால்வர் மடத்தில், மருத்துவம், இலக்கணம் இவைகளைப் படித்தவர்களுக்கும் உணவுகள் அளிக்கப் பெற்றுள்ளன.

## தர்மவைத்தியசாலை

கங்கைகொண்ட சோழனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு இவ்வூரில் ஆழ்வார் ஸ்ரீ பராந்தகன் ஸ்ரீ குந்தவை பிராட்டியார் ஒரு வைத்தியசாலை நிறுவியிருந்ததைக் குறிப்பிடுகின்றது.

திருமாளிகைத் தேவரைப் பற்றிய குறிப்பு: (1) திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு நான்காவது குடும்ப நாயற்று பூர்வபட்சத்து புதன்கிழமையும் பெற்ற அனிழத்து நாள் (2) சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு உடையார் திருவாவடுதுறை உடையார் விக்கிரமசோழன் திருவீதியில் எழுந்தருளியிரு...... (3) திருமாளிகைச் சுப்பிரமணியர் (4) கடமை இருமையில் இந்நிலம் இத்திருமாளிகை சுப்பிரமணிய பிள்ளையார் கோயில் திருமாளிகைத் தேவர் திருநாமத்துச் சண்டேஸ......

[இவைகள் துண்டுக் கல்வெட்டில் (Fragment) பொறிக்கப்பெற்றுள்ளன.]

இவைகளினுல் இக் கோயிலில் ஒரு பிராகாரத்திற்கு விக்கிரமசோழன் திருவீதி என்றுபெயர் வைக்கப்பெற்றிருந்தது என்று தெரிகின்றது. மேலும் திருமாளிகைத் தேவர் பெயரும் காணப்படுகின்றது.

## செப்புத் திருமேனிகளும் பிரதிமங்களும்

இக் கோயிலில் எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள் பிரதிமங்கள் இவைகளைக் குறிக்கும் கல்வெட்டு கர்ப்பஇல்லின் மேற்குப் புறச்சுவரில் அதாவது இலிங்கோற்பவர்க்குத் தென்பக்கத்தில் இருக்கின்றது. இவைகளுக்கு அளவுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன :—

(1) திருச்சிற்றம்பலமுடையார் திருமேனி, ஆடி அருள வாசிக்கும் பூதமமைந்த பீடமும் பிரபையும் உட்படமும் முழ உசரத்து ஒருவர் இவர்தம் பிராட்டியார் பீடமும் பிரபையும் உட்பட இருந்த ஒருமுழமும் அறுவிரல் உசரத்து ஒருவர். (2) சந்திரசேகர தேவர் பீடம் உட்பட இருமுழ உசரத்து ஒருவர். இவர் நம்பிராட்டியார் பத்மத்தோடு ஒருமுழ உசரத்து ஒருவர். (3) திரிபுவன சுந்தரர் பீடமும் பிரபையும் உட்பட மும்முழ உசரத்து ஒருவர். (4) கணவதியார் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழ உசரத்து ஒருவர். (5) சந்திரசேகர தேவர் பீடமும் பிரபையும் உட்பட ஒருச்சாணும் ஒருவிரல் உசரத்து ஒருவர். (6) க்ஷேத்திரபாலதேவர் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழ உசரத்து ஒருவர். மேற்படி தேவர் பீடம் உட்பட ஒருச்சாணே நால்விரல் உசரத்து ஒருவர். இஷபவாகன தேவரும் பிராட்டியாரும், இஷபமும் பீடமும் பிரபையும் உட்பட மும்முழ உசரத்து ஒருவர். பிச்சதேவர் மானும் பூதமும் பீடமும் பிரபையும் உட்பட இருமுழம் மூவிரல் உசரத்து ஒருவர். அர்த்தநாரி தேவர் பத்மத்தோடு ஒருமுழமும் ஒட்டை உசரத்து ஒருவர். தக்ஷிணமூர்த்தி ......ஒருமுழ உசரத்து ஒருவர். பள்ளிக்கட்டில் நம்பிராட்டியார் பீடமுட்பட இருமுழ உசரத்தொருவர். அஸ்திரதேவர் நடுவுமாகத் தண்டொடும் ஒருவர். இஷபதேவர் பீடமுட்பட திருக்காம்பளவும் ஈரொட்டை உசரத்து ஒருவர். சண்டேசுவர தேவர் பீட

முட்பட இருந்த ஒருமுழ வுசரத்து ஒருவர். திருநாவுக்கரையர் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழமும் நால்விரல் உசரத்து ஒருவர். சிவஞான சம்பந்தடிகள் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழமும் நால்விரல் உசரத்து ஒருவர். நம்பி ஆரூரனுர் பத்மத்தொடு ஒரு முழமும் எட்டுவிரல் உசரத்து ஒருவர்.

இக்கல்வெட்டில் திருஞானசம்பந்தப் பெருந்தகையாரை, திருஞான சம்பந்த அடிகள் என்று குறிப்பிட்டிருப்பது,

'யாவருக்குந் தந்தைதாய்
எனுமிவரிப் படிஅளித்தார்
ஆவதனுல் ஆளுடைய
பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்கும்
தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான
சம்பந்த ராயினுர்''

என்னும் சேக்கிழார் வாக்கை நம் நினைவிற்குக்கொண்டு வருவதாகும். (திருஞான சம்பந்தர் புராணம் 69-ஆம் பாடல்)

## பரிகலங்களும் திருவாபரணங்களும்

"உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் நம்பிராட்டியார் திரைலோக்கிய மாதேவியார் தங்கள் ஆச்சியார் இராமன் அபிமான தொங்கியார் திருவாவடுதுறை உடையார்க்கு அமுது செய்தருள வெள்ளித் தளிகை ஒன்று நிறை குடிஞைக்கல்லால் எழுபதின்கழஞ்சும் மேற்படியாரே உடையார்க்குக் கொடுத்த பொற்கொள்கை ஒன்று குடிஞைக்கல்லால் நிறை செம்பொன் நானூற்று ஒருபத்து முக்கழஞ்சரையும், ராஜாதிராஜ தேவர் கொடுத்தபொன் இருபத்தறு கழஞ்சும், பெரிய வேளத்து அலோயன் அணுக்கி இட்ட பொன் நூற்றுமுப்பத்து எண் கழஞ்சும் மேற்படி வேளத்து......... இட்டபொன் முப்பத்தறு கழஞ்சே முக்காலும் உள்பட செய்த பொற்பூ இருபத்தேழும் செங்கழுநீர்ப்பூ முப்பத்தாறும், மாந்தளிர் ஒன்றும் பிச்சதேவர் கண்டக்காறை ஒன்றும் பொற்கை ஈச்சோப்பி ஒன்றும் முன்பு கல் வெட்டின கொள்கையிலும், ஆக இத்தேவர் அடியான் திருநாவுக்கரையன் பிச்சையால் வந்த குடிஞைக்கல்லால் மானப்பொன் அறுநூற்று எழுபதின்கழஞ்சேய் முக்காலே மூன்று மஞ்சாடியும், முன்புள்ள பொன் உடையார் சாத்தும்......பட்டம் ஒன்றும் பொற்பூநாலும் ஆட வல்லார் சாத்தும் பொற்பூ இருபத்தொன்றும் இவன் சாத்தும் முத்துச் சரி நாலினுல் பொன்னும் சந்திரசேகரதேவர் திருபஹிவேகம் ஒன்றும் திருவடிநிலை இரண்டினுல் போந்த பொன்னும் உள்ளிட்டு திருமேனிகள் சாத்தும் திருவாபரணங்களாலும் பொற்கை ஈச்சோப்பியாலும் ஆக குடிஞைக்கல்லால் ராஜராஜன் மாடைக்கீழ் ஒன்பது மாறி பொன் நானூற்று அறுபத் தொருகழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் ஆக பொன் ஆயிரத்து ஒரு நூற்று நாற்பத்திருகழஞ்சே ஏழுமஞ்சாடி. வெள்ளி முதல் குடிஞைக் கல்லால் ஆயிரத்து முப்பதின் கழஞ்சினுல் தபசி திருநாவுக்கரையன் எழுந்தருளுவித்த வெள்ளித் திருமேனி பீடமும் பிரபையும் உட்பட ஸ்ரீபலி எழுந்தருளின திருமேனி ஒருவர். வெள்ளிப் பரிகலம் உட்பட உரு ஒன்பதும் முன்பு கல் வெட்டின தளிகை ஒன்றும் ஆக ஒருபத்தினுல் குடிஞைக்கல்லால் வெள்ளி ஆயிரத்து இருநூற்று எழுபத்து நாற்கழஞ்சே முக்காலே இரண்டுமஞ்சாடியும், மேற்படி வெள்ளி மண்டை ஒன்றும், வட்டில் ஒன்றும் ஆக நூற்றுமுப்பத்து இருகழஞ்சேய் கால். மேற்படி பொற்பூ பதினேழும் இதர புஷ்பம் ஒன்றும் செங்கழுநீர்ப்பூ முப்பதும் ஆக பொன் நூற்று அறுபத்து நாற்கழஞ்சு...... என்னும் கல்வெட்டுப் பகுதியால் இவைகளை அறியலாம்.

## அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்

முதற் பராந்தக சோழன் இக்கோயில் குடப்படை பீடத்துக்குமேல் திருப்பணி செய்வதற்குத் தன் முப்பத்தெட்டாம் ஆட்சி யாண்டில் ஐந்நூறு கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். இதை உணர்த்தும் கல்வெட்டு:-

"திருவாவடுதுறை பெருமான் திருவடி தொழுது திருக்கற்றளி செய்ய ஐஞ்ஞூற்றுக் கழஞ்சு பொன்கொண்டு குடப்படை பீடத்துக்குமேல் செய்கின்றது ஸ்ரீ பராந்தகர் தேவர் பொன்னுல் செய்கின்ற திருப்பணி" என்பதாகும்.

திருவாவடுதுறைக் கற்றளிப்பிச்சர், திருவாவடுதுறை உடையார்க்குத் திருமஞ்சனம் அட்டுவதற்கும், திருப்பதியம் பாடுவார் ஒருவர்க்கும், உவச்சர்களுக்கும் ஆக சிற்றுஊச்சூரில் நிலம் வாங்கி அளித்திருந்தான்,

இது நிகழ்ந்தது கோப்பரகேசரி வர்மரின் மூன்றும் ஆட்சியாண்டாகும்.

பராந்தக சோழனது 38-ஆவது ஆண்டில் கற்றளிப்பிச்சரிடம் பொன் கொண்டு சிற்றூனேச்சூர் சதுர்ப்பேதி மங்கலத்தார் தங்கள் ஊரில் வாணியன் பெருவழிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை வழி கரம்புக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை உடறுவாய்க்காலுக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை இலுப்பைச் செய்க்குத் தெற்கும் ஆக இந்த நான்கு எல்லையிலும் அகப்பட்ட நிலத்தை திருவாவடுதுறை உடையாரின் பொருட்டு விற்றுக் கொடுத்துள்ளனர். (இக் கல்வெட்டு அர்த்த மண்டபத்து வாசலின் தென்பால் இருக்கிறது)

இப் பராந்தகனது 39-ஆம் ஆட்சியாண்டில் வடகரை தேவதானம் கார் நாட்டுத் தனிக்கடம்பூர் உடையான் கண்ணி புலியூர் நக்கர் திருவாவடுதுறை ஆழ்வார்க்கு சங்கிராந்திதோறும் முக்குறுணி நெல்லின் அரிசியால் அமுதுசெய்விப்பதற்கும் நூற்றெட்டு கலசத்தில் ஸ்நபநம் செய்விக்கவும், அக் கலசத்தின்கீழ் அட்டும்நெல்லு நாற்றுாணிக்குமாக எண்கழஞ்சு பொன் கொடுத்து அதற்கு மூன்றுமா நிலத்தை வாங்கிக் கொடுத்துள்ளான்.

இப் பராந்தகனின் மூன்றும் ஆட்சியாண்டில் வெண்ணுட்டு பிரமதேயம் திருவீழிமிழலை ஆரிதன் நீலன் வடுகையன் நாற்பத்தைங்கலம் நெல் கொடுத்து அந்நெல்லுக்கு அவ்வருடம் ஐப்பசித் திங்கள் முதல்கொண்டு, அந்நெல்லுக்குக் கலத்துக்குக் குறுணிப் பலிசையால் ஓராட்டை நாளைக்கு வந்த நெல்லு பதிெனுருகலனே முக்குறுணி. இப் பலிசையால் வந்த நெல்லுக்கு அறுகுறுணி கொள்ளிக் குடத்தால் காவிரி நின்றும்போது ஒருகுடம் திருமஞ்சன நீராக மூன்றுபோதுக்கும் முக்குடம் நிசதம் சந்திராதித்தவல் அட்டுவதற்கு நிவந்தம் செய்திருந்தான்.

## பாண்டியன் அளித்த நிவந்தம்

விக்கிரம பாண்டியன் திருவாவடுதுறை உடையார்க்குத் தம் பேரால் விக்கிரம பாண்டியன் சந்திக்கும், தாம் பிறந்த நாள் அத்தத்துக்கும் ஆக இறைவரை எழுந்தருளச் செய்வதற்கு வேண்டும் சாத்துபடி உள்ளிட்டனவற்றிற்கு விருதராஜ பயங்கரவளநாட்டு கஞ்சனூர்ப்பற்றுத் தயிலோக்கியான விருதராஜ பயங்கர சதுர்வேதி மங்கலத்திலும், துறைசார் அகரமான இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்திலும் அறுபது வேலி நிலத்தைக் கொடுத்துள்ளான்.

## திருவாவடுதுறையைத் தன்னகத்துக் கொண்டுள்ளநாடு

முதற் பராந்தகன் காலத்துக் கல்வெட்டுக்கள் சிலவற்றில், இவ்வூர், "தென்கரைத் திரைமூர் நாட்டுப் பிரமதேயம் சாத்தனூர் ஸ்ரீதிருவாவடுதுறை ஆழ்வார்க்கு"— என்று குறிக்கப் பெற்றுள்ளது. இதில் தென்கரை என்பது காவிரிக்குத் தென் கரையாகும். திரைமூர் நாடு என்பது திரைமூர் என்னும் ஊரைத் தன்னகத்துக் கொண்ட நாடாகும். சாத்தனூர் திருவாவடுதுறை என்றது சாத்தனூர்க்கு அருகிலுள்ள திருவாவடுதுறை என்று பொருள் படும். இக்காலத்தும் தஞ்சை மாவட்டத்தில் வழுத்தூர் ஐயன்பேட்டை, மணக்கால் ஐயன்பேட்டை என்பவைகளைப்போல. [வழுத்தூர் ஐயன்பேட்டை என்பது வழுத்தூருக்கு அருகில் உள்ள ஐயன்பேட்டை. மணக்கால் ஐயன்பேட்டை என்பது மணக்காலுக்கு அருகில் உள்ள ஐயன்பேட்டை என்னும் பொருளில் உள்ளன] சாத்தனூர் தனி ஊர் ஆகும். இது திருவாவடுதுறைக்குத் தெற்கே இரண்டு மைலுக்குமேற்பட்ட தொலைவில் உள்ளது. இவ்வூரில் உள்ள சாஸ்தா(அ) ஐயனுர் கோயிலில் முதலாம் இராசேந்திர சோழனின் மகனது கல்வெட்டு மகாமண்டபத்துத் தூணில் இருக்கிறது. அதில் சாத்தனூர் தனி ஊராகவே குறிக்கப் பெற்றுள்ளது. [இக்கல்வெட்டு இதுவரை கல்வெட்டுத்துறையாளரால் படி எடுக்கப்படவில்லை. இக்கோயிலில் திருமூல நாயனரின் கருங்கல் பிரதிமம் ஒன்றும் இருக்கின்றது.] சேக்கிழார் பெருந்தகையாரும் சாத்தனூரைத் தனி ஊராகவே குறித்துள்ளார்.

முதலாம் இராசராசன் காலத்தில் இத் தென்கரைத் திரைமூர் நாட்டுத் திருவாவடுதுறை உய்யக்கொண்டார் வளநாட்டுக்கு உட்பட்டிருந்தது. உய்யக்கொண்டார் வளநாடு என்பது காவிரிக்கும் அரிசிலாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் இந்த நாடு ராஜநாராயண வளநாடு என்னும் பெயர்பெற்

றது. மூன்றுங் குலோத்துங்கன் இந்த ராஜ நாராயண வளநாட்டின் பெயரை மாற்றி ஜெயங்கொண்ட சோழவளநாடு என்னும் பெயரை வைத்துள்ளான். அதுவே பிற்காலத்திலும் வழங்குவதாயிற்று.

## பொதுச் செய்தி

திருமூலநாயனுரைப் பற்றிய நாடக நூல் இக்கோயில் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது. அது இதுபொழுது கிடைக்கவில்லை. இவ்வூர்க் கல்வெட்டில் சண்டேஸ்வர நாயனுர் "திரிபுவனபதிக்கு மூலப்பிரத்தியனுகிய ஆதி சண்டேஸ்வரதேவர்"—என்று குறிக்கப்பெற்றுள்ளனர். (மூலப்பிரத்தியன்—பழைய அடியான்) ஆரியக்கூத்தை உணர்த்தும் கல்வெட்டுக்கு அருகில் இக்கூத்தின் ஒரு அங்கம் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

---

திருச்சிராப்பள்ளி:—தாயுமானவர் கோயிலில் திருக்குடமுழுக்குப் பெருவிழா 9-4-62ல் நடைபெற்றது.

சோளசிங்கபுரம்:—இட்சுமிநரசிம்ம சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 24—4—62 வரை நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி:—தாயுமானவர் கோயிலில் சித்திரைத் தேர்விழா 10 4-62 முதல் 24-4-62 வரை நடைபெற்றது.

திண்டுக்கல்:—காளகத்தீசுவர சுவாமி கோயில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்:—காசிபநாதர் மரகதாம்பாள் கோயிலில் பங்குனித் திருவிழா 5—4—62 முதல் 14—4—62 வரை நடைபெற்றது.

திருக்குற்ருலம்:—குற்ருலநாதசுவாமி கோயிலில் சித்திரை விசுத்திருவிழா 4-4-62 முதல் 14—4—62 வரை நடைபெற்றது.

கோவில்பட்டி:—பூவணநாதசுவாமி கோயிலில் பங்குனி பிரம்மோற்சவம் 5-4-62 முதல் 14—4—62 வரை நடைபெற்றது. விழாநாட்களில் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருக்குடந்தை:—இராமசுவாமி கோயிலில் ஸ்ரீராமநவமி உற்சவம் 5—4—62 முதல் 14—4—62 வரை நடைபெற்றது.

சென்னை:—அருணுசலேசுவரர், வரதராஜப்பெருமாள் கோயிலில் வசந்த மகோற்சவம் 9—4—62 முதல் 22—4—62 வரை நடைபெற்றது.

திருக்கச்சூர்;—அமிர்ததியாகராஜ சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

சிவபுரம்:—சிவகுருநாத சுவாமிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 9—4—62-ல் நடைபெற்றது.

திருக்கலசநல்லூர்:—அமிர்தகலசநாத சுவாமிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சுபகிருது ஆண்டு ஆவணி மாதத்தில் நடைபெறவிருப்பதால் பொருள் உதவி செய்ய விரும்புவோர் அக்கோயில் திருப்பணிக் கமிட்டிக்கு அனுப்பிவைக்கவும்.

இராஜபாளையம்:—மாரியம்மன் கோயிலில் திருவிழா 10—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்:—புருஷோத்தமப்பெருமாள் கோயிலில் சித்திரைப் பௌர்ணமித் திருவிழா 10—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

மொடக்கூர்:—மெய்ப்பொருள்நாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 12—4—62 முதல் 23—4—62 வரை நடைபெற்றது.

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருவண்பரிசாரம் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. இத்தலத்தைப்பற்றி நம்மாழ்வாரொருவரே பதிகம் பாடியுள்ளார். திருவாய்மொழியில் எட்டாம்பத்தில் மூன்றாவது பதிகம் அது. அதில் மூன்று பாசுரங்களை முன்னம் அநுபவித்தோம். நான்காவது பாசுரம் முதலாக இப்போதனுபவிப்போம்.

4. ஞாலம் போனகம்பற்றி
   ஓர்முற்று வுருவாகி
ஆலம் பேரிலை அன்னவசஞ்
   செய்யு மம்மானே!
காலம் பேர்வதோர் காரிருளூழி
   யொத்துளதால், உன
கோலங் காரெழில் காணலுற்றாழுங்
   கொடி யேற்கே.

மிகச் சிறுபிராயமான வடிவையுடையையாய் உலகத்தையெல்லாம் அமுது செய்து மிகச்சிறிய ஆலந்தளிரிலே திருக்கண் வளர்ந்தருளின அண்ணலே! காளமேகம் போன்றழகிய உனது வடிவழகைக் காணவேணுமென்றாசைப்பட்டு அவ்வாசையிலே ஆழங்காற்பட்டிருக்கு மடியேனுக்கு நிகழ்கின்ற ஒரு கணப்பொழுதும் காடாந்தகாரம் மிக்க கற்பாந்த காலம்போல் நீள்கின்றது—என்பது பாட்டின் பொருள்.

கீழ்ப்பாட்டில் ஆழ்வார் "வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்று அஞ்சினவாறே, எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! நம்மைப்பற்றி நீர் அஞ்சக்கடவீரோ? நம்முடைய ஸர்வரக்ஷகத்வப் பெருமையை நீர் அறியீரோ?' என்று அப்பெருமையை நினைப்பூட்டினான்; அதாவது, ஞாலமேழுமுண்டு ஆலமாமரத்தினிலைமேலொரு பாலகனாய்க் கிடந்த கிடையைக் காட்டிக் கொடுத்தான்; அதை அநுஸந்தித்துத் தம்முடைய தளர்ச்சியை விண்ணப்பஞ் செய்கிறாரிதில்.

ஞாலம் போனகம் பற்றி—ஆலிலை யமர்ந்த பெருமானுக்கு உலகம் முழுவதும் உணவாயிற்று; 'இது நமக்கு ஸாத்மிக்குமா? ஸாத்மியாதா?' என்று கூட ஆராயாமல் பூமிப் பரப்பையெல்லாம் வயிற்றினுள்ளே எடுத்து வைத்துக் கொண்டனையே பிரானே! என்று வயிறெரிகிறார். அதற்குமேலே மற்றொரு வயிற்றெரிச்சலுமாகிறது ஓர் முற்றாவுருவாகி என்று. சிறிது பருவம் முதிர்ந்திருந்தால் ஆறியிருக்கலாம்; அந்தோ! மிகச் சிறு குழந்தை வடிவமானபடி என்! என்று வருந்துகிறார். அதற்குமேலே மற்றொரு வயிற்றெரிச்சலுமாகிறது ஆலம் பேரிலை அன்னவசஞ் செய்யுமம்மானே! என்று. 'பேரிலை' என்றது எதிர்மறை யிலக்கணையால் சிறிய இலை என்றபடி. மிகச் சிறிய ஆலந்தளிரிலே திருக்கண்வளர்ந்தருளினபெருமானே! என்றதனால் பெரியதோர் ஆலிலையிலே பள்ளி கொண்டாலாவது ஆறியிருக்கலாம்: அந்தோ! சிற்றாலந்தளிரிலே சயனித்தருளினமையை நினைத்தால் ஆறியிருக்க முடியவில்லையே யென்கை. வயிறாரவுண்டதனால் வருமுறக்கத்திற்கு அன்னவசமென்று பெயர்; வையமேழையு முண்ட ஆயாசத்தினால் திருக்கண் வளர்ந்தருள நினைத்தால் விசாலமான தோரிடத்தைக் கற்பித்துக்கொண்டு அதிலே "தன் தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பி" என்னும்படியே இடம் வலங்கொள்ளப் பாங்காகக் கண்வளர்ந்தருள லாகாதோ? மிகச்சிறியதாய் முகிழ்விரியாததான ஆலந்தளிரிலேயோ சயனிப்பது? சரிந்து விழுந்தால் அந்தோ! என்னாகும்! என்று வயிறு பிடிக்கிறார்.

இனி பின்னடிகளால் தம்முடைய அச்ச மிகுதியை விவரிக்கிறார் ஆழ்வார். "காரெழில் உன் கோலம் காண லுற்று ஆழும் கொடியேற்கு, பேர்வதோர் காரிருளூழியொத்துளதால்" என்று இயைப்பது. மங்களா சாஸனம் பண்ணுகைக்கு உனது காளமேகத் திருவுருவைக் காண ஆசைப்பட்டு அது பெறாதே நோவுபடுகிற பாவியான வெனக்கு ஒரு கணப்பொழுதும் ஆயிரமூழியாய் நெடுகா நின்றது காண் என்கை. முன்னோர்களின் மிகவினிய வியாக்கியனச் சொல்

தொடர் காணீர்:—"ஓர் முற்றுவுருவாய் அந்தப் பிள்ளைத்தனத்தாலே ஸர்வலோகங்களையும் அமுது செய்து, பெரிய வெள்ளத்திலே சிறியதோராலிலையிலே யசோதைப் பிராட்டியைப் போலே யிருப்பா ளொரு தாயாருமின்றியே தனியே திருக்கண் வளர்ந்தருளுகிற தசையிலே துணையாயிருக்கப் பெறுமையாலும் உன் வடிவழகைக் காண வாசைப் பட்டும் பெறுமையாலும் அகாத மான துக்கார்ணமத்திலே நிமக்நனாய்க் கிடக்கிற வெனக்கு ஒரு க்ஷணம் காலமானது அந்த காரமயமான ராத்ரியுகமாய்ச் செல்லுகிற தென்கிறார்'' என்று.

5. கொடியார் மாடக்
 கோளூரகத்தும் புளிங்குடியும்
 மடியாதின்னே நீதுயில்மேவி
 மகிழ்ந்தது தான்
 அடியாரல்லல் தவிர்த்த
 வசவோ? அன்றேல்இப்
 படிதான்நீண்டு தாவிய
 வசவோ பணியாயே.

கொடிகள் கட்டின மாடங்கள் நிறைந்த திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் இடம் வலங் கொள்ள இடம் போதாமல் இன்று காணும் விதமாகவே நீ மகிழ்ந்து திருக்கண் வளர்ந்தருள்வதானது, பல திருவவதாரங்களைச் செய்து அடியார்களின் துன்பங்களைப் போக்கின சிரமத்தினாலோ? அல்லது இப்பூமியை ஓங்கியளந்த சிரமத்தினாலோ? கூறியருளவேணும் என்பது பாசுரத்தின் பொருள். கீழ்ப்பாட்டிலே "ஆலம் பேரிலை அன்னவசஞ் செய்யு மம்மானே!" என்று பிரளயக்கடலிலே தனியே திருக்கண் வளர்ந்தமைக்கு வயிறெரிந்த ஆழ்வாருடைய வருத்தம் தீர, திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் பரிவர் பலர் புடைசூழத் திருக்கண்வளர்ந்தருளா நின்றபடியைக் காட்டிக் கொடுக்க, இக்கிடைகளிலே யீடுபட்டுப் பேசுகிற பாசுரமிது. இப்பாட்டில் திருக்கோளூரையும் திருப்புளிங்குடியையும் கூறியது மற்றுமுள்ள சயனத் தலங்களையுங் கூறியவாறு. "நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள், நாகத்தணை யரங்கம் பேர் அன்பில்'' என்று திருமழிசைப் பிரானும் "அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை'' என்று திருமங்கைமன்னனும் தொகுத்தருளின சயனத் திருப்பதிகள்பலவும் இங்கே திருவுள்ளம் பற்றியவை யென்க. இத்தலங்களில் ஆடாமல் அசையாமல் நீ திருக்கண் வளர்ந்தருள்வதற்கு என்ன காரணம்? மிகப் பெரிய சிரமமோ? திருவடிகளிலே சரணம் புகுந்த இந்திராதி தேவர்களுக்காக இராவணாதி ராக்ஷஸர்களை அழியச்செய்து அவர்களது துக்கங்களைப் போக்கினதாலுண்டான சிரமமோ? அன்றியே, அன்றே பிறந்து அன்றே வளர்ந்து மெல்லிய திருவடிகளைக் கொண்டு உலகமெல்லாம் தாவியளந்த சிரமமோ? பிரானே! சோதிவாய் திறந்து பணிக்கவேணும் என்கிறார். இக் கேள்வியிலும் மங்களா சாஸன பரதையின் மேம்பாடு காணத் தக்கது.

கொடியார் மாடம்—திவ்ய தேசங்களில் மாடங்களிலே கொடிகட்டியிருப்பது இயல்பு. ஆனால் இங்கு இதைச் சொன்னது ஆழ்வார் தம்முடைய அச்சத்தினா லென்று ஆசிரியர் விசேஷக் கருத்து உரைக்கின்றனர்; இங்கு நம்பிள்ளையருளிச் செய்யு மழகு பாரீர்— "கிடந்தவிட மறிந்து சத்துருக்கள் அபிசரிக்கும்படி [சூனியம் வைக்கும்படி] கொடி கட்டிக் கொண்டு கிடக்கவேணுமோ? கொடிக்கு அஞ்சவல்லார் இவ்வாழ்வாரைப் போலில்லை; கம்ஸபயத்தாலே ஒளித்து வளர்ந்தாப் போலே யிருக்கலாகாதோ?" என்று. இப்பதிகம் அச்சம் மிக்கு அருளிச் செய்வதாகையாலே இங்ஙனே கருத்துரைத்தது இன்சுவை மிக்கதேயாம்.

மடியாது—உலகில் உறங்குமவர்கள் சற்றுப்போது இடதுபக்கமாயும், சற்றுப்போது வலது பக்கமாயும் மாறிமாறி அசைந்து கிடப்பதுண்டே; அப்படி ஒருபோதும் அசையாமல் என்றபடி. இதற்கு மற்றொரு பொருளும் அருளிச் செய்யப்படுகிறது; அதாவது, திருப்பதிகளிலே எம்பெருமான் இப்படி திருக்கண் வளர்ந்தருள்வதானது நமக்காக வன்றோ வென்று இந்நிலவுலகத்தவர்கள் பரிந்து ஈடுபடவேண்டுமே; அப்படி ஒருவரும் ஈடுபடக் காணாமையாலே எம்பெருமான் இக்கிடையைவிட்டு எழுந்துபோக வேண்டியதன்றோ ப்ராப்தம்; அப்படியெழுந்து போகாமே என்பதாம். என்றேனு மொரு நாள் யாரேனுமொருவர் பரியக்கூடுமென்னும் நசையாலே பேராமல் கிடக்கிறானாகச் சொன்னவாறு.

6. பணியாவமரர் பணிவும்பண்பும் தாமே யாம்
அணியாராழியும் சங்கமுமேந்து மவர் காண்மின்
தணியா வெந்நோயுலகில் தவிர்ப்பான், திருநீல
மணியார் மேனியோடு என்மனஞ்சூழ
வருவாரே.

எவரையும் பணியவேண்டாத நித்ய ஸூரிகளினுடைய பணிவுக்கும் ஞானம் முதலிய குணங்களுக்கும் தாமே இலக்காயிருப்பவரும், ஆபரணமாகப் பொருந்திய திருவாழி திருச்சங்குகளைத் தாங்கி நிற்பவருமான அப்பரமபுருடர், ஒருகாலும் தணியாத வெவ்விய நோய்களைத் தவிர்ப்பதற்காக அழகியதாய் நீலமணி போன்றதான வடிவோடுகூட என் மனம் பிரமிக்கும்படியாக இவ்வுலகில் வந்து உலாவுவர் என்பது பாசுரத்தின் பொருள்.

கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய சயனத்தை நினைத்துப் பரிந்து பேசின ஆழ்வாரை நோக்கி 'நீர் இங்ஙனே துடிக்கக் கடவீரோ? அவன் ஸர்வரக்ஷகனன்றோ' என்று சிலர் சொல்ல, அதற்கு, நித்யஸூரிகளின் பரிவுக்கு இலக்கான அவன் ஸம்ஸாரத்திலே அவ்வடிவோடே வந்து உலாவாநின்றால் நான் இப்படி துடிக்காமலிருக்க முடியுமோ? வேறு என் செய்வது? என்கிறார். பணியா வமரர் என்று நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. எம்பெருமானைத் தவிர வேறு யரையும் ஒரு நாளும் பணிந்தறியாத அமரர்களன்றோ நித்ய ஸூரிகள். அன்னவர்களது பணிவுக்கும் ஞானம் முதலிய குணங்களுக்கும் தாமே இலக்காயிருக்குமவன் எம்பெருமானென்க. இம்முதலடிக்கு—நான்முகன் முதலிய தேவர்களுக்கு தங்களைப் பலரும் பணியும்படியான பெருமையையும் செல்வங்களையும் அளித்தவன் என்று கருத்துரைப்பாருமுளர். வணங்காமை என்கிற தன்மை சிலரிடத்திலே இழிவாகவும், சிலரிடத்திலே சிறப்பாகவும் சொல்லப்படும். வணங்குவதற் கென்றே பிறந்த நம் போல்வார் வணங்கா திருந்தால் அது 'வணங்கா மன்னன்' 'வணங்கலிலரக்கன்' என்று சொல்லும்படியாகி இழிவாகும். தேவர்களாயுள்ளவர்கள் எம்பெருமானைத் தவிர்த்து வேறு யாரையும் வணங்கக் கடவர்களல்லாமையாலே அவர்களைப் பணியாவமரர் என்றது பொருந்தும்.

அணியாராழியுஞ் சங்கமு மேந்துமவர் காண்மின்—என்றதன் உட்கருத்தை ஆசிரியர் வெளியிடுமழகு பாரீர்—"ஸர்வாபரணமும் தானேயாகப் போரும்படியான திவ்யாயுதங்களைத் தரித்து நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்தால், அவர்களும் கலங்கி இவ்வடிவுக்கு என் வருகிறதோ வென்று அஞ்சிப் பரிய வேண்டும்படியாயிற்று இருப்பது" என்பர் பூருவாசாரியர்கள். இங்கே ஆழ்வார் துடிக்கிற துடிப்பு திருநாட்டிலே நித்யஸூரிகளுக்கு முண்டாயிருக்கு மென்றவாறு. அஞ்சுவதற்கு நிலமல்லாத திருநாட்டிலேயே அப்படியானால் இந்நிலத்திற் சொல்ல வேணுமோ வென்கிறார் பின்னடிகளில். உலகில் என்பதை மூன்றாமடியிலும் அந்வயிக்கலாம். ஈற்றடியிலும் அந்வயிக்கலாம். 'உலகில் தணியா வெந்நோய் தவிர்ப்பான்' என்பது ஒருவகை. 'உலகில் வருவார்' என்பது மற்றொருவகை. தாபத்ரயம் முதலான துக்கங்கள் தணியா வெந்நோயெனப்படுகிறது.

திருநீலமணியார் மேனியோடு — அப்பெருமான் அவ்விபூதியை விட்டு இவ்விபூதியிலே வரவேண்டினால் நீலமணி போன்று ஸுகுமாரமான அவ்வடிவோடே வரவேணுமோ? அப்படி வருகையால்தான் என்மனம் சுழற்சியடைகின்றது என்பதை என்மனஞ்சூழ என்பதனால் காட்டினபடி.

7. வருவார் செல்வார் வண்பரிசாரத்திருந்த என்
திருவாழ்மார்வர்க்கு என்திறஞ் சொல்லார்
செய்வதென்?
உருவார் சக்கரம் சங்கு சுமந்திங்கு உம்மோடு
ஒருபா டுழல்வா னோரடியானுமுள னென்றே

ஒருதிசையில் நின்றும் வருமவர்களும் மற்றொரு திசையில் நின்றும் போமவர்களுமான மனிசர்கள் திருவண்பரிசாரத்திலெழுந்தருளியிருக்கிற என்னுடைய திருமாலுக்கு, வடிவழகார்ந்த திருவாழி திருச்சங்குகளைச் சுமந்து கொண்டு இங்கு உம்மோடு ஒரு பக்கத்திலிருந்துகொண்டு திரியும் அடியானொருவன் இருக்கின்றானென்று என்னைப் பற்றி ஒருவார்த்தையும் சொல்லுகின்றிலர்; இதற்கு நான் செய்யக்கூடியது என்னோ? என்பது பாசுரத்தின் பொருள்.

இப்பதிகத்தில் திருவண்பரிசாரத் திருப்பதியின் ப்ரஸ்தாவம் இப்பாட்டி லொன்றில் தானுள்ளது. ஆயினும் கீழ்ப்பாசுரங்களும் மேற்பாசுரங்களும் கருத்தின் ஒற்றுமையாலே இத்தலத்திற்கே ஏற்குமவையாகின்

றன. பரம்புருடன் இங்கே வந்து திருவண் பரிசாரத்திலெழுந்தருளியிருக்க, அந்தோ! நான் உதவப் பெற்றிலேனே!, இதுகிடக்க; இங்ஙனே ஓரடியானுள னென்று அவனுக்கு அறிவிப்பாருமில்லையே! என்று துடிக்கிறு ராழ்வார்.

வருவார் செல்வார்—ஆழ்வார் தமது திரு நகரியில் திருப்புளியடியிலே யெழுந்தருளி யிருந்தன்றோ இப்பாசுரமருளிச் செய்கிறுர். திருநகரித் திருவீதியிலே போவாரும் வரு வாருமான வழிப்போக்கர்க ளுண்டே; அவர்கள் ஸம்ஸாரிகளாய்த் தம் தம் காரியங் களுக்காகப் போவதும் வருவதுமாயிருந்தா லும் ஆழ்வாருடைய நினைவு அத்தகைத் தன்று. திருவண்பரிசாரம் தொழப் போகி றுர்கள்; திருவண்பரிசாரம் தொழுது மீளு கிறுர்கள் என்றே ஆழ்வார் நினைத்திருப்பது. இங்கே ஆறுயிரப்படியருளிச் செயல்;— "ஸ்வகார்யார்த்தமாகப் போகிறுரும் வருகிறு ரும் திருப்பரிசாரத் தேறப்போகிறுராகவும் வருகிறுராகவும் நிச்சயித்து" என்பதாம். ஈட்டு ஸ்ரீஸூக்தி; — "ஸ்வகார்யத்திற்கு விரைந்து போவாரைத் தம் தசையை அறி விக்கப் போகிறுர்களாகவும், அங்கு நின்றும் வருவாரைத் தம்மையழைக்க வருகிறுர்களாக வும் நினைத்திருப்பர்" என்று.

தம்மையழைக்க வருகிறுர்களென்றே இவர் நினைத்திருந்தபடி ஒருவரும் தம்மருகே வரக் காணுமையாலே இவர்கள் திருப்பரிசா ரத் தெம்பெருமானிடத்திலே நம்மைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை போலும், அதனுல் தான் அப்பெருமான் நியமிக்கவில்லை போலும் என்று அறுதியிட்டு 'திருவாழ்மார்வர்க்கு என்திறம் சொல்லார் செய்வதென்?' என் கிறுர். என்னவென்று சொல்ல விருப்ப மென்னில்; பின்னடிகள் முழுவதும் அந்தச் சொல்லின் அநுவாதம். 'பரிவர் ஒருவரு மில்லாதிருக்கிற இந்த ஸம்ஸார மண்டலத் திலே சங்குசக்கரங்களைச் சுமந்துகொண்டு உம்மோடு ஒருபக்கத்தில் கூடவே திரியு மடி யானெருவன் திருநகரியிலே திருப்புளியடி யிலே சடகோப னென்பானுளன்' என்று சொல்ல வேணுமாம்.

ஒருபாடுழல்வா னென்கிறுரே; ஒருபக்கத் திற்கு ஆழ்வாராணல் மற்றொரு பக்கத்திற்கு ஆள்? என்று கேள்வி பிறக்குமே; இதற்கு நம்பிள்ளை யருளிச் செய்கிறுர் "ஒரு பார்சு வத்திற்கு இளையபெருமா ளுண்டிறே" என்று.

(தொடரும்)

---

## வேண்டுகோள்

எண். 38575/61-ஏ 2 தேதி 21—4—62

பொருள் : ஆகமம் — ஆகம நூற்கள் — தொகுத்தல் — வெளியிடல்

ஆகம நூல்களைச்சேகரித்து வெளியிடுவதற்காக பழனி, தண்டாயுதபாணி சுவாமி கோயில் நிதி உதவியோடு புலவர்களின் துணைகொண்டு, காமிக ஆகமத் தொகுப்புப் பணியினை பழனி, திரு. ஈசான சிவாசாரியாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஏ. என். பரசுராம் அவர்களும் காமிக ஆகமத்தின் சில பகுதிகளைத்தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்கத்தின் சார்பில் தேவகோட்டை திரு. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் சில ஆகம நூற்களை வெளியிட் டிருக்கிறுர்கள். தென்னிந்திய அர்ச்சகர் சங்கமும் சில ஆகம நூற்களை வெளியிட்டிருக் கிறது. மேலும் இது சம்பந்தமான முழு தகவல்களும் கிடைத்தபின், தகுதிவாய்ந்த ஆகம நிபுணர்களைக்கொண்டு, ஆகமங்களைத் தொகுத்து வெளியிடும் பணியினை தமிழ்நாட்டிலுள்ள சில முக்கிய கோயில்களின் நிர்வாகத்தினரிடம் ஒப்புவிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

எனவே, அர்ச்சகர்களும், பொதுமக்களும் தங்கள் தங்களிடமுள்ள ஆகமம் சம்பந் தப்பட்ட நூல்களையும் தகவல்களையும் ஆணையர் அலுவலகத்திற்கு தயவுசெய்து உடன் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**எம். எஸ். சாரங்கபாணி,**
**ஆணையர்.**

# அச்சிறுபாக்கம்


## (ஆட்சீசர் கோயில்)

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப்
  பொருகடற்பவளமொ டழல்நிறம்புரையக்
குன்றிரண்டன்ன தோளுடையகலங்
  குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை
  மெல்லியலாளையோர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ மாயவெம்மடிக(ள்)
  அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே
—திருஞானசம்பந்தர்.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் சிவபெருமான். அவர் முப்புரங்களை எரித்த புராண கதையை யாவரும் அறிவர். தாரகாட்சன், வித்யுந்மாலி, கமலாட்சன் என்ற மூவரும் மூன்று பறக்கும் கோட்டைகளுடன் சென்று மக்கள், தேவர் முதலியோரைத் துன்புறுத்திவந்தனர். தேவர்கள் அம்மூவர்களின் கொடுமைக்காற்றாது சிவபெரு பெருமான் திருமுன் சென்று குறையிரந்தனர். திரிபுரதகனம் செய்ய கண்ணுதற் கடவுள் புறப்பட்டார். அவர் ஏறிச்செல்ல ஒரு தேரைச் சமைத்தனர் தேவர்கள். பூமியாகிய தேரில் கட்டப்பெற்ற குதிரைகள் நான்கு வேதங்கள்; தேரோட்டி பிரமன்; தேர்ச்சக்கரங்கள், சூரியசந்திரர்கள்; வில் மேருவாகிய மலை; அம்பு, திருமால்; அதன் நுனி அக்கினி பகவான்; வில்லின்நாண் ஆதிசேடன்;தேரின் இறகுகள் வாயுதேவன். இவ்வாறு அமைந்த தேரில் சிவபெருமான் எழுந்தருளினபோது, தேரின் உறுப்புக்களாகவுள்ள தேவர்கள் விநாயகரை வணங்காமல் இறுமாப்புக் கொள்ள, அவர்கட்கு நல்லறிவூட்ட, கணேசர் அருளால் தேரின் அச்சு இற்று ஒடிந்தது. அப்படி அச்சு ஒடிந்த இடமே அச்சு இறு பாக்கம்—அச்சிறுபாக்கம். இப்போது அவ்வூர் அச்சரவாக்கம், அச்சரப்பாக்கம் என்று வழங்கப் பெறுகின்றது. அருணகிரிநாதர் அருளிய 'கைத்தல நிறைகனி' என்று தொடங்கும் விநாயகர் துதிப்பாடலில் "முப்புரம் எரி செய்த அச்சிவன் உரைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா'' என்று இவ்வரலாறு குறிக்கப்பெறுகின்றது. இது பாடல்பெற்ற தொண்டைநாட்டுத் தலங்களில் ஒன்று.செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் பகுதியில் இருக்கிறது. சென்னை-விழுப்புரம் இருப்புப்பாதையிலுள்ள அச்சரப்பாக்கம் என்ற நிலையத்திலிருந்து தென்மேற்கே அரைகல் தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து தெற்கேசெல்லும் நெடுஞ்சாலையில் 58-ஆவது கல்லில் இவ்வூர் இருக்கிறது. பஸ்கள் இவ்வூர் வழியாக அடிக்கடி செல்கின்றன. தங்குவதற்குச் சத்திரமும், பிரயாணிகள் விடுதியும் இருக்கின்றன.

தேவாரத்திலும், கோயில் கல்வெட்டுக்களிலும் காணப்படும் பெயர் அச்சிறுபாக்கம். பாக்கபுரி, பாக்கபுரம், ஸ்திரபுரிஎன்ற வேறு பெயர்களும் உண்டு. இறைவன் திருக்கோயில் ஊருக்குக் கீழ்பால் இருப்புப்பாதைக்கு வெகு அண்மையில் இருக்கிறது. ஐந்து நிலைக்கோபுரம் ஒன்று கோயில்வாயிலை அழகு செய்கிறது. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோயிலில் சிவபெருமான் சந்நிதிகள் இரண்டு இருக்கின்றன. கோபுர வாயிலுக்கு நேரே கிழக்கு நோக்கியுள்ள சந்நிதி உமையாட்சீசர் எழுந்தருளியுள்ளது. அந்த சந்நிதியிலேயே மெல்லினல்லாள் என்ற அம்பிகையின் திருவுருவமும் இருக்கிறது. வாயிலுக்குச்சற்று வடபுறம் விலகி இருப்பது எமையாட்சீசர் சந்நிதி. இந்த ஆவுடையார் சுயம்புமூர்த்தி. இவருக்கு நேரேதான் நந்தி, கொடிமரம், பலிபீடம் முதலியன இருக்கின்றன. பாக்கபுரேசர், ஆட்சீசர், ஆட்சிகொண்டநாதர் என்பன இத்தலத்திறைவனின் திருப்பெயர்கள். வெளிப்பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் அம்பிகையின் சந்நிதி இருக்கிறது. சுந்தரநாயகி, பாலசுகாம்பாள், இளங்கிளிமொழியம்மை, அதிசுந்தரமின்னுளம்மை என்பன தேவியின் திருநாமங்கள்.

கோயிலின் வடக்கு வெளிப்பிரகாரத்தில் இத்தல விருட்சமான கொன்றை இருக்



கோயிலும் கோபுரமும்

குச்சென்று சுவாமி, அம்பாள், முருகப்பெருமானுடன் அகத்தியருக்குக் காட்சி கொடுத்து மலையைச்சுற்றி வருதலும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வூரில் அங்காளம்மன் கோயில், மாரியம்மன் கோயில், மூங்கிலம்மன் (கிராம தேவதை) கோயில் முதலியன இருக்கின்றன. ஊருக்கு மேற்காக நாலு கல் நீளமுள்ள மலைத் தொடர் தெற்கு வடக்காக இருக்கிறது. மலையரக்கன் ஒருவன் தெற்கே தலைவைத்துப் படுத்திருப்பதுபோல் இருப்புப்பாதை வண்டியில் செல்வோர் காணலாம். மலையின் நடுஉச்சியில் ஒரு சிறு கோயில் இருக்கிறது. மலைத்தொடரின் வடகிழக்கு மூலையில் பாறையின்மேல் ஒரு ஆவுடையார் காணப்படுகிறது. மலைத்தொடரின் தென்கோடியிலுள்ள குன்றின்மேல் குமரன் கோயில்இருக்கிறது. இதற்குப் பெரும்பேறு என்று பெயர்.

கிறது. கோயிலுக்குள் சிங்கதீர்த்தம் என்ற கிணறும், கோபுரவாயிலுக்கு எதிரில் தேவ தீர்த்தம் என்ற திருக்குளமும், கோயிலுக்கு வடமேற்கே சங்கதீர்த்தம் என்ற தாமரைக் குளமும் இருக்கின்றன. நாள்தோறும் கோயிலில் மூன்று காலபூசை நடக்கிறது. சித்திரா பருவத்தைத்தீர்த்தவாரியாகக் கொண்ட பத்து நாள் பிரமோற்சவம் சித்திரை மாதத்தில் நடைபெறுகின்றது. இதையன்றி சித்திரையில் திருநாவுக்கரசர் விழா, வைகாசியில் சம்பந்தர் விழா, மார்கழியில் மாணிக்கவாசகர்-திருவாதிரை விழா பத்துப் பத்து நாட்கள் சிறப்பாகநடைபெறுகின்றன. பிரமோற்சவத்தில் ஐந்தாம் நாள் திருக்கல்யாணமும், இடபவாகனக் காட்சியும், ஏழாம் நாள் கொன்றைமரத்தடியில் திரிநேத்திரதாரிக் காட்சியும், பதினோராம் நாள் இரண்டு கல்தொலைவிலுள்ள பெரும்பேறுக்



காளத்தி புராண விளக்கச் சிற்பங்கள்




சண்டேசுரர் தந்தை தாளை எறிதல்

(இதைப்பற்றிய கட்டுரை இவ்விதழில் வேறு இடத்தில் காண்க).

இத்தலத்தைப்பற்றி கர்ண பரம்பரைக் கதைகளும் புராண வரலாறுகளும் சில வழங்குகின்றன. பாண்டிய மன்னன் ஒருவன் தன் நாட்டிலுள்ள தலப்பிரதிஷ்டையின் பொருட்டுக் கங்கை மணலை வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தான். இத்தலத்தருகில் வந்து வண்டிமேல் செல்லாது நிற்கவும் ஊக்கிச் செலுத்த முயன்ற போது அச்சுகள் முறிந்தன. அசரீரியால் தலப் பெருமையறிந்து கோயில் திருப்பணி செய்தான். வண்டிகள் அச்சு முறிந்து நின்ற இடம் வண்டிக்குப்பம் என இப்போது வழங்குகின்றது.

மதுரையில் வையையாற்றின் வெள்ளத்தைத் தடுப்பதற்காகக் கங்கையிலிருந்து மணல் கொண்டு வரும்படி பாண்டியன் ஒருவன் தன் அமைச்சன் முதலியோரை அனுப்பினுன். மணல் ஏற்றி வந்த வண்டிகளின் அச்சுகள் இவ்வூர்க்கு அருகாமையில் முறிந்துவிட்டன. வேடர்கள் சிலர் அந்த அமைச்சனிடம் கொன்றை மரத்தடியிலுள்ள புற்று ஒன்றின்மேல் பசுவொன்று நடுப்பகலில் பால் சொறிவதாகச் சொன்னுர்கள். அதைக்காண அமைச்சன் சென்ருன்; பொன் போன்ற உடம்பு ஒன்று புற்றில் நுழைவதைக் கண்டான்; அம்பெய்தினுன்; புற்றினின்றும் இரத்தம் பெருகியது; பதைபதைத்துப்புற்றை அகழ்ந்து பார்க்க சுயம்பு மூர்த்தியான சிவலிங்கம் இருக்கக்கண்டான். அப்பெருமானுக்குக் கோயில் அமைக்க எண்ணி மன்னனுக்குச் செய்தி அனுப்பினுன். அரசன் பெரும் பொருள் அனுப்பினுன். கோயிலும் கட்டப்பெற்றது. அதில் இரண்டுமூலஸ்தானங்கள். சுயம்புமூர்த்தி கொடிக்கம்பத்திற் கெதிரிலுள்ளது. மற்ருெரு சிவலிங்கம் கோபுரவாயிலுக்கு எதிரிலிருக்கிறது. கும்பாபிஷேகத்திற்கு வந்த அரசன் அமைச்சனை "இங்குள்ளதென்ன, அங்கிருப்பதென்ன" என்று வினவ, சுயம்புமூர்த்தி "எமையாட்சீசர்", மற்றவர் "உமையாட்சீசர்" என்று கூறினுன். இப்படியும் ஒரு கதை உண்டு. இவ்வூர்த் தேவாரத்தில் "அன்று இரண்டு உருவமாய எம்மடிகள் அச்சிறுபாக்கமதாட்சி கொண்டாரே" என்பதை இக்கதைக்கு ஆதாரமாகக் கூறுகின்றனர். அதே பாடலில் அதற்கு முன் அடியில் "மின்திரண்டன்ன நுண்ணிடைஅரிவை மெல்லியலாளையோர் பாகமாப்பேணி" என்று வருவதை நோக்கினுல் இறைவன் உமைபாகனுகை ஆண் பெண்ணுகிய இரண்டு உருவாய் இருப்பதையே கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

அந்தணன் ஒருவன் மனைவியுடன் காசிக்குக் கங்கையாடச் செல்லும்போது, மனைவி கருவுயிர்க்கும் நாள் நெருங்கியதால் அவளை இவ்வூரில் விட்டுச் சென்ருன். முக்கண்ணுடைய ஒரு மகனை அவள் பெற்ருள். திரிநேத்திரதாரி என்று அவனுக்குப் பெயர். அக்குழந்தைக்கு ஐந்து வயதாக இருக்கும்போதே கோயிலை இன்னின்னவாறு கட்டவேண்டும் என்று கூறியதாகவும் ஒரு கதை வழங்குகிறது. வடக்குப் பிரகாரம் கொன்றை மரத்தடியில் திரிநேத்திரதாரி உருவமும் இருக்கிறது. சித்திரைப் பெருவிழாவின் ஏழாம் திருநாளில் திரிநேத்திரதாரிக்கு இறைவன் காட்சி கொடுப்பதும் சிறப்பாக நடைபெறு



கண்ணப்ப நாயனர்—கண் பெயர்த்தல்

திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "எச்சில்இளமர்" என்று தொடங்கும் பாசுரத்தில் "அச்சிறுபாக்கம்" என்று கூறியிருக்கிருர். மாணிக்கவாசகர், திருவாசகம்-திருவுந்தியாரில் மூன்ருவது பாட்டில் "தச்சு விடுத்தலும் தாமடியிட்டலும் அச்சு முறிந்ததென்று உந்தீபற, அழிந்தன முப்புரம் உந்தீபற" என்று கூறியிருப்பது இத்தலத்தில் அச்சு முறிந்த வரலாற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

சேக்கிழார், பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் திருக்கழுக்குன்றத்தை விட்டகன்று இத்தலத்திற்கு

கிறது. இத்தலத்தில் கண்ணுவரும், கௌதமரும் பூசித்ததாகச் சொல்லப்படுகிறது. பிரமன் பூசை செய்த திருக்குரும்பரையும், இந்திரன் வணங்கிய இந்திரனூரும் (இந்தளூர்), வருணன் பூசித்த பேறை நகரும், குபேரன் வழிபட்ட திருமுக்காடும் இப்பதியைச் சார்ந்த பதிகளாகக் கூறுகின்றனர். இவ்வூர்கள் அச்சிறுபாக்கத்தைச் சுற்றியுள்ளன.

இனி இத்தலத்தைப்பற்றிய நூல்களை அறிந்துகொள்வது அவசியம். திருஞானசம்பந்தர் பதினெரு பாடல்களையுடைய பதிகம் ஒன்றை இத்தலத்து இறைவன் பேரில் ஓதியருளியிருக்கின்ருர். "மெல்லியலாளையோர் பாகமாப்பேணி" என்றும், "இளங்கிளை அரிவையோடு ஒருங்குடனுகி" என்றும் அம்பிகையின் பெயர்களைக் குறிக்கிருர். இறைவனுடைய திருமேனியை வெகு அழகாக வர்ணித்திருக்கிருர். ஒரு பாடலில் "தம்மலரடியொன்றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலும் தாள் நிழல்சேர" என்ற கூறியிருப்பது குறிக்கத்தக்கது. மற்ருெரு பாடலில் கயிலைமலையை எடுத்த இராவணன் வலியழித்ததை, "பச்சமும் வலியும் கருதிய அரக்கன் பருவரை எடுத்த திண்டோள்களை யடர்வித்து அச்சமும் அருளும் கொடுத்த எம் அடிகள் அச்சிறுபாக்கமதாட்சி கொண்டாரே" என்று கூறியிருப்பதும் நோக்கத்தக்கது.

வந்து இறைவனை வழிபட்டு சிலநாள் தங்கியிருந்தார் என்பதைக் கீழ்வரும் பாடலில் கூறுகிருர்:—

ஆதிமுதல் வரைவணங்கி ஆட்சிகொண்டா
ரென மொழியுங்
கோதில்திருப் பதிகவிசை குலாவியபா
டலிற் போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கி
மகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்லகயினுர் சிலநாளங்
கமர்ந்தருளி.

உமாபதிசிவாசாரியார், "பொய்யிலா அச்சிறு பாக்கத்து அதிசுந்தர மின்னுள் இச்சையுறும் பாக்கபுரேசனே" என்று கூறியிருக்கிருர்.

வடலூர்-இராமலிங்கசுவாமிகள் விண்ணப்பக்கலி வெண்பாவில் தொண்டைநாட்டுப்பதிகளைக் கூறும்போது "துன்னுபொழில் அம்மதுரத்தேன் பொழியும் அச்சிறு பாக்கத்துலகர் தம்மத நீக்கும் ஞானசம்பந்தமே" என்று கூறியிருக்கிருர்.

அச்சிறுபாக்கம்-பச்சைப்பிள்ளை என்பவர் இயற்றிய "திருப்பாமாலைகள்" என்ற நூல் 525 செய்யுட்களையுடையது. ஆட்சீசர் அருள் குறிமாலை, இளங்கிளியம்மையார் அருள்குறிமாலை, ஆட்சீசர் அருளிரந்தமாலை, அருமருந்திரந்தமாலை, சீரிரந்தமாலை என்ற

பகுதிகளைக் கொண்டது. அந்நூலில் ஒரு பாடல் பின்வருவது:—

அப்பனீ அன்னைநீயே அருளுடைக் குருவுநீயே
செப்பிய வாக்குநீயே செய்தொழில் கரணநீயே
இப்புவி தன்னில்யாது மெங்கும்போ யொன்றுங் [கேளேன்
தப்பெலாம்ஒழித்தாட்சீசா தக்கதோர்மருந்தீவாயே.

அச்சிறுபாக்கம்-புலவர் திருச்சிற்றம்பலனுர் என்பார் "பாக்கபுரி என்னும் அச்சிறுபாக்கத் தலபுராணம்" (169 செய்யுட்கள்), "ஆட்சீசர்மாலை" (102 செய்யுட்கள்) என்ற நூல்களை இயற்றியிருக்கிருர். அவரே இப்போது கோயிலில் வெள்ளிக்கிழமைதோறும் திருவிளையாடற்புராண விரிவுரை செய்து வருகிருர். பெரியபுராண விரிவுரைகள் நிகழ்த்தி முடித்துவிட்டார்.

இன்னும், சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் க. வ. திருவேங்கட நாயுடு இயற்றிய "ஆட்சிகொண்ட நாதர் தோத்திரம்" (10 பாடல்கள்), "இளங்கிளி மொழியம்மை பஞ்சகம்" (5 பாடல்கள்) என்ற இரண்டு நூல்களும் அச்சாகி இருக்கின்றன. அவற்றில் இரண்டு பாடல்கள் கீழ்வருவன:—

நின்னடிக்குழுவ லன்பினைக் கொண்டு
நின்னடித் தொண்டர் கட்குகந்த
மன்னியவேவல் செய்துநாள் கழிக்கும்
மனமெனக் குவந்துநீ நல்காய்
அன்னியரென்று ததிதிக டம்மை
அன்புற வேண்டி யூட்டின்பு
துன்னிடுமவர்வா ழச்சிறுபாக்கச்
சுயம்பிரகாச மெய்ச்சுடரே.

எத்தேவர் தொழிலிற்குங் காரணியென்
றெவ்வெவரு மெளிதிற்றேற
அத்தேவர்க் குரியபடை யாவுமே
பரித்தழகா யமர்ந்தா டன்னை
நத்தேயு நெடுமாற்குத் தங்கையா
யெம்போல் வார் நற்றுயான
முத்தேயு நகையாளை யிளங்கிளியாம்
சுந்தரியை முன்னி வாழ்வாம்.

மோசூர்-முனிசாமி முதலியார் என்பவர் "ஆட்சி கொண்ட நாதர்பதிகம்" என்பதை இயற்றியிருக்கிருர். காப்புச் செய்யுளுடன் பதினெரு பாடல்கள் உள்ளன. பத்துப் பாடல்களும் ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்சொற்களால் தொடங்குகின்றன. அவற்றில் ஒரு பாடல் கீழ்வருவது:—

நாலான மறையானை நல்லோர்க ளுளத்தென்று
நணுகு வானை
மேலான நிலையானை வெண்ணீறு சண்ணித்த
வேடத் தானை
ஆலாரும் பெருமானை யடியேனை யாட்கொண்ட
வண்ண லானைக்
கோலாக மாலாக்கு மச்சிறுபாக் கத்தானைக்
குறித்து வாழ்வாம்.

கயப்பாக்கம்-சதாசிவ செட்டியார் B.A. தம்முடைய "திராவிட வேதத்திரட்டு" என்னும் நூலில் அச்சிறுபாக்கத்தைப்பற்றி மிகச் சுருக்கமான வரலாறு எழுதியிருக்கிருர்.

G. கலியாணம் M. A., (இப்போது 'திருக்கோயில்' ஆசிரியர்) 1941-ஆம் ஆண்டில் "திரு அச்சிறுபாக்கத் தலவரலாறு" என்னும் உரை நடை நூலை எழுதியிருக்கிருர் பெனுகொண்ட-தனபால் செட்டியார் என்பவர் அதை வெளியிட்டிருக்கிருர்.

அச்சிறுபாக்கம் கோயிலில் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு முதல் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றமையின் எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட பழைய கோயில் என்பது தெளிவாகிறது. கோயிலில் பல அற்புதச் சிற்பங்கள் காணப்படுகின்றன. துவார பாலகர்கள் மிக அழகிய உருவங்கள். பால்குடத்தைக் காலால் தள்ளிய தந்தையின் காலை சண்டேசுரநாயனுர் மழுவால் எறிவதும், காளத்தியில் கண்ணப்பர் கண்ணிடந் தப்புவதுமான நிகழ்ச்சிகளைக் காட்டும் சிற்பங்கள் கண் கவர்வனப்பின. (படங்கள் காண்க). பிற்காலத்திலும் பலர் இக்கோயிலில் திருப்பணிகள் செய்தும், திருவுருவங்கள் அமைத்தும் இருக்கின்றனர். எமையாட்சீசர் அந்தராளத்தின் கீழே ஒரு சுரங்கம் இருக்கிறது.

இக்கோயிலில் இதுவரை 30 கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்து அரசாங்கத்தார் பதிப்பித்திருக்கின்றனர். அவை கோபுரத்தின் வடகுடவறையிலும், கர்ப்பக்கிரக முன் மண்டபச் சுவர்களிலும், கர்ப்பக்கிரகச் சுவர்களிலும் காணப்படுகின்றன. சோழர்களில் வீரராஜேந்திரன், குலோத்துங்கன் I, விக்கிரமசோழன், குலோத்துங்கன் III, இராஜராஜன் III, இராஜநாராயண சம்புவராயன் பாண்டியர்களில் விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், மாறவர்மன், விஜயநகரவேந்தரில் கம்பண்ண உடையார், வீரபுக்கண்ண உடையார், சாளுவ நர

சிங்கர், கிருஷ்ணதேவராயர் முதலியவர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்றவை இக்கல்வெட்டுக்கள். இவை 11, 12, 13, 14, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டவை.

"ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மதுராந்தக சதுர்வேதிமங்கலத்துத் தென்பால் தனியூர் திரு அச்சிறுபாக்கம்" என்று கல்வெட்டில் இவ்வூர் குறிக்கப்பெறுகிறது. இறைவன் பெயர் "ஆட்சி கொண்டருளிய மகாதேவர்" என்றும், அம்பிகையை "இளங்கருணைப் பாவை" என்றும் அவைகள் கூறுகின்றன. கோயிலுக்குப் பல பெரியோர்கள் செய்ததானங்களை அவை அறிவிக்கின்றன. கோயிலுக்கு நிலம், ஊர்கள் வழங்கியது, திருநந்தா விளக்கு, சந்திவிளக்கு இவை எரிக்க ஆடுகள், எருமைகள், பொன் முதலியவை அளித்தது, வரிகளைக் கோயிலுக்கு நிபந்தமாகக் கொடுத்தது, பூசைக்கும், திருப்பணிக்கும், திருவமுதுக்கும், நிலம்-நெல் முதலியன ஈந்தது, திருவாபரணம் பொன்னால் செய்து கொடுத்தது, கோயிலில் குலோத்துங்கன் பிரதிமம் அமைத்தது, காஞ்சிபுரம் பெருமாள் கோயில் மடம், பெரிய நாயனார் மடம் இவைகளுக்கு நிலம் விட்டது முதலியவற்றைப் பற்றிக் கூறுகின்றன. ஒரு கல்வெட்டில் பல விதமான வரிகள் சொல்லப்படுகின்றது. அது பின்வருமாறு:—"வேலிக்காசு, இறையிலி காசு, நீர்விலைக்காசு, பன்மை பண்டவெட்டி, வீரசேஷை, உகவைப்பொன், காசிப்பொன், வண்ணக்கூலி, மீன்பாட்டம், கீழ்இறை, கால் அளவு கூலி, காவல் சேவகம் உட்பட்ட அந்தராயங்கள், கம்மாளமகமை, தரிஇறை, ஆள்வரி, திருவெழுச்சிக்குடிமை, சூத்திகால், மேல்வரி முதலிய கடமைகள் ஆட்சிகொண்ட மகாதேவர்க்கு வேண்டும் நிபந்தங்களுக்காகக் கொடுத்தது."


மூன்றும் குலோத்துங்கசோழன் இந்த கோயிலுக்கு வந்தான் என்பதைப் பின்வருமாறு ஒரு கல்வெட்டு கூறுகிறது:—இக்கோயில் மகாமண்டபத்து முத்துப்பந்தலில் பள்ளிப்பீடத்து எழுந்தருளியிருந்து ஆட்சி கொண்ட மகாதேவர்க்கு வேண்டும் நிபந்தங்களுக்கு ஆயிரக்கல நெல்லுக்குப் பல கிராமங்களைச் சேர்த்துக் "கலிகடிந்த சோழன் சாத்தனூர்" என்ற ஓர் ஊராகக் கூட்டிக் கொள்ளத் திருவாய்மலர்ந்தது.

ஆட்சீசர் அச்சிறுபாக்கத்து மலையை வலம்வருவதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளின் விவரங்களைக் காட்டும் கல்வெட்டு ஒன்றை அப்படியே கீழேதரப்படுகிறது:—"அச்சிறுபாக்கப்பற்று, தென்பாக்கப்பற்று, முலைப்பற்று ஊர்களில் செய்யாற்றில் வென்ருன், புளியுண்ணி, வெள்ளரிப்பட்டு இந்நாலூரும் நீக்கிப் பணியாள்களுக்கு நின்ற ஊர்களில் நாட்டார் உபயமாகக் கைக்கொண்டபடி திருமலைப்பிதக்கணம் (மலை சுற்றல்) பாடிவேட்டை நடத்துவதாகக் கைக்கொண்டு எங்களுக்குத்தந்த திருமுகப்படிக்கு நாங்கள் நடத்தும்படி திருமலையில் நாலு திருவீதியும் 30 அடிக்கு 30 அடி கட்டையும் முள்ளும் பறித்து, ஆறு திருமடமும் கட்டி, காவணமும் (பந்தலும்) இட்டு, மணலும் பரப்பி, திருமேற்கட்டியும் கட்டி, திருமஞ்சனக்குடம், சால், கரகம், எரிகரும்பு (விறகு) இவையும் வேண்டுவன குறைவறுத்து இந்த உபயத்துக்கு அமுதுபடி, கறியமுது, உப்பமுது, மிளகமுது, பால்நெய் அமுது, அடைக்காய் இலை (வெற்றிலைபாக்கு) அமுது, வெச்சமுது, பிட்டமுது, திருப்பணியாரம், மற்றும் அதற்கு வேண்டும் பல பண்டங்களும் திருப்பரிவட்டம், திருச்சாந்து, திருமேற்பூச்சு, திருவிளக்கு எண்ணெய், திருப்பள்ளித் தாமம் (பூமாலை,) தானத்தார், பூசிக்கும் நம்பிமார், ஸ்ரீமாகேசுவரக் கணக்கு, மாகேசுவரர், ஊரவர், தேவரடியார் இவர்கள் பெறும் ஓடுக்கும் பரிவட்டம், திருமெய்காவல், மற்றுச் சாத்துங் கூலி, சீபாதம் தாங்குவார்கூலி, பணியாள் விளக்காள்கூலி"

சுவாமி மலை சுற்றிவரச் செய்திருந்த இந்த ஏற்பாடுகள் எல்லாம் குறைவறச் செய்திருப்பது கண்டு மகிழத்தக்கது. சித்திரை பிரமோற்சவத்தின் இறுதியில் இப்போதும் சுவாமி எழுந்தருளிமலையை எட்டு கல் தொலைவிற்குச் சுற்றிவரும் விழாமிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

மனமெனும் சுழலினலே மாறுபுன்
புலனும் சேற்றில்
சினமெனும் கொடி சுற்றுற்றுச்
சித்தமும் பலவாருகி
எனதுநா னெனுமம்மூல
மாயையா லிளைத்திடாத
தனமெனக் கருளிச் செய்வாய்
தானுவே சுகாம்பிகையே.

—இளங்கிளியம்மை அருட்குறிமாலை.



கோதண்டராமர்

# மதுராந்தகம்

## (கோதண்டராமர் கோயில்)

நாராயணாய நம என்னும் நல்நெஞ்சர்)
பாராளும்பாதம் பணிந்து ஏத்து மாறு
அறியேன்
கார் ஆரும்மேனிக் கருணாகர மூர்த்திக்கு
ஆராதனை என் அறியாமை ஒன்றுமே

—கம்பர்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெறாத சில சிறந்த வைணவத் திருப்பதிகளும் நம்முடைய நாட்டிலிருக்கின்றன வென்பதை யாவரும் அறிவர். அத்தகையவற்றில் ஒன்று மதுராந்தகம் **கோதண்டராமா கோயில்.** சென்னை-விழுப்புரம் இருப்புப் பாதையில் மதுராந்தகம் என்ற நிலையத்திற்கு மேற்கு ஒரு கல் தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் 50-ஆவது கல்லில் இருக்கிறது. பலபக்கங்களிலுமிருந்து பஸ்கள் செல்லுகின்றன. தங்குவதற்கும் உணவுக்கும் விடுதிகள் இருக்கின்றன.

இப்பக்கங்களிலுள்ள கோயில் கல்வெட்டுக்களில் இவ்வூர் "ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மதுராந்தக சதுர்வேதி மங்கலம்" என்று குறிக்கப்பெறுகிறது. சோழ மண்டலத்தை முதலாம் இராஜராஜ சோழனுக்கு முன்னால் ஆண்ட உத்தம சோழன் என்னும் மதுராந்தகச் சோழனால் வேதம் ஓதும் அந்தணர்களுக்கு மானியமாகவிடப்பட்டதால் மதுராந்தக சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் பெற்றது. தல மான்மியத்தில் மதுரசம் பொருந்திய பல புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்த இடம் ஆனதால் மதுராந்தகம் என்ற பெயர் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. இப்பகுதிக்கு **வகுளாரண்யம்** என்ற பெயரும் உண்டு. இத்தல விருட்சம் வகுளம் (மகிழமரம்) ஆனபடியால் இப்பெயருண்டாயிற்று.

கோதண்டராமர் கோயில் மதுராந்தகம் பெரிய ஏரிக்கரைக்குக் கிழக்கிலும் நெடுஞ்சாலைக்கு மேற்கிலும் அமைந்திருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதி. முன்னால் கட்டி முடிக்கப் பெறாத கோபுர வாயில் இருக்கிறது. அதற்கு மேற்கே திருக்குளம் இருக்கிறது. புஷ்கரணிக்கரையிலே அனுமானுக்குத் தனிசந்நிதி இருக்கிறது. இந்த தீர்த்தத்திற்கு மேல்புறம் கோயில் உள்ளது. கோயில் வாயிலை ஒரு கோபுரம் அணிசெய்கிறது. கோயிலில் ஒரு வெளிப்பிரகாரம் இருக்கிறது. கோதண்டராமர், ஜனகவல்லித்தாயார் இவர்களின் கோயில்களைச் சுற்றி உட்பிரகாரங்களும் இருக்கின்றன. கோபுரவாயிலைத் தாண்டி உட்சென்றதும் வலதுபக்கம் தெற்கு நோக்கி விஷ்வக்சேனர் (சேனை முதலியார்), உடையவர், பெரிய நம்பிகள் சந்நிதிகளும், இடது பக்கம் வடக்கு நோக்கி வேதாந்த தேசிகன் சந்நிதியும் இருக்கின்றன. முன் மண்டபத்தைக் கடந்து சென்றால் கோதண்டராமர் சந்நிதி. இராம பிரான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சீதாபிராட்டி, இளைய பெருமாள் சமேதராய் சேவை சாதிக்கிறார். இந்த மூல மூர்த்திகளுக்கு முன்னால் **கருணாகரப்பெருமாள் ஸ்ரீதேவி** பூதேவியுடன் (உற்சவர்) காட்சியளிக்கிறார். இராமர், சீதை, இலக்குவர் உற்சவ

மூர்த்திகளும் அங்கே எழுந்தருளியிருக்கின்றனர். விபாண்டக மகரிஷியின் திருவுருவமும் இருக்கின்றது. இந்த கருணாகரப் பெருமானையே கோதண்டராமர் வழிபட்டதாகத் தலமான்மியம் கூறுகிறது. மூலமூர்த்தி எழுந்தருளி யிருப்பது புஷ்பக விமானம்.

தெற்குப் பிரகாரத்தில் ஜனகவல்லித் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. வடமேற்குமூலையில்உடையவர் பஞ்சசம்ஸ்கார மண்டபம் உள்ளது. வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு பார்க்க இருக்கிறது. இந்தப் பிரகாரத்திலேயே தலவிருட்சமான வகுள (மகிழ) மரம் இருக்கின்றது. இதை "ஸ்ரீவைகுண்ட வர்த்தனம்" என்றும் கூறுவர். இந்தப் பதியில் இரண்டு தீர்த்தங்கள் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது கோயிலுக்குக் கிழக்கில் உள்ள திருக்குளம் "இராமசந்திர புஷ்கரணி" கோயிலுக்குப் பின்பிறம் இருக்கும் ஏரி, பகவத் இராமனுஜ தீர்த்தம். உடையவர் ஏரியில் நீராடிய இடம் "ஸ்ரீபாஷ்யக்காரர் படித்துறை" என்று வழங்கப் பெறுகின்றது.

இந்த கோயிலில் ஆண்டு முழுவதும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. சித்திரையில் சித்திரா பௌர்ணமி உடையவர் உற்சவம், செசந்தோற்சவம், வைகாசியில் கோடை உற்சவம், ஆனிப்பிரமோற்சவம், ஆடி சிரவணத்திவல் கருணாகரப் பெருமாளுக்கு ஜேஷ்டாபிஷேகம், ஆடிப் பூரத்தில் ஆண்டாள் திருக்கல்யாணம், ஆவணி சுக்கில பஞ்சமியில் உடையவர் பஞ்ச சம்ஸ்கார உற்சவம், பவித்தரோற்சவம், புரட்டாசியில் நவராத்திரி, தேசிகன் உற்சவம், கார்த்திகையில் பாஞ்சாரத்திரதீபம் மார்கழியில் பகல் பத்து, இராப்பத்து, கருடசேவை, பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் (மோகினி), அமாவாசையில் அனுமத்ஜயந்தி, போகி நாளில் நீராட்டம், தை மாத்ததில் பரிவேட்டை, மாசி மகத்தில் தெப்ப உற்சவம், பங்குனி உத்திரம், பங்குனி (அல்லது சித்திரை)யில் ஸ்ரீராம நவமி உற்சவம் இவைகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. இராமருக்கு உற்சவம் இரண்டு நாட்கள்தான். மற்றவையெல்லாம் கருணாகரப் பெருமாளுக்கே. முழு சாங்கியத்துடனும் இரண்டு கால பூசைதான். மற்றும் உபாயமாக நான்கு காலங்கள் நடைபெறுகின்றன.

இந்த வகுளாரண்ய க்ஷேத்ரமானது, சுகர், விபாண்டகர் போன்ற முனிவர்கள் தவப்பயன் பெற்ற இடமாகவும், திருமழிசை ஆழ்வார் சித்தி பெற்ற இடமாயும், புராணப்பிரசித்தி பெற்றதாகவும், ஆசாரியர்களில் பெரிய நம்பிகள், ஸ்ரீபகவத் இராமனுஜன், நிகமாந்த மகா தேசிகன் முதலியவர்கள் உகந்தருளியதாயும் "பிரம்ம வைவர்த்தம்", "பார்க்கவம்" போன்ற புராணங்களில் சிறப்புப் பெற்றதாகவும் விளங்குகின்றது.

காஞ்சியிலிருந்து இராமானுஜர் தகுந்த குரு ஒருவரை நாடிப்புறப்பட்டார். பெரிய நம்பிகள் திருவரங்க மிருந்து புறப்



மதுராந்தகம் கோயில் உள்தோற்றம்

பட்டார். இருவரும் மதுராந்தகத்தில் சந்தித்தார்கள். உடையவர் பெரிய நம்பி களின் திருவடிகளை வணங்கி அவரிடம் 'பஞ்சசம்ஸ்காரம்' (தாபம், புண்டரம், நாமம், மந்திரம், யாகம்) என்னும் வைணவதீட்சையை இத்தலத்திலுள்ள மகிழ மரத்தடியிலே பெற்ருர். வைகுண்ட வர்த்தனம் என்பது இந்த மகிழமரத்தின் திருநாமம். இங்கு எம்பெருமானுர் "துவய மந்திரோபதேசம்" பெற்றதால் இத்தலம் **துவயம் விளைந்த திருப்பதி** என்றும் வழங்கலா யிற்று. **திருமந்திர திருப்பதி** என்றும் கூறுவர். இவ்வைபவத்தைத் திருவாராயிரப்படி குருபரம்பரைப் பிரபாவத்தில் பரக்கக் காணலாம். இராமனுஜரின் மாணவரான வடுக நம்பிகள் "யதிராஜவைபவம்" என்ற நூலிலும் இந்நிகழ்ச்சியைக் கூறியிருக்கிருர். உடையவர் இந்த தலத்தோடு சம்பந்தப் பட்டிருத்தாலல் இதன் மகிமைதனிச்சிறப் புடையது. அதனுல் வைணவர்கள் இதை மிகவும் புனிதமாகப் போற்றுகின்றனர். ஆண்டுதோறும் ஆவணி சுக்கில பட்சத்துப் பஞ்சமியில் பஞ்ச சம்ஸ்கார உற்சவம் வெகு சிறப்பாக நடை பெறுகிறது. கோயிலில் உடையவர் பக்கலில் பெரிய நம்பிகளும் சேவை சாதிப்பது தனிச் சிறப் பாகும்.

யாதவப் பிரகாசர் என்ற பெருந் துறவி ஒருவர் இத்திருப்பதியின் ஏரிக் கரையில் ஒரு உடும்பாய்க்கிடந்து, பின்னர் கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கு எழுந்தருளும்போது அங்கு நீராடி அமுது செய்து அவ்விடத்தில் சிந்திய பிரசா தத்தையுண்டு சாப நீக்கம் பெற்ருர் என் பதையும் ஆருயிரப்படி கூறுகிறது. இதையே ஸ்ரீபார்க்கவ புராணம் உத்தர காண்டம் 34-ஆவது அத்தியாயத்திலும் காணலாம்,

பிரமவைவர்த்த புராணத்தில் தல வரலாறு பின்வருமாறு காணப்படு கிறது:—பிரமபுத்திரர்கள் நாராயணனை வணங்கி மோட்சத்தையடையும் உபாயத் தைக் கேட்டனர். தன் அம்சமான கருணாகரமூர்த்தியின் விக்கிரகத்தை அவர் களிடம் கொடுத்து நாராயணன் அவர்களை வகுளாரண்யம் (மதுராந்தகம்) சென்று விபாண்டக முனிவர் ஆசிரமத்தில் தங்கி பரம்பொருளைத் தியானிக்கும்படி அருள் புரிந்தார். அப்படியே அவர்கள் செய்து மோட்சம் அடைந்தனர். பின்னர் இராம பிரான் சீதை இலக்குவருடன் தண்ட காரண்யவாசம் செய்தபோது விபாண்ட கர் ஆசிரமத்தில் தங்கி, கருணாகரப் பெரு மாளை வழிபட்டார். இராவணவதத்தின் பின்னர் அயோத்திக்குத் திரும்புகையில் இராமபிரான் முதலியோர் சென்ற புஷ்பக விமானம் இங்கு தடைபட்டு நின்றது. இராமனுதியோர் இறங்கி மறுபடியும் கருணாகர மூர்த்தியை வணங்கிவிட்டு அயோத்திக்குச் சென்றனர்.

நம்முடைய தலங்கள் பலவற்றில் அற்புத நிகழ்ச்சிகள் முற்காலத்திலும் நடந்தன, பிற்காலத்திலும் நடந்திருக் கின்றன. அவ்வகை அற்புதம் ஒன்று மதுராந்தகத்திலும் நடைபெற்றது. தமிழ் நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்று மதுராந்தகம் ஏரி; அதன் கரையின் நீளம் 12960 அடி; நீர்ப் பிடிப்பின் பரப்பு பதின் மூன்று சதுரமைல்; நூறு அடி ஆழம்: ஐந்து மதகுகள்; அதிக தண்ணீர் வழிந் தோடும் கலிங்கலின் நீளம் நூற்றைம்பது அடி. முன்பெல்லாம் மழை காலத்தில் இந்த ஏரி ஆண்டு தோறும் உடைத்துக் கொள்வது வழக்கமாக இருந்தது. அதனுல் மக்களுக்கு அதிக சேதம்; அரசாங்கத் துக்கு மராமத்து செய்யப் பொருள் செலவு. கிழக்கு இந்தியக் கம்பெனியார் காலத்தில் கி. பி. 1795—1798 வரை செங் கற்பட்டு ஜாகீரில் கலெக்டராக இருந்த வர் **கர்னல் லயனல் பிளேஸ்** என்ற துரை மகனுர். ஏரி உடைப்பு வரலாற்றை அறிந்த அவர் கரையைப் பலப்படுத்த சிறந்த முயர்சி எடுத்துக் கொண்டார். ஒரு நாள் ஏரிக்கரையையும் ஊரையும் பார்க்கச் சுற்றி வந்தவர் கோதண்டராமர் கோயிலருகே வந்தார். அர்ச்சகர்கள் வேண்டுகோளுக்கிணங்கி கோயிலுக்குள் வந்தார். பிரகாரத்தில் கருங்கற்கள்குவித்து வைத்திருப்பதைப் பார்த்து "எதற்காக இவை" என்றுகேட்டார். அங்குள்ளவர்கள், "ஜானகித் தாயாருக்குத்தனிக் கோயில் இல்லை. உடைப்பின் காரணத்தால் விளைச் சல்இல்லை. அதனுல் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டதால்கோயிலைகட்டமுடியவில்லை"

என்று சொன்னார்கள். "உங்களுடைய கடவுள் சக்தியையுடையவராக இருந்தால் ஏரி உடையாமல் பார்த்துக் கொள்ளட்டும். அப்படி உடைப்பு ஏற்படாமல் இருந்தால் நான் கோயிலைக்கட்டிக் கொடுக்கின்றேன்'' என்று சொல்லி விட்டு கலெக்டர் தங்கும் விடுதிக்குச் சென்றார். அன்றிரவு நல்ல மழை; எங்கும் வெள்ளம்; ஏரியில் நீர் நிறைந்து கரைபுரண்டு நிற்கிறது; இப்போதோ இன்னும் சற்று நேரத்திலோ உடைப்பு எடுக்கும்போல் இருந்தது.மிக்க கவலை கொண்ட கலெக்டர் நடு இரவில் தன்சேவகர்களுடன் ஏரியைப் பார்க்கப் புறப்பட்டார். சற்று தொலைவு சென்றார். கலிங்கல் அருகில் வந்தார். திடீரென்று அவர் கண்ட அற்புக்காட்சி தான் என்னே! மண்டியிட்டார். "அதோ பாருங்கள், இரண்டு திவ்யதேஜோமய மானவர் வில் அம்பும் கையுமாய் நிற்கின்றனர்'' என்று கூவினார். பக்கத்திலிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தோ பாவம்! அவர்களுக்கு அந்த காட்சி கிடைக்கும் பெரும்பேறு இருந்தால்தானே காணமுடியும். பின்னர் காட்சி மறையவே கலெக்டர் துரை எழுந்து தன் விடுதிக்குத் திரும்பினார். மழை நின்றுவிட்டது; ஏரியும் உடைத்துக்கொள்ளவில்லை. இந்த நிகழ்ச்சி ஊரெங்கும் பரவியது. கலெக்டரும் சொன்ன சொல்லைத் தவறவில்லை. ஜனக வல்லித் தாயாருக்குத் தன்மேற்பார்வையிலேயே கோயில் ஒன்றைக் கட்டினார். இதற்கு ஆதாரமாக தாயார் சந்நிதி முன் மண்டபத்தில் ஒரு கல்வெட்டு பொறிக்கப் பெற்றிருக்கிறது. அது பின்வருமாறு;— "இந்த தர்மம் கும்பினிஜாகீர் கலெக்டர் லயோனல் பிளேசுதுரை அவர்களது'' இதே பொருளுள்ள தெலுங்கு கல்வெட்டொன்றும் அதனுடன் காணப்படுகிறது. இக்கோயில் தென்புறச் சுவரில் இவருடைய உருவமும் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி காரணமாக எம்பெருமானை **ஏரிகாத்தபெருமாள்** என்று அழைக்கலாயினர். வைணவ சம்பிரதாயத்தில் இதற்கு வேறு பொருளும் கூறப்படுகின்றது. உடையவரை ஏரியாக வழங்குவது பூர்வாசாரியர் சம்பிரதாயம். அவரைப் பெரிய நம்பிகள் மூலம் அருளியதால் எம்பெருமானுக்கு இத்திருநாமம் ஏற்பட்டது என்று கூறுவர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கே மற்றொரு நிகழ்ச்சி. வடநாட்டுச் செல்வரான மகனிராம் சேட் பாங்கூர் தென்னாட்டுத் திருப்பதிகள் சிலவற்றின் திருப்பணியைச்செய்தார்.1937-ல் மதுராந்தகம் கோயில் திருப்பணியை எடுத்துக்கொண்டார். பெருமாள் சந்நிதியில் மதில் சுவரைப் புதுப்பிக்க அஸ்திவாரம் தோண்டினார். பூமியின்கீழ் 20அடி ஆழத்தில் ஒரு மண்டபம் காணப்பட்டது. அம்மண்டபத்தில் ஒரு தாமிரத்தட்டில் நவநீத கண்ணன் விக்கிரகமும், திரு விலச்சினை (முத்திரை)க்குரியசங்குசக்கரங்களும், சில பூசைப் பாத்திரங்களும் காணப்பட்டன. பெரிய நம்பிகள் உடையவருக்கு பஞ்சசம்ஸ்காரம் செய்யும் போது இவற்றைப் பயன் படுத்தி இருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆகையால் அவற்றை பெரிய நம்பிகள் உடையவர் சந்நிதியில் வைத்துப் பாது காத்து வரப்படுகிறது. பஞ்சசம்ஸ்கார உற்சவத்தின் போது இந்தகண்ணன் திருவிலச்சினைகளுடன் பெரிய நம்பிகள் உடையவருடன் திருவீதிக்கு எழுந்தருளிவருகின்றார். சுரங்க மண்டபத்துக்குச் செல்ல 20 படிகள் இருக்கின்றன. அதை இன்றும் காணலாம்.

உத்தம சோழன் காலத்திலேயே மதுராந்தகம் அந்தணர்களுக்கு மானியமாக விடப்பட்டமையால் கோயில் பத்தாம் நூற்றாண்டிலேயே இருந்திருக்க வேண்டும். பின் வந்த சோழ மன்னர்களாலும் விஜயநகர வேந்தராலும் விரிவடைந்திருக்கலாம். மூல மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் இராமர், சீதை, இலக்குவர் இவர்களின் கம்பீரமான தோற்றம் கண்கவர் வனப்பினதாக இருக்கிறது. வைத்தகண் வாங்காமல் பார்த்து ஆனந்தித்து அநுபவிக்கும் அவ்வளவு அழகு வாய்ந்த திருமேனிகள்.

தாயார் சந்நிதியிலுள்ள பிளேஸ் துரை கல்வெட்டையன்றி கோதண்டராமர் கோயிலில் கர்ப்பகிரகச் சுவர்களில்

இரண்டு தமிழ்க்கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. ஒன்று இராஜகேசரிவர்மனுன திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழனின் மூன்றுவது ஆட்சியாண்டில் கோயிலில் இரண்டு விளக்கெரிக்க கமுகம் தோட்டம் ஒன்றைத்தானமாகக் கொடுத்ததைக் குறிக்கின்றது. மற்றொன்று, பரகேசரி வர்மனுன திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் கோயிலுக்குப் பொருள் வழங்கியதை அறிவிக்கின்றது.

பெரியநம்பிகள் இராமானுஜருக்கு பஞ்ச சம்ஸ்காரம் செய்தருளியதை, அகோபில மடத்து 34-ஆவது பட்டம் ஜீயர் சுவாமிகள் தாம் இயற்றிய "ஸ்ரீலட்சுமி நரசிம்மன் அடைக்கலப் பத்து" என்ற நூலில் பின்வரும் பாடலில் கூறியிருக்கின்றூர்;—

திருமந்திர திருப்பதியாம்
மதுராந்தக நகருள்
உருவந்தரி அரங்கேசச்
சடகோபன் தனியருளால்
திருமந்திர வுரைசுரந்த
சடகோப யதிபதிசெய்
திருவந்துறை மடியுடையான் அடைக்
கலப் பத்து இதுவே.

மதுராந்தகத்தில் கோதண்டராமர் கோயிலையன்றி கடப்பேரி வெண்காட்டீசர் கோயிலும், அருளாழீசர் (கிருபாசாகரர்) கோயிலும் இருக்கின்றன.

---

சென்னை பூங்கா நகர் கந்தகோட்டம் ஸ்ரீ கந்தஸ்வாமி கோயில் வசந்தோற்சவம்—சமயச்சொற்பொழிவு. ஷை வசந்தமண்டப பங்களாவில் நாளது 9—5—1962உ முதல், 27—5—1962 வரையில் 19 நாட்கள் தொடர்ந்து திரு. கூனம்பட்டி, நா. சரவணமாணிக்க வாசகஸ்வாமிகள் அவர்களால் பெரிய புராணமென்னும் திருத்தொண்டர் புராண விரிவுரைகள் நடைபெறும். தினந்தோறும் இரவு 8 மணிக்கு மேல் ஸ்வாமி பத்தி உலாவுதலும் வீதி உத்ஸவமும் நடைபெறும்.

சிக்கல்:—நவநீதேசுவரசுவாமி கோயிலில் சித்திரை பிரமோற்சவம் 9—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

பிரான்மலை:—அமிர்தேசுவரி—கொடுங்குன்றநாதர் கோயிலில் சித்திரைத் திருவிழா 10—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

பரமக்குடி:—ஹனுமார் கோதண்டராமசுவாமி கோயிலில் ராமநவமி உற்சவம் 5—4—62 முதல் 15—4—62 வரை நடைபெற்றது.

பெண்ணுடம்:—பிரளயகாலேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

கரம்பயம்:—முத்துமாரியம்மன் கோயிலில் மகோற்சவம் 8—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

பிட்சாண்டார்கோயில்:—உத்தமர் கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

வடுவூர்:—கோதண்டராமசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது,

கோவிலூர்:—மந்திரபுரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

திருமங்கலம்:—சாமவேதீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

வேலூர்:—தாரகேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 7—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

# நால்வர் நன்னெறி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

“அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாம் குன்றே யனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ”, “வானேயும் பெறில் வேண்டேன் மண்ணுள் வான் மதித்து மிரேன்” என்று மாணிக்க வாசகர் அருளியிருப்பதினின்றும் உலகப் பொருள் மேல் ஆசையின்றி வாழ விழைந் தார் என்பது தெரிய வருகிறது. எனவே, உலக போகத்திற்குப் பொருள் வேண்டியது தான் என்றும், ஆனல் அதில் அளவுக்கு மிஞ்சிய ஆசை வைக்கக் கூடாதென்றும், இறைவன் திருவருட் பெருஞ் செல்வத்தை யடைவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும் சமயாசாரியார் நால்வர் வாழ்க்கையினின்றும் அறிந்து கொள்கிறோம். பொருள் இருப்பினும் ஆண்டவனை மறக் கொணது என்பதை நால்வர் வாழ்க்கை எடுத் துக் காட்டுகிறது.

**பிறர் துயரம் காணப் பொருத பெருந்தகை யாளர்:** நால்வர் பெருமக்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். பிறர்க்கு இடுக்கண் வந்தால் அதற்கு வருந்தியதோடல்லாமல் அத் துன்பத்தை நீக்கவும் செய்தார்கள் என்பதை அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் காட்டு கின்றன.

அப்பரடிகள் திருப்பழனத்திறைவனை வழி பட்டு திங்களூர் வழியாகச் சென்ருர். அங்கே அவருடைய பெயரால் தண்ணீர்ப்பந்தர் வைத் திருந்த அப்பூதியடிகளின் இல்லறத்திற்கே கிஞர். அவர் விரும்பிய வண்ணம் ஆங்கு உணவு கொள்ள இசைந்தார். அப்பூதியடிகளின் மகன் வாழையிலை கொண்டு வரச்சென்றவன் பாம்பு தீண்டி மாண்டான். அதை மறைத்து விட்டு அப்பருக்கு அமுதுபடைக்க எண்ணினர் அப் பூதியடிகள். அதை யறிந்து கொண்ட தாண் டகவேந்தர், மாண்டவன் உடலை ஆண்டவன் திருமுன்னர் கிடக்கச் செய்து “ஒன்று கொலாம்” என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி அப்பிள்ளையை உயிர்ப்பித்தார்.

சம்பந்தப் பெருந்தகையார் திருமருகல் என்ற தலத்திற்குச் சென்ருர். தான் மணந்து கொள்ள இருந்தவணிகன் ஒருவனுடன் மங்கை யொருத்தி அங்குவந்து தங்கினள். இரவு அரவு தீண்டி வணிகன் மாண்டான். அம்மாது தனக் குற்ற பெருந்துன்பத்திற்காற்ருது வருந்தி அழுது கொண்டிருந்தாள். சம்பந்தர் அதை யறிந்து “சடையாய் எனுமால்” என்று தொடங் கும் பதிகம் பாடி அவ்வணிகனை உயிர்ப்பித்து இறைவன் திருமுன்னரே அவ்விருவருக்கும் திருமணம் முடித்து வைத்தார். சுந்தரர் கொங்குநாட்டுத்தலமான அவிநாசிக்குச்சென் ருர். ஒரு தெருவில் எதிர் எதிர் வீட்டில் அழுகை யொலியும் மங்கலவொலியும் கேட் டார். இது என்னே என்று அதியசத்து அங் குள்ளோரை வினவினர். “இரண்டு வீட்டி லும் இரு சிறுவர்கள் இருந்தனர்; ஐயாண்டு பிராயத்தினர்; மடுவிற்குக் குளிக்கச் சென்ற னர்; ஒருவனை முதலை விழுங்கி விட்டது; பிழைத்து வந்த பையனுக்குப் பூணூல் கலி யாணம் நடப்பதால் மங்கல ஒலி; இழந்த குழந்தையின் தாய் தந்தையர் தங்கள் குழந்தை இருந்தால் அதற்கும் பூணூல் போடலாமே யென்று வருந்தியழும் ஒலி அந்த வீட்டில்” என்று கூறினர்கள். முதலையுண்ட மதலையின் பெற்ருேருடன் சுந்தரர் மடுவிற் குச் சென்ருர். இறைவனை வேண்டிப் பதி கம் பாடினர். “கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே” என்று கூறினர். முதலை அக்குழந்தையைக் கொண்டு வந்து உயிருடன் கரை சேர்த்தது. மணிவாச கப்பெருமான், ஈழ அரசன் பெண் ஊமையாய் இருந்தவளை “திருச்சாழல்” என்னும் பதிகம் பாடிப் பேசும்படி செய்தார். நாலு சமயா சாரியர்களும் மக்கள் தொண்டே கடவுள் தொண்டு என்பதை மறந்துவிடவில்லை என்று இந்த நிகழ்ச்சிகளால் அறிகிருேம். “ஈர அன்பினர் யாதும் குறைவிலார்” என்ற சேக்கிழார் வாக்கை ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும். நாமும் பிறர்க்குத் துன்பம் நேர்ந்த போது அதை நீக்க முயலவேண்டும் என்பதை

வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

**சாதிகுலபேதமில்லோர்:** அப்பர் வேளாள குலத்தினர். அப்பூதியடிகளான அந்தணர் தம் மில்லத்தில் உணவு படைக்க உடன் உண்டார். சம்பந்தர், திருநீலகண்டயாழ்ப் பாணரைக் கூடவே அழைத்துச் சென்ருர். திருநீலநக்கரான அந்தணர் மனையில் யாழ்ப் பாணருக்கும் அவர் மனைவியார்க்கும் வேள்விச் சாலையில் தங்க இடங்கொடுத்தனர். சுந்தரர் ஆதிசைவ அந்தணர்; நரசிங்கமுனையரையர் என்ற மன்னன் வீட்டில் வளர்ந்தார்; பரவையார் என்ற கணிகை மாதையும், சங்கிலியார் என்ற வேளாளப் பெண்ணையும் மணந்தார். மாணிக்கவாசகர், "சாதிகுலம் பிறப் பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை" என்று பேசுகிருர். சமயவாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறவர்கள் "எல்லோரும் ஓர் குலம்" என்பதை மறத்தலாகாது என்பதை நால்வர் வாழ்க்கை வரலாறு நமக்கு அறிவுறுத்துகிறது.

**அஞ்சாநெஞ்சினர்:** உலக சமயத்தலைவர்களுக்கெல்லாம் பல இன்னல்கள் ஏற்பட்டதென்பது வரலாற்ருல் அறிந்து கொள்வது. அதை அவர்கள் பொருட் படுத்தாது வெற்றி கண்டதே சமயத் தலைவராவதற்கு அறிகுறியாக நின்றது. அடியார்களின் பண்பாட்டைக் கூறவந்த குன்றை முனிவர் "வீரம் என்னல் விளம்பும் தகையதோ" என்று பேசுகிருர். நால்வரும் மன உறுதிமிக்கவர் என்றும் நாம் அறிகிருேம்.

அப்பர் வாழ்க்கைத் தொடக்கத்தில் அஞ்சினர். "ஆற்றேன் அடியேன்", "அஞ்சேலு மென்னீர்" என்று கவல்கிருர். ஆனல் பின்னர் மன்னன் அழைத்தபோது "நாம் யார்க்கும் குடியல்லோம்" என்றுபாடுகிருர். "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை", "வானம் துளங்கிலென் மண் கம்பமாகிலென்" என்றெல்லாம் கூறுகிருர். கயிலைக்குப் போகவேண்டும் என்று உறுதி கொள்கிருர். "ஆளுநாயகன் கயிலை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்கிருர்.

சம்பந்தர், அப்பர் அறிவுரை கூறியும் மதுரைக்கு அஞ்சாது புறப்படுகிருர். அங்கு அவர் தங்கிய மடத்திற்குச் சமணர் தீ வைத்தபோதும் பயப்படவில்லை. மங்கையர்க்கரசி வருந்தியபோது "மானினேர் விழிமாதராய்! பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவெய்திடேல். ஈனர்கட்கு எளியேனல்லேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே" என்று ஆறுதல் கூறுகிருர். சுந்தரர் தாம் செய்து கொடுத்த வாக்குறுதியை மீறியதால் கண்ணெளி இழந்தார். எனினும் இறைவனிடம் உரிமையுடன் அஞ்சாது பாடுகிருர். "விற்றுக்கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்; குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தையாக்கினீர்; எற்றுக்கு அடிகேள் என் கண்கொண்டீர் நீரே பழிபட்டீர்; மற்றைக்கண் தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே" என்று கூறியிருப்பது அவருடைய திண்ணிய மனப்பான்மையைக் காட்டுகிறது. வாதவூரடிகளைப் பாண்டிய மன்னன் எவ்வளவு துன்புறுத்தியபோதும்இறைவழி பாட்டைநிறுத்தவில்லை. அப்பர் பாடியதுபோல் அவரும் "யாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்று பாடியிருக்கிருர். "அச்சப் பத்து" என்னும் பகுதியில் எதற்கும் அஞ்சேன் என்று தொடங்கி சிலவற்றிற்கு அஞ்சுவதாகக் கூறுகிருர். கடவுள் கற்றில்லாதவர், கடவுள் அன்பில்லாதவர், வெண்ணீறணிகிலாதவர்களைக் கண்டால் பயப்படுகிறேன் என்கிருர்.

**பெண்ணுக்குப் பெருமை கொடுத்தவர்:** சமய குரவர் நால்வரும் பெண்குலத்திற்குப் பெருமை கொடுத்தனர்: பெண்களுக்கு இழிவு கற்பிக்கவில்லை. அப்பர் தம்முடைய தமக்கையாரான திலகவதியாரை "நந்தமது குலம் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்" என்று அழைக்கிருர். சம்பந்தர் மதுரையையடைந்ததும் அவர் மனக்கண் முன்னே தோன்றுவது மங்கையர்க்கரசியாரின் சைவசமயத் தொண்டு. ஆதலின் முதல் பாசுரத்தின் முதலிலேயே "மங்கையர்க்கரசி, வளவர் கோன் பாவை, வரிவளைக் கைமடமானி, பங்கயச் செல்வி, மாண்டிமாதேவி" என்று போற்றிப் புகழ்கிருர். அப்பதிகத்தின் பதினெரு பாடல்களுள் ஆறு பாடல்களில் அந்த அரசியாரைக் குறித்திருக்கிருர். திருமயிலைக் கபாலீச்சரத்தில் பூம்பாவையை எழுப்பிய பின் அப்பெண்ணை மணக்க மறுக்கிருர். சுந்தரர் இரு மாதரை மணந்தார். ஆனல் கோட்புலிநாயனரின் பெண்கள் இருவரையும் மணந்து செய்து கொள்ளவில்லை. அவர்களைத் தம்மக்களாகவே

கருதினர். அதற்காதாரமாகப் பல பாடல்களில் "வனப்பகை அப்பன். சிங்கடிதந்தை" என்று கூறியிருக்கிறார். மாணிக்கவாசகர், "வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ் நெஞ்சே" என்பதில் பெண்ணைப் பழிக்கவில்லை தன்னைத்தான் பழித்துக்கொள்கிறார். பெண்களுக்கு இழிவு கற்பிக்காமல் அவர்களுக்குப் பெருமை கொடுப்பதே நமது கடமை என்றறிந்து கொள்ள வேண்டும்.

**ஆலயவழிபாடு செய்தனர்:** நால்வரும் சிறந்த ஞானிகள் ஆயினும் ஆலய வழிபாடு செய்து நமக்கு வழி காட்டிகளாக விளங்கினர். நாட்டிலுள்ள பல கோயில்களுக்கெல்லாம் ஒருவசதியுமில்லாத அக் காலத்தில் சென்று இறைவனைப்பாடி யிராவிட்டால் நமக்கு இப்போது பாடல் பெற்ற பதிகள் எப்படிக் கிடைத்திருக்கமுடியும். அவர்கள் ஒரு தலத்திற்குச் சென்றால் முதலில் கோயிலுக்குப் போய் இறைவனை வணங்கி வழிபட்டபின்னரே மடங்களில் வந்து தங்கினர் என்பதை நாம் அவர்களுடைய வரலாறுகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம். தாங்களே ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டதுமன்றி அவர்களுடைய பாடல்கள் பலவற்றில் இறைவழி பாட்டின் அவசியத்தையும், வழிபாட்டு முறையையும் நன்கு எடுத்து ஓதியுள்ளனர். "கோயிலாவதே தடா குளங்களாவதேடா", "நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா" என்ற சித்தர்கள் வாக்கை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு கோயில் வழிபாடு செய்யாமலிருந்துவிடக் கூடாதென்பதை நம்முடைய சமயாசாரியார் நமக்கு நடை முறையில் செய்து காட்டியிருக்கின்றனர். அதை நாம் பின்பற்ற வேண்டாமா?

**ஒரு தெய்வ வழிபாடு இயற்றினர்:** ஆலய வழிபாடு செய்வதிலும் அந்த நால்வரும் ஒரு தெய்வ வழிபாடே செய்தனர். சிறு தெய்வ வழிபாடு செய்யவில்லை. சிவபெருமானையன்றி மற்ற தெய்வத்தை வணங்கவில்லை. "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்", "ஒருவனும் உலகேத்த நின்ற நாளோ", "ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்பன போன்ற கூற்றுக்களை நாம் ஓர்ந்துணர்தல் வேண்டும். கந்தன், உமை இவர்களைப் பாடியு போதும் இறைவனைச் சேர்த்தே அப்பெருமானுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசியுள்ளனர். "செந்தில் மேய வள்ளிமணாளன் தாதை கண்டாய்", "பூதநாயகன் அங்கயற் கண்ணிதன்னொடும் அமர்ந்த ஆலவாய்" என்ற இன்னோரன்ன பிறவும்கண்டு கொள்க.

**நான்கு மார்க்கத்தினர்:** சைவசமயத்தில் இறைவனையடைய நான்கு வழிகள் கூறுகின்றனர். அவை தாசமார்க்கம், சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம்,சன்மார்க்கம்என்பன. இவைகளை முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களுடைய வாழ்க்கையில் பொருத்திக் கூறுவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாலு விதமாகவும் இதைக் கூறுவது ஆன்றோர் மரபு. தாசமார்க்கம்-ஆண்டான் அடிமை. அதாவது இறைவனைத் தலைவனாகவும் தான் ஒரு பணியாளாகவும் வழிபடும் முறை. இது அப்பர் பெருமான் வாழ்க்கையில் இயைந்துள்ளதைக் காணலாம். சத்புத்திரமார்க்கம்-தந்தை மகன். சம்பந்தர் தன் சொந்த தந்தை அடிக்க முயன்ற போது யாவர்க்கும் தாயும் தந்தையுமான ஈசனை "தோடுடைய செவியன்" என்று சுட்டிக்காட்டியதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். சகமார்க்கம்-இறைவனைத் தோழனாகப் பாவிப்பது. சுந்தரர் வாழ்க்கையில் நாம் இவற்றை நன்கு தெரிந்து கொள்கிறோம். சிவபெருமானைப் பரவையார் வீட்டிற்குத் தூதாகவும் அனுப்புகிறார் சுந்தரர். இதனாலன்றோ 'தம்பிரான் தோழர்' என்ற பெயரும் உண்டாயிற்று. "ஏழிசையாய் இசைப் பயனாய்......என்னுடைய தோழனுமாய்" என்றது இதனாலன்றோ எழுந்தது. சன்மார்க்கம்-குரு சிஷ்யன் அல்லது ஆசான் மாணவன் என்றமுறையில் வழிபடுவது, மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவாய் எழுந்தருளியிருந்த இறைவனை வணங்கிப் பேறு பெற்றனர். இதை நாயகி நாயக முறையில் வைத்து திருக்கோவையார் பாடலை எடுத்துக் காட்டிச் சொல்வதும் உண்டு.

**இறைவன் திருவடிகளை முதலில் பாடுகின்றனர்:** ஆண்டவன் திருவடிகள் என்பது அவன் திருவருள்தான். அவனருளாலேதான் அவன் தாள் வணங்கமுடியும். நல்லவர் பெருமக்களும் தாங்கள் முதன் முதலில் பாடத் தொடங்கும்போது இறைவன் திருவடிகளையே

நினைக்கின்றனர். அப்பர்பெருமான் 'கூற்று யினவாறு' என்று தொடங்கும் முதல் பாடலில் "ஏற்றுயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என்று கூறுகிறுர். சம்பந்தப் பெருந்தகையார் "தோடுடைய செவியன்" என்று தொடங்கிய பாடலில் "என் உள்ளம் கவர்கள்வன்" என்று அருளிச் செய்கிறுர். சுந்தரமூர்த்திகளோ "பித்தா பிறை சூடி" என்ற முதற் பாசுரத்தில் "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" என்று சொல்லியிருக்கிறுர். வாதவூரடிகள் முதல் அகவலான சிவபுராணத்தில் "நமச்சிவாய வாழ்க: நாதன் தாள் வாழ்க; இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று அருளிச் செய்கிறுர். நால்வர்களும் எடுத்த எடுப்பிலேயே இறைவன் திருவடிகளை எப்போதும் நினைக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச் சென்றுள்ளனர். ஆதலின் நாம் இறைவனை எக்காலத்தும் நினைக்கவேண்டும்; இமைப் பொழுதேனும் மறத்தலொண்ணுது.

இது காறும் கூறியவாற்றுல், சைவ சமய குரவர் நால்வரும் உலகில் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞானம் பெருகவும், தீமை யகன்று நன்மை மல்கவும் திருவவதாரம் செய்தனர் என்றும், கல்விச் செல்வமும் கைவரப் பெற்றிருந்தனர் எனவும், பொருட் செல்வத்தில் ஆசையின்றி அருட்செல்வத்தையே அவாவினர் என்றும், பிறர் துயரம் காணப்பொருத பெருந்தகையாளர்-தனக்கென வாழாப்பிறர்க்குரியாளர் என்றும், அஞ்சாநெஞ்சினர்-மன உறுதி மிக்கவர் என்றும், சாதிகுலபேத மில்லோர் என்றும் பெண்ணுக்குப் பெருமை தேடித் தந்தவர்களென்றும், ஆலயவழிபாடு-ஒரு தெய்வ வழிபாடு இவற்றையே மேற்கொண்டனர் என்றும், இறைவனை எக்காலத்தும் மறவாத நிலையை வேண்டினர் என்றும், நான்கு மார்க்கங்களில் இறைவனை யடைய அவர்களுடைய வாழ்க்கை எடுத்துக்காட்டாக இருந்த தென்றும் கண்டோம். அந்தப் பெருமக்களின் அடிச்சுவட்டைப் பற்றி நாமும் ஒழுகவேண்டாமா? நாலு பேர் சென்ற நன்னெறியில் நாமும் சென்று இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

---

மொடக்கூர்:—மெய்ப்பொருள்நாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19—4—62ல் நடைபெற்றது.

செம்பியமகாதேவி:—கயிலாசநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19—4—62-ல் நடைபெற்றது.

திருமங்கலம்:—பூவாளூர், லால்குடி கூட்டுவாரவழிபாட்டுக் குழுவினர் பக்தர்களுடன் காலையில் புறப்பட்டு திருமங்கலம், பூவாளூர், லால்குடி, மாந்துறை, நகர் இவ்வைந்து தலங்களுக்கும் 30—3—62-ல் கால்நடையாகச் சென்று ஆலயங்களில் வழிபாடு செய்து அன்று இரவில் யாத்திரை முடித்தனர்.

பரம்பக்குடி:—சுந்தராஜப்பெருமாள் கோயிலில் கோடைத்திருநாள் 14—4—62 முதல் 25—4—62 வரை நடைபெற்றது.

பரம்பக்குடி:—சந்திரசேகரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

மதுரை:—மீனுட்சிசுந்தரேசுவரர் கோயிலில் சித்திரைப்பெருவிழா 7—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

ஆலங்குடி:—தெட்சிணுமூர்த்திசுவாமி ஆபத்சகாயசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

அவிநாசி:—அவிநாசியப்பர் கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 21—4—62 வரை நடைபெற்றது.

சிவகிரி:—கனககிரிவேலாயுதசாமி கோயிலில் இரதோற்சவம் 12—4—62 முதல் 23—4—62 வரை நடைபெற்றது.

சீகாழி:—பிரமபுரீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 22—4—62 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.


# பெரும்பேறு

## (சுப்பிரமணியர் கோயில்)


நமது நாட்டில் முருகப்பெருமானுக்குகந்த பல சிறந்தபதிகள் உள்ளன. அவற்றுள் குமரக்கடவுள் குன்றுகளின் மேல் எழுந்தருணியிருக்கும் தலங்களும் உண்டு. கைலைமலை இறைவனுக்கும் பர்வதமன்னன் மகளுக்கும் அரும் பெறல் மகவாய் அவதரித்த அறுமுகன் குன்றின்மேல் கோயில் கொண்டருளல் பொருத்தமுடையதுதானே. அத்தகைய குன்றக்குமரன் கோயில்கள் இருக்கும் பதிகளில் ஒன்று பெரும்பேறு என்பது. பெரும்பேர் என்றும், பெரும்பேர்கண்டிகை என்றும் வழங்கப்பெற்று வருகிறது. இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் பகுதியில் இருக்கிறது. சென்னை-விழுப்புரம் இருப்புப் பாதையில் தொழுப்பேடு என்னும் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கிறது. சென்னையிலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் 61¼ கல்லில் பிரிந்துபோகும் கிளைச் சாலையில் அரைக்கல் சென்றால் இத்தலத்தை அடையலாம். சென்னை, ஒரத்தி, திண்டிவனம், செங்கற்பட்டு முதலிய இடங்களிலிருந்து இவ்வூருக்கருகாமையில் பஸ்கள் போகின்றன. ஊரில் ஒரு சத்திரமும் இருக்கிறது.

தெற்கு வடக்காக இருக்கும் அச்சிறுபாக்கம் மலையின் தென்கோடியில் சிறு குன்றின்மேல் குமரன் கோயில் இருக்கிறது. தொழுப்பேடு புகை வண்டி நிலையத்திலிருந்து செல்லும்போது கோயில் நன்றாகத் தெரியும். கோயில் சிறிதாக இருந்தபோதிலும் அழகான காட்சியளிக்கிறது. குன்றின் உயரம் 100 அடி இருக்கும். மேலே செல்ல தென்கிழக்கு மூலையில் பழைய படிகள் இருக்கின்றன. தென்புறம் தொடங்கி மலைக்கோயிலின் மேற்கு வாயிலைச் சேரும் புதிதாய்த் திருப்பணி செய்த படிகள் 220 இருக்கின்றன.

புதுப்படிகள் ஏறத்தொடங்குமிடத்தில் ஒரு திருக்குளம் இருக்கிறது. அதற்கு மேற்கே ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. சுயம்புமூர்த்தியான இவரை **பாறைவிநாயகர்** என்றழைக்கின்றனர். பாறையிலேயே செதுக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் உண்டாயிற்று. தரைமட்டத்திலிருந்து பள்ளத்



மலைக்கோயில் தோற்றம்



சுப்பிரமணியர்—வள்ளி-தெய்வயானை

திலிருப்பதால் பாதாளவிநாயகர் என்றும் கூறுவர். இந்தக் கோயில் விமானம் அண்மையில் திருப்பணி செய்யப்பட்டு அழகாக விளங்குகிறது. படிகள் தொடங்குமிடத்தில் நவக்கிரகங்கள் இருக்கின்றன. மலைக் கோயிலில் கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன. கோயிலில் ஒரே பிரகாரம் தான். வடமேற்கு மூலையில் விநாயகர் சந்நிதி இருக்கிறது. மூலமூர்த்தியான அறுமுகக்கடவுள் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். ஆனால் அதற்குச்செல்ல வாயில் கிழக்குப்பக்கம் இருக்கிறது. தென்பிரகாரத்தில் கொடிமரம் இருக்கிறது. கர்ப்பக்கிரக விமானத்துக்கு இப்போது திருப்பணி நடந்து கொண்டு வருகிறது. அறுமுகப்பெருமான் மயில்மீதமர்ந்துள்ளார். இருபுறமும் வள்ளி தெய்வயானை இருக்கின்றனர். கோயிலில் இரண்டுகால பூசை நிகழ்கிறது. வைகாசி விசாகத்திலும்,மாதக்கிருத்திகைகளிலும்சிறப்பாக பூசை முதலியன நடைபெறுகின்றன. ஆண்டுக்கு இருமுறை சித்திரை மாதத்திலும் தை மாதத்திலும் அச்சிறுபாக்கத்திலிருந்து ஆட்சீசர் இங்கெழுந்தருளி அகத்திய முனிவருக்கும்சம்பந்தருக்கும்காட்சி கொடுக்கிறார். அங்கிருந்தே இவ்விரு தடவைகளிலும் மலையை வலம்வருகின்றார். முருகன் அகத்தியர்க்கு உபதேசித்தமையால் மலைமேல் தெற்கு நோக்கியிருக்கின்றார் என்று கூறுகின்றனர். அம்முனிவர் இவ்விடத்தில் பெரும்பேறு பெற்றதால் பெரும்பேறு என்ற பெயர் வந்ததென்று கூறுவாருமுண்டு.

நக்கீரர் 'அரும் பெறன் மரபிற் பெரும் பெயர் முருகன்' என்று கூறியிருப்பது இத்தலத்தைக்குறிக்கும் என்று கொள்வோரும் உண்டு. அருணகிரிநாதர் இத்தலத்து முருகன் மீது "நீலமயில் சேரும்" என்று தொடங்கும் திருப்புகழ்ப்பாடல் ஒன்றைப் பாடி இருக்கிறார். அதன் ஒரு பகுதி பின்வருவது:—

பீலிமயில் மீதுறைந்து
சூரர்தமை யேசெயங்கொள்
பேர்பெரிய வேல்கொள்செங்கை
முருகோனே
பேடைமட ஓதிமங்கள்
கூடிவிளையாடுகின்ற
பேறைநகர் வாழவந்த
பெருமாளே.

தலத்தின் பெயரைப் பேறைநகர் என்று அவர் குறிக்கிறார். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பெரும்பேறு என்ற தலைப்பில் 'திருவளர் பரங்கிரி' என்று தொடங்கும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். அதன் இறுதியில்

அருவளரு முள்ளத்து ளேயுணர்ந்து அருளுவா
யடியனென் றுன்புதபுத
ஆற்றுநின் பேருளத் துள்கா திருப்பினு
னாரிட முரைப்பனெந்தாய்
அயில்வேலு மாண்டலைத் துவசமு மலங்கவென்
னம்மைதெய் வானைவல்லி
அருகிருந் தருளமா மயிலுகைத்தெதிரில்வந்
தருள்பெரும் பேற்றுமுருகே

என்று கூறியிருக்கிறார். கடம்பன் சுவாமிகள் என்பார் 'பேறை நகரில் பிறங்கிடும் முருகா' என்று சொல்லியிருக்கிறார். மகான் வண்ணச்சரபம்—தண்டபாணி சுவாமிகள் என்ற திருப்புகழ்சுவாமிகள் "பிறந்தேக்கமுறும் வினையறுந்தீர்க்க நெறியருள் பெரும் பேற்றுமலை" என்று பாடியுள்ளார்.

வையை நதியின் வெள்ளத்தைத் தடுக்க அணைகட்ட எண்ணிய பாண்டியன் ஒருவன்

திரிநேத்திரதாரி என்பவரை வடநாடு சென்று காசி மிருத்திகையும் கெண்டுகாநதிச் சிலையும் கொண்டுவர அனுப்பினான். காசி மிருத்திகை என்பது கங்கைக் கரைமண். நேபாளத்தில் நதியில் உற்பத்தியாகும் சாளக்கிராமம் என்ற கற்களுக்கு கெண்டுகா நதிச்சிலை என்று பெயர். அவ்வாறே சென்று வண்டிகளில் ஏற்றிக் கொண்டு இந்த ஊர் அருகே வந்து சேர்ந்தார் திரிநேத்திரதாரி. இவிடம் தங்கி ஆன்மார்த்த பூசை செய்தார். அன்றிரவு இறைவன் கனவில் தோன்றி "நீ மதுரைக்கு வரவேண்டாம். நான் வையைக் கட்டச் செய்கிறேன். இங்கேயே உனக்கு மோட்சம் அளிக்கிறேன்," என்று கூறினார். அதைப் பொருட்படுத்தாமல் வண்டிகளைச் செலுத்த முயன்றார் திரிநேத்திரதாரி. சிவபெருமான் ஆணையின் வண்ணம் விநாயகப் பெருமான் வண்டி அச்சுகளை முறியும்படி செய்தார். காசி மிருத்திகையும் கெண்டுகா சிலையும் அப்படியே மலையாய் அமைந்து விட்டது. அச்சைமுறித்த விநாயகர்—பாறைவிநாயகர், பாதாளவிநாயகர் என்ற பெயர்களுடன் மலையடிவாரத்தில் எழுந்தருளியிருக்கிறார். அச்சிறுபாக்கம் சித்திரைப் பிரம்மோற்சவத்தில் ஏழாம் திருநாளில் கொன்றையடிசேவை என்று திருநேத்திரதாரிக்குக் காட்சி கொடுக்கும் ஐதிகம் நடைபெறுகிறது. பதினொராம் நாளில்தான் ஆட்சீசர் பெரும்பேற்றுக் கெழுந்தருள, முருகன் எதிர் கொண்டழைக்க இருவருமாக அகத்திய முனிவருக்கு காட்சிகொடுக்கின்றனர்.

சம்பந்தர் பெரும்பேற்றில் தங்கியிருந்ததாக ஒரு கதை வழங்குகிறது. 'பொன்றிரண்டன்ன' என்று தொடங்கும் பாடலில் "குன்றிரண்டன்ன" என்று கூறியிருப்பது இப்பெரும்பேறு குன்றையே குறிக்கும் என்றும் அதனால்தான் ஆண்டுதோறும் தைமாதத்தில் ஆட்சீசர் பெரும்பேற்றுக்கு எழுந்தருளி சம்பந்தருக்குக் காட்சி கொடுக்கும் விழா நடைபெறுகிறதென்றும் கூறுகின்றனர்.

மலைமேல் முருகன் கோயிலையன்றி இவ்வூரில் கைலாசநாதர் கோயில், எல்லையம்மன் கோயில், ஆதிகேசவப்பெருமாள் கோயில், தான்றோன்றீசர் கோயில் முதலியனவும் இருக்கின்றன. முதலிரண்டும் மலையடிவாரத்தின் அருகே இருக்கின்றன. பின் இரண்டும் ஊருக்குத் தென்மேற்கேயும் வடமேற்கேயும் இருக்கின்றன. கைலாசநாதர் கோயில் மிகவும் பழமையானது. அம்பிகை செண்பகவல்லி. ஆதிகேசவப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சேவைசாதிக்கிறார். மகாமண்டபத்தின் தென்புறம் கரிவரதராஜப் பெருமாளும், வடபுறம் சீனிவாசப்பெருமாள் ஆண்டாள் இவர்களும் காட்சியளிக்கின்றனர். தான்றோன்றீசர் கோயிலும் மிகப்பழமையானதே. அம்பிகையின் திருநாமம் தடுத்தாட்கொண்ட நாயகி என்பது.

தான்றோன்றீசர் கோயிலில் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பெரும்பேறு களத்தூர்க் கோட்டத்தைச் சார்ந்ததாகச் சொல்லப்படுகிறது. திரிபுவனநல்லூர் என்றபெயரும் அதற்கு உண்டு. அது மதுராந்தகம் சதுர்வேதி மங்கலத்தின் உள்கிராமம் என்று குறிக்கப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நிலதானம் வழங்கியதையும், மதுராந்தகம் சபையார் அந்த நிலத்தின் மேலுள்ள அந்தராயம், மகமை முதலியவைகளைத் தள்ளுபடி செய்ததாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் இராஜராஜசோழன் கல்வெட்டொன்றில் பெரும்பேறு ஸ்ரீகாரணீஸ்வரர் கோயில் விளக்குக்காக நாலு பசுக்கள் கொடுத்ததை அறிவிக்கிறது. மதுராந்தகச் சதுர்வேதி மங்கலச் சபையார் முதலாம் வீரராஜேந்திரன் (கி.பி. 1064-70) காலத்தில் கோயிலுக்கு நிலம் விட்டதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. மற்றும் இரு கல்வெட்டுக்கள், இரண்டாம் இராஜராஜன் காலத்தில் தகடூரைச்சார்ந்த ஒருவர் விளக்குக்காக நிலம் கொடுத்ததையும், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் விளக்குக்காகப் பத்து பசுக்கள் அளித்ததையும் கூறுகின்றன.

குன்றங்க டோறுநடமாடும் சண்முகக்
கோன் கரத்தின்
மின்றங்கி ஞாலெனத் தோன்றும் வைவேலினை
வேண்டு கில்லீர்
வன்றண்ட மொன்றெடுத் துப்பகடூர்ந்து
மறலிவரும்
அன்றங்கதனைத் தடுப்பதற் கேதுண்
டறைமின்களே

—திருப்புகழ்சுவாமிகள்.

## செய்திகள்

**திருப்பனந்தாள்:**—அருணஜடேசுவரசுவாமி கோயில் கோடைத்திருநாள் 10-4-62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**சிறுவரச்சூர்:**—மதுரகாளியம்மன் கோயிலில் மகோற்சவம் 8—5—62 முதல் 19—5—62 வரை நடைபெறும்.

**குறிச்சி:**—கோதண்டராமசுவாமி கோயிலில் ராமநவமி உற்சவம் 13—4—62 ல் நடைபெற்றது.

**அழகர்கோயில்:**—கள்ளழகர் கோயிலில் கோடைத்திருநாள் 15—4—62 முதல் 23—4—62 வரை நடைபெற்றது.

**தேரழுந்தூர்:**—வேதபுரீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**கரூர்:**—அபயப்ரதான ரங்கனுதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 22—4—62 வரை நடைபெற்றது.

**சென்னை-சிந்தாதிரிப்பேட்டை:**—ஆதிபுரீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 25—4—62 வரை நடைபெற்றது.

**எட்டிவயல்:**—பாலசுப்பிரமணியசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 16—4—62 முதல் 20—4—62 வரை நடைபெற்றது.

**தஞ்சை:**—பிரகதீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 2—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

**அம்பாசமுத்திரம்:**—காசிபநாதர் கோயிலில் பங்குனித் திருவிழா 5—4—62 முதல் 14—4—62 வரை நடைபெற்றது.

**அய்யம்பேட்டை திருச்சக்கரப்பள்ளி:**—சக்கரவாகேசுவரசுவாமி கோயிலில் விடையாற்றி விழா 15—4—62 ல் நடைபெற்றது. தஞ்சை உதவி ஆணையர் திரு. கே. கே. மேனன், பி. ஏ., பி. எல்., அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்கள்.

**பட்டீச்சரம்:**—கோதண்டராமசுவாமி கோயிலில் ராமநவமி விழா 13—4—62 ல் நடைபெற்றது.

**நாடிக்கொம்பு:**—சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் சித்திரா பௌர்ணமி விழா 19—4—62 முதல் 23—4—62 வரை நடைபெற்றது.

**சோழவல்லி:**— கைலாயநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 16—4—62 வரை நடைபெற்றது.

**உப்பிலியபாளையம்-கோயம்புத்தூர்:**—தண்டுமாரியம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 17—4—62 முதல் 27—4—62 வரை நடைபெற்றது.

**திருவிடைமருதூர்:**—மகாலிங்கசுவாமி கோயில் பிரசார சபை மண்டபத்தில் திரு. த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் கந்தபுராணபடனம் 14—4—62 முதல் பிரதி ஞாயிறு, திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணிக்கு நடத்தப் பெற்றுவருகிறது.

**சீகாழி:**—பிரமபுரீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—4—62 முதல் 22—4—62 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

**திருக்கோகர்ணம்:**—திருக்கோகர்ணேசுவரர் கோயிலில் சித்திரைப் பெருவிழா 10—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது.

உ

சிவமயம்

# மாணிக்கவாசகர் அருளிய பாடல்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன் ஓர்கைம் மாறே

*[எனது உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய எமது தலைவனே! திருப்பெருந்துறைப் பெருமானே! உன்னை எனக்குக் கொடுத்தாய். (அதற்குப் பதிலாக) என்னை நீ ஏற்றுக் கொண்டாய். சங்கரனே! நம் இருவரில் யார் திறமை யுடையவர்கள்? முடிவில்லாத பேரின்பத்தை நான் பெற்றேன்; நீ என்னிடத்தில் பெற்றுக்கொண்டது யாது? (எதுவுமில்லை.) அப்பனே! ஆண்டவனே! எனது உடலைக் கோயிலாகக் கொண்டவனே! இந்த அருட் செயலுக்கு உனக்கு அளிக்கக் கூடிய பதில் உதவி என்னிடம் ஒன்றுமில்லை.]*

---

## அடியவர் திருநட்சத்திரங்கள்


### சுபகிருது—வைகாசி

**சைவம்**


9உ திருஞானசம்பந்தர்
,, திருநீலகண்டயாழ்ப்பாணர்
,, முருகநாயனர்
,, திருநீலநக்கநாயனர்
18உ கழற்சிங்கநாயனர்
23உ நம்பி ஆண்டார் நம்பிகள்
24உ நமிநந்தியடிகள் நாயனர்
,, சேக்கிழார்
25உ சோமாசிமாற நாயனர்

**வைணவம்**

6உ நம்மாழ்வார்.



திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் தேவஸ்தான ஆதரவில் நடைபெறும்
பாஞ்சராத்திர ஆகமப் பள்ளியை அறநிலைய ஆணையர் துவக்கிவைத்தல் (16-2-62)



திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் தேவஸ்தான அலுவலகக் கட்டிடத்தை
ஆணையர் திறந்து வைத்தல் (16-2-62)

Edited and Published by the Commissioner, Hindu Religous and
Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.